# சுடர்வீ வேங்கை



புலவர் கா. கோவிந்தன்

பதிற்றுப்பத்து விளக்கம் எண் : 4 ஐந்தாம் பத்து

# சுடர்வீ வேங்கை

ஆசிரியர்:
புலவர். கா. கோவிந்தன்,
திருவத்திபுரம்.

வெளியீடு :
எழிலகம்
செய்யாறு 604 407.

எழிலகம் வெளியீடு : எண்: 6
முதற் பதிப்பு: மார்ச்சு 1990
உரிமை ஆசிரியர்க்கு.

விலை : ரூ. 10-00

கிடைக்குமிடம் :
**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்**
T. T. K. சாலை,
ஆள்வார்பேட்டை சென்னை-18.

அச்சிட்டோர் :
**துரை அச்சகம்,**
காஞ்சிபுரம்-631501.
தொலைபேசி எண் : 2631.

# பதிப்புரை

சங்கத் தமிழ்நூல்கள் என்ற சிறப்பினுக்கு உரிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்- தொகை வரிசையுல் நடுவண் வைத்து மதிக்கப்பெறுவது எட்டுத்தொகை; அது, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்களைக் கொண்டது. அவற்றுள் நான்காவதாகிய பதிற்றுப் பத்து, சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழ்நாடாண்ட மூவேந்தருள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர்குலக் காவலர் பதின்மர் ஒவ்வொரு- வரையும், பத்துப் பத்துப் பாக்களால், தனித்தனியாகப் பத்து புலவர்கள் பாடிய நூறுபாக்களைக் கொண்ட பெருநூலாகும்; அவற்றுள் இரண்டாம் பத்தும், பத்தாம் பத்தும் காணுமற் போகக், கிடைத்திருப்பன எட்டுப் பத்துக்களே.

அவற்றுள் இரண்டாம்பத்தில், இமயவரம்பன் நெடுஞ்- சேரலாதனைக், குமட்டூர் கண்ணனாரும், மூன்றும் பத்தில், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப், பாலைக் கௌதமனாரும், நான்காம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக்- காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம்பத்தில், செங், குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக், காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில், செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறையை, அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தில், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப், பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளனர். கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களையும், **பத்துப் பாட்டு விளக்கம்** என்ற வரிசையில், ஒவ்வொரு

பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப் படுத்தியுள்ளோம்.

அவற்றுள், ஐந்தாம் பத்தின் விளக்கம், **பதிற்றுப் பத்து விளக்கம்; வரிசை நான்கு** என்ற தலைப்பில், புலவர். கா. கோவிந்தன் அவர்களின் நூல், எம் வெளியீடாக வர ஒப்புதல் அளித்தமைக்குப், புலவர்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர்களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில், எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. 'இனிமையால் இயன்ற இளமகளிர்' என்ற பொருள் பட வந்த "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற தொடரில் வரும் "தமிழ்" என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக்கூறித், தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடைய வாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினுர்கள்' அவ்வாறே உரைத்தும் வந்தார்கள்; செந்தமிழ் இலக்கி-யங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்ருர் ஒரு பெரியார். தமிழர்வாக்கு இனிமை வாய்ந்தது என்ருல், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப், பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும், படப்பிடிப்பினைக்காணும் வாய்ப்பினைப் பெற்ருர் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம்பெரும் மூதாதையர்தம் பண்பாட்டுப் பெருமையினை, இன்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்ருர்கள். ஆனுல், அவர்கள் பாடிச் சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக்,

காக்கத் தவறிவிட்டார்கள் விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் மூதாதையருள் விழிப்புணர்வோடு இருந்தவர்கள், அழிந்தனபோக அழியா திருந்த அப்பழம் பாக்களை எல்லாம், அரிதின்முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்று கூடி இருந்தும், இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள்வளம், அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை, அளவுகோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம்கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப் பட்ட காரணத்தால் அவ்வரிசையுள், முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, ''நற்றிணை விருந்து'' என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலைபெற்ற தாயினும், ''நல்ல குறுந்தொகை'' எனச்சிறக்கப் பெற்றதான குறுந்தொகையினைக், ''குறுந்தொகைக் கோவை'' என்ற தலைப்பிலும், ஆறாவது இடம் அளிக்கப் பெற்றதாயினும், ''கற்றறிந்தார் போற்றும் கலி'' என்ற சிறப்பினைப் பெற்றதான கலித்தொகையினைப், ''பாலைச் செல்வி'', ''குறிஞ்சிக்குமரி'', ''மருத நில மங்கை'', ''முல்லைக்கொடி'', ''நெற்தற் கன்னி'' என்ற ஐந்து தலைப்புக்களிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே அவ்வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என்

உள்ளம் விரும்பினாலும், சிலபல காரணங்களால், அவ் வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது; இப்போது, அவ்வரிசையுள் நான்காவதாக நிற்பதும், "ஒத்த பதிற்றுப் பத்து" என்ற பாட்டினைப் பெற்றிருப்பதுமாகிய பதிற்றுப் பத்தின் விளக்கத்தினை அளிக்க எண்ணினேன்; ஒவ்வொரு தொகுப்பிலும் பத்துப் பத்துப் பாக்களைக்கொண்ட, பதிற்றுப் பத்தில், முதல் தொகுப்பும், பத்தாம் தொகுப்பும் கிடைத்தில; ஆகவே எஞ்சியுள்ள எட்டு தொகுப்புகளின் விளக்கங்களையே அளிக்க முடிந்தது. அவ்வாறு அளிக்கும் நிலையில், ஒவ்வொரு பத்திலும் உள்ள, பத்துப் பத்துப் பாக்களையும் பயின்று, ஒவ்வொரு பாவிலும், அப்பாவிற்குப் பெருமை சேர்க்கும் சிறுதொடரை, அப்பாட்டின் தலைப்பாகக் கொடுத்து பெருமை செய்துள்ளார்கள் நம் பண்டைத் தமிழ்ச்சான்றோர்.

அவ்வாறு அவர்கள் சூட்டியிருக்கும் பெயர்களில், ஒவ்வொரு பத்தின் விளக்கத்திற்கு, அப்பத்தின் முதற் பாட்டிற்குச் சூட்டியிருக்கும் பெயரையே, அப்பத்துப் பாட்டின் விளக்கத்திற்குப் பெயர் சூட்டும் முறையினைப் பின்பற்றி, இவ் வைந்தாம் பத்தின் விளக்கத்திற்குச் "சுடர்வீ வேங்கை" என்ற பெயரைச் சூட்டியுள்ளேன். என் முன்னைய படைப்பு களுக்குத், தமிழகத்துப் பெரியார்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும் இவ்வரிசைக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப்பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி, என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத், துணை நிற்க வேண்டுகின்றேன்.

கா. கோவிந்தன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பாடிய புலவர் | 1 |
| பாட்டுடைத் தலைவன் | 5 |
| பாடற் பண்பு | 12 |
| பதிகம் | 19 |
| சுடர்வீ வேங்கை | 21 |
| தசும்பு துளங்கு இருக்கை | 33 |
| ஏறா ஏணி | 41 |
| நோய்தபு நோன் தொடை | 52 |
| ஊன்துவை அடிசில் | 60 |
| கரைவாய்ப் பருதி | 68 |
| நன்னுதல் விறலியர் | 74 |
| பேரெழில் வாழ்க்கை | 79 |
| செங்கை மறவர் | 88 |
| வெருவரு புனல்தார் | 93 |

# சுடர்வீ வேங்கை

## பாடிய புலவர் : பரணர்

"பாணன், பறையன், துடியன், கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை," என்பது புறநானூறு. தம் வாயிற்கண்வந்துநின்று, புகழ்பாடுவார்க்கு வாரிவழங்கும் வேந்தர்கள்மாட்டும், வேளிர்கள்மாட்டும் சென்று, பேரியாழ் சீறியாழ் இசைத்துப் பாடிப் பெறும் பரிசில் கொண்டு வாழும் வழக்காறுடையவர் பாணர். வள்ளல் பேகனைப் பாடிய பாக்களில், "சீறியாழ் செவ்வழி பண்ணி, யாழநின் கூார் எதிர் கானம் பாடினேம்" (புறம். 144), "களங்கனியன்ன கருங்-கோட்டுச் சீறியாழ் நயம்புரிந்துறையுநர் நடுங்கப்பண்ணி" (புறம்:145) என்றும், கடலோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பாடிய பாட்டில் "அரிக்குரல் தடாரி உருப்ப ஒற்றிப் பாடி வந்திசின்" (புறம்: 369) என்றும் பாடியுள்ளார் பரணர். ஆகவே பரணரும், பாணர் குடியில் வந்தவராவர்; ஒரு குடியில் பிறந்து சிறந்த நிலைபெற்றுவிட்ட ஒருவரின் இயற்பெயர் மறைந்துபோக, அவர் குடிப்பெயரே, இயற்பெயராக மாறி வழங்குவதும் உண்டு; சேக்கிழார், வெண்ணிக்குயத்தியார் என்ற பெயர்களைக்காண்க. அதுபோல் பாணர்குடியில் வந்து பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தமையால், பரணர், பாணர் என்றே அழைக்கப்பட்டார்; பரணர் என்பதில், பகரத்தின் நெடில் குறிக்கும் குறியீடாம் "ா", ஏடு எழுதியோரால் "ர" கரமாக மாற்றப்பட்டுவிடவே, பாணர் என்ற அப்பெயர், "பரணர்" என மாறி வழங்கலாயிற்று என்பர் சிலர்.

புரவலர்களைப் பாடிப் பரிசில் பெறும் புலவர்கள், பாடும் போது, பாடியும், ஆடியும் பரிசில் பெற்று வாழும் இரவலர்

களாம் பாணர், பொருநர், கூத்தர்களாகத், தங்களை உருவகப்படுத்திக் கொண்டு பாடுவது ஒரு மரபு. உழவர் குலத்தவர் என்பதை உணர்த்தும், கிழார் என்ற சிறப்பு அடையைத், தம்பெயரோடு இணைத்துக்கொண்டிருக்கும் புலவர் அரிசில்கிழார், பரணர் பாடிய அதே பேகனைப் பாடிய தம் பாட்டில், "சீறியாழ் செவ்வழிபண்ணி நின் வன்புல நன்னாடுபாட என்னை நயந்து" (புறம்: 146) என்றும், தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியரால், அந்தணர் குலத்தவர் என அறுதியிட்டு முடிவு செய்யப்பட்டவராய, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், ஆய்என்ற வள்ளலைப் பாடுங்கால், "வளைக்கை விறலி என் பின்னளாகப், பொன்-வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின், வரிநவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்பப், படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ், ஒல்கல் உள்ளமொடு ஒருபுடைத்தழீஇப் புகழ்சால் சிறப்பின் நின் நல்லிசை உள்ளி வந்தனென்" (புறம்: 135) என்றும், பரணர் பாடியது போலவே, யாழ்இசைத்து வந்து பாராட்டிய தாகப் பாடியிருப்பதுகாண்க. ஆகவே, பாணர் சீறியாழ் இசைத்தாகக் கூறுவதுகொண்டே அவர், பாணர் குடியில் வந்தவர் எனல் பொருந்தாது.

மேலும், பரணர் பெயர், பரணர் என்பதே; அவர் பெயர் பாணர் என்பதோ, அது ஏடு எழுதுவோரால் பரணர் எனத் திருந்திவிட்டது என்பதோ பொருந்தாது என்பதற்கான அகச்சான்று ஒன்றும் உளது. பரணர் காலத்தவராய ஔவையார், அதியமானைப் பாராட்டிய பாட்டு ஒன்றில், அவன் பரணராலும் பாராட்டப் பெற்ற பெருமைக்குரியவன் என்ற பொருள்படப் பாடிய

"பரணன் பாடினன் மற்கொல்; மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரணடு திகிரி ஏந்தியதோளே" (புறம்: 99)

என்ற பாட்டில் ''முரண் மிகு'', அரணடு'' என்ற சொற்களுக்கு ஏற்ற எதுகைத் தொடையாகப், ''பரணர்'' என்ற பெயரே பொருந்த ஆளப்பட்டிருப்பது காண்க. ஆக, பரணர் பெயர் பரணர் என்பதே ; அது பாணர் என்பதன் திரிபு அன்று எனத் தெளிக.

குடக்கோ நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் ஆகிய சேர அரசர்களையும், உருவபஃறேர் இளஞ்சேட் சென்னி, வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளி, கரிகாலன் ஆகிய சோழ அரசர்களையும், பசும்பூண் பாண்டியன் என்ற பாண்டிய மன்னனையும், ஆட்டன் அத்தி என்ற, சேர சோழ குலத் தம்பதியரையும், அதியமான், ஆய், ஓரி, காரி, நள்ளி, பேகன் ஆகிய வள்ளல்களையும், அகுதை, அன்னிமிஞிலி, எயினன், கட்டி, கணையன், தித்தன், திதியன், நன்னன், பாணன், பொருநன் போலும் குறுநிலத்தலைவர்களையும், அறிந்து, பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டியும், பழிக்கத் தக்கவர்களைப் பழித்தும் உள்ளார்; தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்திருந்த இவர்களை அறிந்திருந்த பரணர், அதுபோலவே, அவர்காலத்தில் பலரின் கருத்தை ஈர்த்தன வாகிய, வாகைப் பறந்தலை, வெண்ணிப் பறந்தலை, கூடற் பறந்தலை, பாழிப் பறந்தலை ஆகிய போர்க்கள நிகழ்ச்சிகளையும், காவிரியில் கழார்ப் பெருந்துறையில் நிகழ்ந்த நீர் விழாவில், ஆதிமந்தியின் கணவன் ஆட்டனத்தி, மறைந்து போனது, கரிகாற்பெருவளத்தான் வெண்ணியில் பெற்ற கன்னிப் போர் வெற்றி குறித்து, அழுந்தூரில் வெற்றி விழாக் கொண்டாடியது, தனக்கு உரிய நறுமாங்காயைத் தின்றாள் ஒருபெண் என்பதற்காக, அவள் தந்தை, அவள் நிறை பொன்தர முன்வந்தும், அது ஏற்காது அவளை, நன்னன், கொன்று பழி கொண்டது, பாழியில் பெரும்பொருள் ஈட்டி வைத்திருப்பது, தந்தையின் கண்ணைப் போக்கியு

கோசரைப், பழிவாங்க .... வஞ்சினம் கொண்ட அன்னிமிஞிலி என்பாளின் செய்கை, மனைவி கண்ணகியைப் பிரிந்து, நல்லூர்ப் பரத்தையோடு வாழ்ந்திருந்த பேகன் செயல் ஆகியவற்றையும் அறிந்து கூறியுள்ளார் பரணர்.

முதுபெரும் புலவராவார் ஔவையார் ; அதியமான் நெடுமான் அஞ்சியின் பெருமை பாராட்ட எண்ணிய அவர், "அஞ்சி, பரணரின் பாராட்டைப் பெற்றவன் நீ, ஆகவே பெரியவன் ... "பரணன் பாடினன் மற்கொல்" — எனக் கூறினர் என்ருல், பரணரின் பெருமைதான் என்னே !

# சுடர்வீ வேங்கை

## பாட்டுடைத் தலைவன்

தமிழ்நாடாண்ட, கடைச்சங்க கால மூவேந்தர் பலர் என்றாலும், சோழர்களில் கரிகாற் பெருவளத்தானும், பாண்டியர்களில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்-செழியனும்போல், சேரர்களில் தலைசிறந்து விளங்கினவன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனாவன். சேரருள் சிறந்-தவன் இவனே ஆதல்போல், அக்காலத் தமிழரசர் அனைவரினும், ஒருவகையால் சிறந்தவனும் இவனே ஆவன். தமிழ் அரசர் எவர்க்கும் இல்லாத தனிச்சிறப்பு, இச்செங் குட்டுவனுக்கு உண்டு. ''சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் வழங்கிய அநாதியான முதுமொழி தமிழ் ; கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய முதுகுடியிற் பிறந்தவர் தமிழர்; ஆரியரும், ஆங்கிலேயரும், பிற ஆசிய இனத்தாரும் நாகரிகம் அற்று, நாடோடிகளாய்த் திரிந்து வந்த அந்தக் காலத்திலேயே, நாகரிகம்பெற்று நாடாண்டு வந்த தமிழ்அரசர்'' எனப் பெருமைப்பட முடியுமே ஒழிய, அவர்கள், இத்துணை ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியவர்; அம்மரபு மன்னர்களுள் இன்னார், இன்ன காலத்தில் வாழ்ந்-திருந்தனர், என வரையறுத்துக் கூறத்தக்க வரலாற்றுச் சான்றுகள், தமிழகத்திற்கு இல்லை என்ற குறைபாட்டை நீக்கிய, முதல் தமிழ்அரசன், செங்குட்டுவன் ஒருவனே.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, வடநாட்டில் சிறப்பாக அரசாண்ட ஆந்திர அரச இனமாய், வடமொழியில் சதகர்னி என்றும், தமிழில் நூற்றுவர்கன்னர் என்றும் அழைக்கப்பெறும் ஓரினத்தில் பிறந்து, வடநாட்டு வரலாற்றுப்

பேராசிரியர் பலரானுமே, கி. பி. 166-196 ஆண்டுகளில் அரியணையில் வீற்றிருந்தான் என, ஒருமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்டவனுகிய, யக்ஞஸ்ரீ என்ற, நூற்றுவகன்னன் துணையால் கங்கையைக் கடந்து, இமயமலையில் கல்கொண்ட நிகழ்ச்சியாலும், இலங்கைச் சாஸனங்கள் பலவும், கி.பி.171 முதல் 193 வரை இலங்கையை ஆண்டவன் என, அழுத்தம் திருத்தமாக அறிவிக்கும், கயவாகு என்பானேடு நட்புறவு கொண்டு, அவனைக் கண்ணகிக்குத், தானெடுத்த விழாக்காண அழைத்திருந்தான் என்ற நிகழ்ச்சியாலும், தான் ஆட்சி மேற் கொண்டிருந்த கடைச்சங்ககாலம், கி. பி. முதல் இரு நூற் ருண்டுகளைச் சார்ந்ததாகும் என்பதை நிலைநாட்டி, காலம் காணமாட்டாமல் கிடந்த தமிழகவரலாற்றிற்குக், காலம் காட்டும் கருவியாய் அமைந்து சிறப்புற்ருன் செங்குட்டுவன்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், சோழன்மணக் கிள்ளியின் மகளாகிய நற்சோணையும் பெருந்தவம் பல புரிந்த-தன் பயனுய்க், காளைமீதுமர்ந்து காட்சி நல்கும் கண்ணுதற் கடவுளின் தண்ணருளால்வந்து பிறந்தவன், இச்செங் குட்டுவன். இவன், "மன்னர் மன்ன! நினக்குப்பின் நின் நாடாளும் நல்லூழ், நின்மக்கள் இருவருள் இளையோன் பாலே நன்கு அமைந்துள்ளது" என, நிமித்தகன் கூறினு ஞயினும், மூத்தோன் இருக்க இளையோன் முடிபுனைவது முறையாகாது என்பதால், முற்றவும் துறந்த முதறிவுடையா னும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கி அளித்தவ னுமாகிய, இளங்கோஅடிகளாரை இளையோனுகவும், "நம் அகனுடு அடைந்த பத்தினிக்கடவுளைப் பரசல் வேண்டும்" எனப், பத்தினி வழிபாட்டிற்கு வழி வகுத்தவனும், கணவன் கடமை மேற்கொண்டு பிரிந்துறையும் காலம், முப்பத்திரண்டு திங்கள் போலும் நீள்பெருங்காலமாயினும், ஊணும் உறக்கமும் ஒழித்து, அழகிய ஆடையும், அரிய அணியும்

அகற்றி வாழ்வதே நற்குடிப் பிறந்த நங்கையர்தம் நல்லியல்பாம் என்பதை, வாழ்ந்து காட்டிய விழுச்சிறப்புடையாளுமாகிய, இளங்கோ வேண்மாளை மனைவியாகவும் பெற்ற பெருமைக்கு உரியவன், இச்செங்குட்டுவன்.

செங்குட்டுவன், வெற்றி பல பெற்ற வேந்தனுவன். மாண்டு மாண்புற்ற தன் தாய் நற்சோணையின் படிமத்தைக் கங்கையில் நீராட்டக்கருதி வடநாடு சென்ற தன்னை, அக் கங்கைக்கரையில் வந்துஎதிர்த்த, ஆரிய அரசர் ஆயிரவரையும் தான் ஒருவனுகவே நின்று போராடி வெற்றி கொண்டான்.

தன் நண்பன் அறுகை என்பான், நாணித் தலைகவிழந்து நனிமிகச்சேயநாடு புகுந்து கரைந்துறையுமாறு பெருந் தோல்விபுறப் பண்ணிய, பழையன் மாறன்பால் பெருஞ்சினம் கொண்டு, அவனுக்குரிய மோகூர் அரணை முற்றி அழித்து, அவனுக்குத் துணைபுரியவந்த வேந்தர்களையும் வேளிர்களையும் வெற்றிகொண்டு, அவன் காவல் மரமாம் வேம்பினை வெட்டி, போர்முரசு பண்ணற்காம் சிறுசிறு துண்டுகளாக்கி, அவற்றை அவன் உரிமை மகளிர் முடிகளைந்து கொண்ட மயிர்திரித்து ஆக்கிய கயிற்றுல் பிணித்து, அவன் போர்க்களிறுகளைக் கொண்டே ஈர்த்துத், தன் ஊர்க்குக் கொணர்வித்த தறுகணுளன் அக்குட்டுவன்.

கடலிடைத்தீவுகளை வாழிடமாக் கொண்டு, சேரநாட்டுக் கடல் வாணிகம் சிறக்கப், பொன்னெடு வந்து கறியொடு மீளும், மேலைநாட்டு வங்கங்களை வழிமடக்கிக், கொள்ளையிட்டு வந்தனர் கடம்பர் என அறிந்து, போர்க்கலங்களால் அப்-பெருங்கடலைக் கடந்து, அக்கடம்பர்வாழ் தீவுகளை அடைந்து, அவர்களையும் கொன்று, அவர் காவல் மரமாம் கடம்பையும் வீழ்த்தி, அக்கடம்பர் குலத்தையே குலைத்து ஒழித்தான்,

தன் அம்மான் இறந்தானாக, அவனுக்கு உரிய சோணாட்டு அரியணையில், தன்அம்மான்சேய் அமரவொட்டாது கலாம் விளைத்த சோழர் குலத்து வந்தார் ஒன்பதின்மரையும், நேரிவாயில் எனும் இடத்தே எதிர்த்துப் போராடி, ஒருநாட் போரிலேயே வெற்றிகொண்டு உரியோனை அரியணையில் அமர்த்தி அருந்துணைபுரிந்தான்.

தன் நாட்டின் ஒரு பகுதியாகிய கொங்கு நாட்டினராகிய கொங்கர், சேரர்குலப் பகைவர்களாகிய சோழ பாண்டியரின் துணை தமக்குளது எனும் துணிவால், தனக்குப் பணிந்து கிடக்க மறுத்துத் தனியரசு வேட்கை யுடையராதல் கண்டு, அவர் தலைநகராம் கொடுகூரைத் தாக்கி, அவர்களையும், அவர்க்குத் துணைவந்த அப்பேரரசர் இருவர்களையும் வென்று, அவர்தம் வெற்றிக்கொடிகளையும் கைக்கொண்டு வாகை சூடினான்.

கண்ணகிக்குச் சிலை அமைக்கும் கல்லைப், பொதியமலை யில் கொண்டு, காவிரியில் நீராட்டிக் கொள்ளினும் இழுக் கில்லை ஆகவும், தன்போலும் பேரரசனுக்கு, அது பெருமைக் குரியதாகாது; இமயத்தே கல்கண்டு கங்கையில் நீராட்டிக் கொள்வதே தகவுடையதாம் என்ற உயர்ந்த நினைவாலும், வடவேந்தர் அனைவரும் ஒன்று திரண்ட, ஒரு திருமண நிகழ்ச்சியின்போது, ஆணவத்தால் அறிவிழந்து "இமயத்தே கொடிநாட்ட தமிழரசர் இவண் வந்தபோது, எம்போலும் பெருமன்னர் ஈண்டு இல்லை போலும்" என உரைத்துத் தமிழரசரை இழித்துப் பேசிய கனகவிசயர்க்குத், தமிழர் திறம் இத்தகைத்து என்பதைக் காட்ட வேண்டுவது தன் கடமை யாம் என்ற கடமையுணர்வாலும், பெரும்படையோடு வட நாடு சென்று, வஞ்சினம் உரைத்தவாறே, கனகவிசயரை வெற்றிகொண்டு, கண்ணகிசிலைக்கு எனக் கொண்ட கல்லை,

அவர் தலைமீதே வைத்துத் தமிழகம் அடைந்த தலைமைசால் சிறப்புடையவன் செங்குட்டுவன்.

இவைபோலும் பெரு வெற்றிகளேயல்லாமல், கடற்கரையைச் சார்ந்த, மலைநாட்டகத்ததாகிய வியலூர் எனும் இடத்திலும், தேவாரப் பெற்ற சோணாட்டுத் திருப்பதியாகிய இடும்பாவனம் எனும் இடத்திலும் பெற்ற வெற்றிகள் குறித்தும், புலவர்கள் இவனைப் பாராட்டியுள்ளனர்.

தமிழகத்து அரசுகளேயல்லாமல் வடபேரிமயம் வரைப் பரவிய வடநாட்டு வேந்தர்களும் வணங்கி, ஏவல் கேட்கப் பேரரசு செலுத்திய செங்குட்டுவன், அப்பெருநிலையால் செருக்குற்றுச் செங்கோல் முறையை மறந்தவனல்லன். கண்ணகிச் சிலம்பின் அகத்திடுபரலாம் மணிகண்டு, "பொன் செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்; மன்பதை காக்கும் தென்புலக்காவல் என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்" எனமொழிந்தவாறே மயங்கி வீழ்ந்து, உயிர்துறந்தான் மன்னவன் எனக், கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் கூறக் கேட்டதும், 'கோல் கொன்று குடிஅழித்த தன்குற்றம், தன்போலும் பிறபேரரசர் செவி சென்றுபுகாமுன்பே, வல்வினை வளைத்த கோலைத், தன் நல்லுயிர், நிமிர்த்துச் செங்கோலாக்குக என்பான்போல் உயிர்துறந்து உயர்ந்து விட்டான் பாண்டியன்' எனப் பாண்டியன் பெருமை பாராட்டியதோடு அமையாது, "மழை, தன்பெய்யும் தொழிலை மறப்பினும், மக்கள் மன்னனையே நோவர் ஆதலின், மழை பொய்ப்பினும் மன்னர்க்கே அச்சமாம்; உயிர்கள் வேறுபிற இயற்கையளிக்கும் இடையூறுகளால் வருந்தநேரினும், மக்கள் வேந்தனையே பழிப்பர்; ஆதலின் அவைகண்டும் அரசர் அஞ்சுதல் வேண்டும். குடிமக்கள்பால் மிகுஇறைபெற்றே அரசுநடத்த விரும்பின், அது

கொடுங்கோலாம் ஆதலின் அந்நிலைக்கும் அரசராவார் அஞ்சுதல் வேண்டும்; ஆகவே உலகாளும் அரசர் குடியில் பிறப்பார்க்குத், துன்பமல்லது இன்பவாழ்வு என்றும் இல்லை'' என, அரசியல் அமைப்பின் அடிப்படை இயல்பைப் படம்-பிடித்துக் காட்டுவதுபோல் கூறிய கூற்றாலும், அவன் கோலாட்சியின் நலம், குன்றில் ஏற்றிய விளக்கென நின்று விளங்குவது காண்க. அவன் ஆட்சி, அறத்தொடுபட்ட நல்லாட்சியாதல் கண்டு களிப்புற்றமையால் அன்றோ பாண்டிய நாட்டில், தன் கணவனை இழந்த கண்ணகி, தாங்கள் பிறந்த சோழநாடு, தங்கள் வாழ்வைக் குலைத்த வான்பழியுடையது என்ற கருத்துடைமையால், ஆங்குச் செல்லாது, சேரநாடு புகுந்தாளாகவும், ''அவள் பாண்டியன் இழைத்த பிழைக்கேற்ற தண்டம் அளிக்கும் தகுதியுடையாய் நீ என்பதால் அன்றோ, நின்பால் முறையிடுவாள் போல் நின்னாடு புகுந்தாள்—''கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை, இற்றெனக்காட்டி இறைக்கு உரைப்பனள்போல், தன்னாட்டு ஆங்கண் தனிமையிற் செல்லாள், நின்னாட்டு அகவயின் அடைந்தனள் நங்கை'' — எனக்கூறி, அவனைப் பாராட்டியுள்ளார் புலவர் சாத்தனார். மேலும், கண்ணகிச் சிலைக்காம் கல்கொணர்வான்வேண்டி வடநாடு நோக்கிப் படையொடு புறப்படும் நிலையில், ''வடதிசைப் போரில் வெற்றி கொள்ளாது, என்வாள் வறிதே மீளுமாயின், என்நாடு, பகைவர் வரவால் பாழுற்றுப் போவதற்கு மாறாகக், குடி கெடுக்கும் கொடுங்கோல் ஆட்சியால் பாழுற்றது எனப் பழிஉரை எழுதற்கு ஏதுவாம், கொடுங் கோல் செலுத்திய நெடும்பழியுடையேனாகுக'' என்று வழங்கிய வஞ்சின உரையாலும், நல்லாட்சி நயக்கும் அவன் உள்ளம் தெள்ளெனப் புலப்படுதல் உணர்க.

கோல்முறை நெறிகண்ட குட்டுவன், கண்ணுதற் கடவுளின் வண்ணச் சேவடியைத் தன் பொன்முடிமீதும்,

ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன் சேடத்தைத், தன் அணிமணித் தோள் மீதும் கொள்ளும் கடவுள் வழிபாடு உடையவனாகவும், கற்புடைத் தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் பிறிது இல்லை என்னும் உள்ளுணர்வு உடைமையால், கண்ணகி தேவியார்க்குக் கோயிலும் சிலையும் அமைத்து, தன் அருஞ்சிறையில் அடைபட்டிருந்த ஆரிய அரசர் முதலாம் பகையரசர் பலரையும் சிறைவீடு செய்தும், குடகக் கொங்கரும், மாளுவ வேந்தனும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் போலும் நட்பரசர்களை அழைத்தும், விழாக் கொண்டாடித், தமிழகத்தில் புதிய வழிபாட்டு நெறியைப் புகுத்திப் பெருமை கொண்டான்.

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரைத், தன் அரசவையில் பெரும் புலவராய்க் கொண்டமையால், சிலம்பு, மேகலை போலும் இருபெரும்காப்பிய நூல்கள் தோன்றத், தோன்றாத் துணைபுரிந்த செங்குட்டுவன், பெரும் புலவர் பரணர்பாலும் பேரன்பு உடையனாகி, தனக்குப்பின் சேரநாடு ஆளும் உரிமை வாய்ந்த தன்மகன் குட்டுவன் சேரலைக், கல்வி கேள்விகளில் வல்ல நல்லவனாக்கும், பெரும் பொறுப்போடு, வேழம் மலிந்தது மலைநாடு என்ற, தன் நாட்டின் பெருமைக்குத் துணைநிற்பதாய், வேழங்கள் மலிந்து விழுநிதி பயப்பதாய, உம்பற்காட்டு நாட்டின் வருவாயையும் வழங்கி, ஐந்தாம் பத்து எனும் தலைப்பின் கீழ்வரும், பாக்கள் பத்தினையும் பெற்றுப், பதிற்றுப் பத்து எனும் பெருநூல் உருவாக, வழி வகுத்து வான்புகழ் பெற்றான்.

# பாடற் பண்பு

பதிற்றுப்பத்துப் பாடல் தொகுப்பில், பரணர் பாடிய ஐந்தாம் பத்துப் பாக்களில் ஒரு பாட்டின் ஒரு சிறுவரி; அதிலும் அப்பாட்டின் ஈற்றுவரி, தமிழக வரலாற்று ஆசிரியர்கள்பலரும், தமிழகத்திற்குச் சூட்டியிருந்த பெரும்பழி ஒன்றை அறவே துடைத்தெறிந்து விட்டுப், புகழ் சூட்டிய பெருமையைத் தட்டிப் பறித்துக் கொண்டுளது.

இளந்திரையன் புகழ்பாடும் பெரும்பாணாற்றுப்படை என்ற சங்க காலப் பாட்டின் ஆசிரியர், கடியலூர் உருத்திரன் கண்ணனார், அவன் தலைநகர்க்குச் சூட்டிய பெயர் காஞ்சி, அல்லது காஞ்சீபுரம் என்பதன்று; மாறாகக், ''கச்சி'' என்பதே என வாதிட்டு, தம் கூற்றிற்குச் சான்றாகக், ''கச்சி யோனே கைவண் தோன்றல்'' (420) என்ற, அவர் பாடல் வரியைக் காட்டிவிட்டு, காஞ்சீபுரத்திற்குக், காஞ்சீபுரம் என்ற பெயரைச் சூட்டியவர், சங்க காலத்துக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே வந்து, அக்காஞ்சியில் குடியேறிய, வடமொழியாளர்கள் தாம், என, வரலாற்றுப் பேராசிரியர்-களெல்லாம் ஒருசேரக் கூறிவந்தனர்.

அவர்கள் கூற்று உண்மைக்கு மாறானது, சங்க இலக்கியங்களை மேலோட்டமாகக் கூடப் படிக்கத் தவறி-யதால் நேர்ந்த பிழை என்பதை, உணர்த்தி விட்டது அச்சிறுவரி.

சேரர் குலத்தவர்க்கு உரியதாய, அவர் நாட்டுக் கிழக்கு எல்லையாம் மலையில் தோன்றி, அச்சேரர்க்கு உரிய மேலைக் கடலில் சென்று சேர்வதும், ஆண்டுதோறும் சேரநாட்டு

மன்னர் உள்ளிட்ட மக்கள் எல்லாம், ஒன்று திரண்டு சென்று, புனலில் படிந்து ஆடியும், ஆற்றங்கரைக் கண்ணதாய பொழில்களில் வேனில் விழாக் கொண்டாடி இன்பம் துய்த்தும் மகிழப், புனலாட்டு விழா நிகழ்தற்கு இடமாகிய பெருமைமிகு ஆறு, அழகிய காஞ்சி ஆறு, எனக் காஞ்சி ஆற்றின் பெருமை பாடும், பரணர் பாட்டின் வரிகள் இவை:

"நின்மலைப் பிறந்து, நின் கடல் மண்டும்,
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவின்
பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமொடு உண்டு இனிது நுகரும்
தீம்புனல் ஆயம் ஆடும்
காஞ்சியம் பெருந்துறை".

...பதிற்றுப் பத்து: 48: 13-18.

இப்பாட்டின், ஈற்றடியில் இடம்பெற்றிருக்கும் "காஞ்சி" என்ற பெயர்ச் சொல், "காஞ்சி" என்ற பெயர், சங்ககாலத் தமிழர் அறிந்த பெயரே அல்லது, வாழ வந்த வடமொழி யாளர், சூட்டிய பெயர் அன்று; என்பதற்கான வலுவான அகச்சான்றாக நின்று, தமிழக உண்மை வரலாற்றிற்கு, உற்ற துணையாக, அமைந்த பெருமைக்குரியதாகி விட்டது.

செங்குட்டுவன், தன் அவை புகுந்து, தன்புகழ் விளங்கும் கூத்து ஆடித், தன்னையும், தன்நாட்டவரையும், மகிழ்ச்சியில் ஆழ்த்தும் கூத்தர் குழாத்திற்கு, வழங்கும் பரிசில் பொருள் களாம், எண்ணிலாக் குதிரைகள். தம் வெண்ணிறப் பிடரி-மயிர், மடிப்புண்டு மடிப்புண்டு அலையத், தலை நிமிர்ந்து, நிரை நிரையாக நடைபோட்டுச் செல்லும் காட்சிக்குக், கரிய பெரிய தெளிந்த கடலிடையே, வரிசை வரிசையாக ஓங்கி எழுந்து வெண்ணுரைதெரிக்கத் தலைமடிந்து ஓடிவரும் அலைக்காட்சியை உவமைகாட்டிபிருக்கும் நயம், உணர்ந்து பாராட்டற்குரியது.

''கோடியர் பெருங்கிளை வாழ, ஆடியல்
உளையவர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்.
...........................
மாயிரும் தெண்கடல் மலிதிரைப் பௌவத்து
வெண்தலைக் குரூஉப் பிசிர் உடையத்
தண் பல வரூஉம் புணரியிற் பலவே.''

—பதிற்றுப் பத்து: 42: 14-23

ஒப்பாரும், மிக்காரும் அல்லாதார்க்கு எதிராகப் படைக்கலம் ஏந்தல், பெருவீரர்க்குப் பெருமை சேர்ப்பதாகாது. தன்னொத்த வீரனையும், ஏன், தன்னினும் மிக்க வீரனையும் வெற்றி கொள்வதே வீரனுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

பகை நாட்டு நாற்படையுள், அலைஅலையாக அணி வகுத்துக் களம் புகுந்துவிட்ட யானைப்படையைத் தாக்கி அழிக்க வேண்டியது, களத்தில் நிற்கும் ஒரு வீரனின் கடமையாகவும், யானைப் படை, தன்னைக் கடந்து சென்று கொண்டிருக்கவும், அப்படையைக் கண்ணெடுத்தும் நோக்காமல், பகைப் படை வரிசையையே கண்கொட்டாமல் பார்த்திருந்தான் அவன். அவன் எதிர் நோக்கியிருந்த யானை, களம் புகுந்துவிட்டது. அது, அரசர்க்கெல்லாம் அரசனாய், வேந்தன் எனும் உயர்நிலைவாய்ந்த அரசர் குடியில் வந்த மாவீரன் ஊர்ந்து வரும் யானை அது; அதைக் கண்ணுற்றான் அவ்வீரன். அவ்வளவே, அய்யானையை நோக்கி விரைந்தான். கைவேல் எறிந்து வெற்றி கொண்டான். அத்தகுவீரன் ஒருவனை அறிந்து பாராட்டியுள்ளார் ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர். ''வேந்தூர் யானைக்கல்லது, ஏந்துவன் போலான், தன் இலங்குஇலை வேலே'' (புறம் : 301) என்ற அவர் பாட்டைக் காண்க.

அப்புறநானூற்றுப் பாடலுக்குக் குறைந்தது அன்று பதிற்றுப் பத்துப் பாடல். சேரன் செங்குட்டுவன் சந்தித்த போர்க்களங்களுள் ஒன்று. பகைநாட்டு மண்ணின் மீது ஆசை கொண்டு சென்றமையால், அப்பகைநாட்டு எல்லைக் கண் கண்ட போர்க்களமும் அன்று—பகைநாட்டான் ஒருவன், தன் நாட்டின்மீது ஆசை கொண்டு வந்தமையால், தன்நாட்டு எல்லைக்கண் கண்ட போர்க்களமும் அன்று. மாறாகத் தன்னிலும் ஆண்மையாளர் ஒருவரும் இலர்—அத்தகு ஆண்மையாளர் எவரேனும் இருப்பின், என்னோடு போரிட வருக, என அறை கூவல் விடுத்துவந்த வீரர்களைக் கொண்ட, பகைப்படை வரிசையை எதிர்கொண்ட போர்க்களம் அது.

அப்போர்க் களத்தில் செருக்கோடு நிற்கின்றான் செங்குட்டுவன் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன். என்னை எதிர்ப்பார் யாவரும் இலர், என்ற ஆணவம் கொண்டு களம் புகுவானை எதிர்த்து, அவன் ஆற்றலை அழிக்கக் களம்புகும் வீரர் அணியும் தும்பை மாலை அணிந்திருந்தான் அவ்வீரன்.

அந்நிலையில் பகைப் படைவீரர், களம்புகுந்து விட்டனர். அவர்கள் ஒவ்வொருவரையும் உற்று உற்று நோக்குகின்றான் இவ்வீரன். ஆனால் எதிர்க்க வாள் எடுக்கின்றான் இல்லை; இவ்வாறு புறக்கணித்துக் கொண்டே இருக்கும் அவன் கண்ணில் பட்டு விட்டான், ஒரு பகைநாட்டு வீரன். அவனை உற்று நோக்கினான் இவன். அவன் மார்பில், களம்பல கண்டு, மார்பில் பெற்ற விழுப்புண்கள் பல, வெள்ளியஊசி கொண்டு தைத்து மருந்திட்டமையால் ஆறப்பெற்ற, விழுப்புண் தழும்புகள் நிறைந்திருப்பதைக் கண்டான். அவ்வளவே, இவனே மாவீரன்—நான் எதிர்த்து அடக்கவல்ல தகுதி வாய்ந்த தறுகணாளன் என்பதை உணர்ந்து கொண்டான். அவ்வளவே அவன் மீது பாய்ந்து விட்டான் வீரன். அத்தகு

மாவீரர்களை வாழ்த்திப் பாராட்டும் வான்புகழைப் பெற்றுக் கொண்டுளது பதிற்றுப் பத்துப் பாட்டொன்று:

''நெடுவள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர் நேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர்.''

—பதிற்றுப்பத்து : 42 : 3-7

''கபில பரணர்'' என, இரு பெரும் புலவர்களையும் ஒருங்கிணைத்துப் பெருமை பாராட்டுவர் தமிழகத்து மக்கள். அதற்குக் காரணம், அவ்விருவரின் புலமை ஒருபடித்தானது' இவர் புலமை மிக்கதா? அவர் புலமை மிக்கதா என அறுதியிட்டுக் காணமாட்டா ஆழ்ந்த புலமை வாய்ந்தவர் இருவரும் என்பதே. கபிலர் எண்ணுவதையே, பரணர் எண்ணுவார்; பரணர் எண்ணியதையே, கபிலரும் எண்ணுவார்;

கபிலர் ஒரு காட்சியை காட்டினார்; அக்காட்சி இது; மழை இன்றி வறண்ட கொடும் பஞ்ச காலம், பல ஆண்டுகளைத் தொடர்ந்து நீண்டு வருகிறது. மலைபோல் உயர்ந்த கரைகளைக் கொண்ட குளங்கள் எல்லாம் வற்றி விட்டன. குளங்கள் நீர் வற்றிப்போனமையால், பறவைகள் வருகையை அக்குளங்கள் இழந்து விட்டன. மழை இன்மையால், உழவு நடை பெறவில்லை. நாட்டில் வறுமை வளர்ந்தது; மக்கள் வாடினர்; இவ்வாறு பஞ்சம் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு நாள், எங்கிருந்தோ பெருமழை வந்தது. பெய்த மழை நீரால் அப்பெருங்குளங்களெல்லாம் நிறைந்து விட்டன; நீர் நிறைந்து கிடக்கும் குளங்களை அந்நாட்டு மக்கள் கண்டனர். அந்நிலையில், அவர்களின் மன எழுச்சியினையும்,

மகிழ்ச்சியினையும் அளவிட்டுக் கூற முடியுமா: முடியாது: மகிழ்ச்சியால் மெய்ம்மறந்து நிற்கும் அம்மக்களைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் கபிலர்.

''நாடு வறங்கூர, நாஞ்சில் துஞ்சக்,
கோடை நீடிய பைதறு காலைக்,
குன்றுகண்டன்ன கோட்ட யாவையும்
சென்று சேக்கல்லாப் புள்ள; உள்ளில்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை''.

—அகநானூறு: 42.

பரணர், கபிலர்க்கு நிகரான புலமை நலம் வாய்க்கப் பெற்றவராயிற்றே! அதனால், பரணரும், கபிலர்கண்ட காட்சியைக் கண்டார்; தாம் கண்ட அக்காட்சி இன்பத்தை நமக்கும் காட்டியுள்ளார். அக்காட்சி இதோ:

செங்குட்டுவனைக் காணச் சேரநாடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இடையில், ஒரு காட்சியைக் கண்டார்; மழை இல்லை; அது இல்லாமையாய், மலைகள் வறண்டு காட்சி அளித்தன; அருவிகள் நீர் அற்றுப்போகவே, காண விரும்பினரல்லர்; இக்காட்சிக் கொடுமையால், கண்கலங்கச் சேரநாடு புகுந்தார் பரணர்: ஆங்கு அந்நாட்டிப் பேரியாறு பெருக்கெடுத்து ஓடுவதையும், நீர் பெற்ற உழவர் பென்னோர் பூட்டிப் பூரிப்பதையும், அதற்குத் துணைசெய்ய, வானம் இடித்து முழங்கிப் பொழிவதையும் கண்டார்; அப்பெருமழையில் நனையும் மகிழ்ச்சி மிகுதியால், கபிலர் காட்டிய காட்சிக்கு நிகரான காட்சியைக் காட்டிவிட்டார்.

"இரும்பணை திரங்கப், பெரும்பெயல் ஒளிப்பக்,
குன்றுவறங்கூரச், சுடர்சினம் திகழ,
அருவிஅற்ற பெருவறற் காலையும்,
அருஞ்செயல் பேராற்று இருங்கரை உடைத்துக்,
கடிஏர் பூட்டுநர், கடுக்கை மலைய,
வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்து
ஆர்கலி வானம் தளி சொறிந்து"

—பதிற்றுப் பத்து : 43.

இவ்வாறு, பா நலங்களைப் படி எடுத்துக்காட்டிக் கொண்டே சென்றால் ஏடு பெருகும் என்பது மட்டுமன்று; பாட்டில் படிந்து தாமேபயன்துய்க்கும். இன்ப நிலைக்கு இடையூறும் விளைத்துவிடும். ஆகவே, இந்த அளவோடு நிறுத்துகிறோம். பாட்டினுள் நுழையுங்கள் இனி.

# பதிகம்

வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச்,
சோழன் மணக்கிள்ளி ஈன்றமகன்,
கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானம் கணையிற் போகி,
ஆரிய அண்ணலை வீட்டிப், பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி,
இனம் தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வில் இடும்பிற் புறத்திறுத்து,
உறுபுலி அன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி,
அக்கரை நண்ணிக், கொடுகூர் எறிந்து,
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி,
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிரும் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி வெந்திறல்,
ஆராச் செருவிற் சோழர் குடிக்கு உரியோர்,
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறந்து இறுத்து
நிலச்செருவினாற்றலை யறுத்துக்
கெடவரும் தானையொடு
கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைக்
கரணமமைந்த காசறு செய்யுள்
பரணர் பாடினார் பத்துப்பாட்டு''.

அவைதாம், சுடர்வீ வேங்கை, தசும்பு துளங்கிருக்கை, எருவேணி, நோய்தபு நோன்தொடை, ஊன்துவை அடிசில், கரைவாய்ப் பருதி, நன்னுதல் விறலியர், பேரெழில் வாழ்க்கை, செங்கை மறவர், வெருவரு புனற்றுரர். இவை பாட்டின் பதிகம்.

பாடிப்பெற்ற பரிசில்: உம்பற்காட்டு வாரியையும், தன் மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்.

# 1. சுடர்வீ வேங்கை

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகனாய்ப்பிறந்து, வேங்கடம் குமரிகட்கு இடைப்பட்ட, தண்டமிழ் நாட்டுப் பேரரசர்களையேயல்லாமல் வேங்கடத்திற்கு அப்பாற்பட்ட அரசர்களையும் வெற்றி கொண்டதோடு அமையாமல், கடல் கடந்தும் சென்று, வெஞ்சமர் புரிந்து வெற்றி கொள்ளவல்ல விறல்மிக்கோனாய் வாழும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் அவைக்களப்புலவராய் அமர்ந்திருந்த பரணர், வெற்றிதரு புகழ்பால் சென்ற வேட்கையுடையனாய், ஓயாது மேற்கொள்ளும் போர் நிகழ்ச்சிகளையும், போரில்பெறும் பகையாளர் பெருஞ்செல்வம் அனைத்தையும், தன்னைப் பாடிவரும் பாணர் முதலாம் இரவலர்க்கே கொடுத்து உவக்கும் கொடைவளத்தையும், பலகால் கண்டு களித்த களிப்புமிகுதியால், அவனைப் பாவிடை வைத்துப் பாராட்ட விரும்பினார்.

பரணர், பாடிப் பரிசில் பெற்றுவாழும் வறுமை, வாழ்வினரேனும், ''பாட்டுடைத்தலைவர்பால், பிழை கண்டவிடத்து, அதுகாட்டி இடித்து உரைப்பின், பரிசில் பெறுவது இல்லாகும்; ஆகவே அப்பொல்லாங்கு நமக்கு வேண்டாம்; அவர்பால் எத்துணைப் பெரும்பிழை இருப்பினும், இருக்க! அது குறித்து யாம் கவலைகொள்வது வேண்டுவதின்று; நாம்வாழ, அன்னார், பெரும் பொருள் அளிக்கும் வகையில், அவரைப் பாராட்டுவதொன்றே நமது செயலாகுக'' என நினையும் சீரிலாச் சிந்தை உடையவரல்லர். ''பாட்டுடைத் தலைவர்பால் காணலாகும் பிழைநெறிகளை எடுத்துக் காட்டுவதே, எம்போலும் பெரும் புலவர்களின் பேரறமாதல் வேண்டும்; அவ்வறநெறியைக் கைக்கொள்வதால், தம் வருவாய்க்கு வாய்ப்பில்லாது போவதோடு எக்கேடுவரினும்

வருக! அது குறித்துக் கவலேம். கடமையிற்பிறழோம்'' என்னும் பேருள்ளம் வாய்க்கப் பெற்றவர். அதனால், செங்குட்டுவன், எக்காலமும் செருவேட்கையே யுடையனாதல் பொருது, இடித்துரைத்துத் திருத்த விரும்பினார். அதுகருதிய அவர், அதை அவன் உளம் உவக்கும் உரைகளால் உணர்த்த எண்ணியதன் பயனாய்ப், புதுமுறை ஒன்றை மேற்கொண்டார். பரிசில் பெற விரும்பிவரும் பாணன் ஒருவனைப் படைத்துக் கொண்டு, அவன் வாயிடைவைத்து உரைக்கும் அப்புதுமுறை மேற்கொண்டு, அவர் உரைப்பன இவை:

''களம் புகுந்தால் காண்போம் இவ்வெற்றியை'' என எடுக்கும் சூளுரை, இம்மி அளவும் பிழையா வகையில், பெரும் போர் புரியவல்ல படைமறவரே சேரநாட்டு நாற்படையுள் நிறைந்திருந்தமையால், சென்ற இடமெங்கும் வாகையே சூடி வந்தான் செங்குட்டுவன். மேலும், அவன் போர் முரசின் ஒலி, கேட்ட சேர நாட்டு வீரர் உள்ளத்தில், ஊக்கமும் உரமும் ஊற்றெழச் செய்யும் ஆற்றல் வாய்ந்த அருமையுடையது ஆதலின், அவன் வெற்றிப்புகழ் வானளாவப் பரந்திருந்தது. அத்தகு போர் மறவரும், போர் முரசும் படைத்திருந்தமை யால், முடியுடைப் பெருவேந்தர்களின், வெல்லற்கு அரிய தானை பெரும்படைகளையும், பலமுறை பாழ் செய்திருந்தான். அப்போர்களின் விளைவாக, அவன் அன்பைக் கவர்ந்த நண்புடையராய், நாடாளும் அரசர்கள், தம் அரச வாழ்வில் செம்மாந்திருக்க, அவன் சினத்தைப் பெற்ற சிறுமதியாள ராகிய சிற்றரசர்கள், உலக்கையால் இடிபடும் மிளகுகள் போல், அவன் படைவீரர்களின் படைக்கலங்களால் தாக்குண்டு, தறிக்கப்பட்ட தலையினராகித் தாழ்வுறுவா ராயினர். அதனால், போர்வீரர் எழுப்பும் ஆரவாரப் பேரொலி யும், போர்முரசுகளின் முழக்கொலியும் ஓயாது ஒலிப்பதும்,

இறந்து வீழ்ந்த வீரர்களுடையவும், வெங்கரிகள் உடையவும், பாயும் பரிகளுடையவுமாகிய உடல்களிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் செங்குருதி படிந்து கறைபடுவதும் ஆகிய போர்க்களத்தில், களத்தில் முன்னேறிக் கடும்போர் புரிவதே கருத்தாய் விரையும் காளையர் காதுகளில், படைத்தலைவர்கள் அவ்வப்போது விடுக்கும் ஏவற்கட்டளைகள், சொல்லுருவாய் வெளிப்படின், சென்றுபுக வாய்ப்பில்லை ஆதலின், அவற்றை அறிவிக்கும் குறிப்பொலிகளை, மாறிமாறி ஒலிக்கவல்ல போர் முரசொலி, ஆணைகளை அறிவித்து, வீரர்களை அதற்கேற்ப ஏவல்கொள்ளும், வெற்றிச்சிறப்பு வாய்ந்த போர்முரசு முழங்கும் போர்க்களங்களில், வென்று வாகை சூடிக் களவேள்விபுரியும் பெரும்புகழ், செங்குட்டுவனையே சென்று அடைவதாகும்.

வெற்றித் திருமகள், தன் பால் அத்துணைப் பேரன்பு பூண்டு தன்னைவிட்டுப் பிரியாது விரும்பி வீற்றிருப்பவளாகவும், செங்குட்டுவன் வெற்றி வேட்கை அந்த அளவோடு அமைதி உற்றிலது. அதனால், கடலிடைத் தீவுகளை வாழிடமாக் கொண்டு, சேரநாட்டுக் கடல்வாணிகம் செழிக்கவரும் வங்கங்களை, வழிமடக்கிக் கொள்ளையிட்டு ஊறுவிளைக்கும், கடம்பர் எனும் கடற் கொள்ளைக் கூட்டத்தவரை வெற்றிகொள்வான் வேண்டி, கடும்புயல் எழுங்கால், கடல்நீர் மலைபோலும் பேரலைகளாக மாறி, வெண்ணுரை தெறிக்கும் காட்சியைத், தன்கடற்படைக்கலங்களின் விரைந்த செலவு தோற்றுவிக்க, கடல்புகுந்து கடம்பர்களை வென்று அழித்து வீறுகொண்டான்.

இவ்வாறு காடும் மலையும் உள்ளிட்ட நிலவரை அனைத்தும், தன்தாள் நிழற்கீழ் வந்து தங்கிற்றாகவும், மேலும் போர் வெறியே மிகுந்து, கடல் கடந்தும் போய்ப் போரிடும்

செங்குட்டுவன் போர்ச்செயல், அவனுக்குப் பெரும் புகழும் பயப்பதாம் என்றாலும், அதனால், அவன் படை புகுந்த நாட்டின் மக்களும் மாக்களும் படும் அல்லல், சொல்லித் தொலையாதாம். ஆதலின் அவன் போர் வேட்கையைத் தணிவிக்க விரும்பினார் புலவர். விரும்பியபுலவர், போர் பற்றிய நினைப்பே நிலைத்து நிற்கும் நெஞ்சினனாய்க் காட்சி தரும் செங்குட்டுவன்பால் சென்று, வறிதே "போர் ஒழிக" என்று கூறினால், அச்சொல் அவன் காதுகளுள்சென்று புகாது. மேலும், அதுகேட்கும் அவன், "போரில் யான் பெறும் புகழ் கண்டு போற்றி, 'மேலும் மேலும் போர்க்களம் புகுந்து மேலும் மேலும் புகழ் பெருக்குவாயாக!' எனப் போற்ற வேண்டியவர் புலவர்கள். அவர்கள் அதுவிடுத்து, போர்க் களம் புகன்மின் என்கின்றனர் என்றால், அவர்களுக்கு யான் புகழ்பெறுவதில் விருப்பில்லைபோலும்" என்ற எண்ணம் உடையனாகித், தம்மை வெறுத்து ஒதுக்குவதும் கூடும் என அஞ்சினார். அதனால், அறிவுரை கூறும் நிலையில், புலவர் பெரிதும் விழிப்புடையவராகி, தன்நலம் பேணும் தகவுரையே தருகின்றனர் புலவர், என அவன் எண்ணும் வகையில், "வேந்தே! யாம் வாழ வேண்டின் நீ வாழ்தல் வேண்டும்; நீ வாழ வேண்டின், நின் இருதாள்களும் நோயின்றி நெடிது வாழ வேண்டும். மேலும் நின் தாள்கள், ஏனையோர் தாள்கள் போன்றன அல்ல, களம்பல புகுந்து கணக்கிலாப்புகழ் கொண்ட பெருமையுடைய; அவை, ஓயாது போர்க்களம் புகுந்து அலைந்தால், சிறிதே தளர்ந்து நோயுறுதலும் உண்டாம், அது நினைக்க நடுங்குகிறது எம் நெஞ்சம். அவை, சிறிது காலமேனும் அவ்வருத்தம் ஒழிந்து, அமைதி வாழ்வு வாழ, வழி வகுக்கும் வேட்கை, நின் உள்ளத்தில் எழுந்திலதோ? அவ்வேட்கை எழ வேண்டுகிறோம் யாம்" என்று கூறிப் போர்போக்கும் பொன்னுரைகளைப் பொருந்தக் கூறி முடித்தார்.

போரொழிப்பு உணர்ச்சியைச், செங்குட்டுவன் உள்ளத்தில் புகுத்த விரும்பிய புலவர், ஒருவரைப் பகைவராகக் கொள்வதும், நண்பராகக் கொள்வதும், கொள்வார்தம் கருத்து வேறுபாட்டின் விளைவேயல்லது வேறு அல்ல. விரும்பினால் பகைவரையும் நண்பராக நயக்கலாம்; வெறுத்-தால் நண்பரையும் பகைவராகக் கொள்ளலாம். பகையுணர்வு பிறந்துவிட்டால், பகைக்கத் தகாதவரையும் பகைக்க நேரிடும். அஞ்சத்தகாதவரைக் காணினும் அஞ்சநேரிடும்; அதன்பயனாய் அவர்க்குக் கேடுபுரிவதோடு, தாமும் அல்லலுக்கு உள்ளாக நேரிடும் என்ற உண்மை உணர்வை முதற்கண் ஊட்ட விரும்பினார். அதனால் செங்குட்டுவன் அவை அடைந்ததும், "வேந்தே! நின்னைக் காணும் ஆர்வம் உந்த, நின்னைக் கண்டு பாராட்டினால், பெரும் பொருட்பரிசில் பெறலாம் என்ற வேட்கை, பிடர்பிடித்துத் தள்ள, சேணொடும் நாட்டினின்றும் வருகின்றோம்; பேரியாழின் நரம்பாதற்குப் பொருந்தும் வகையில், முறுக்கப்பெற்று, இனிய இசையெழுப்பவல்ல நரம்புகளையும், வகைபெற வளைந்த தண்டினை-யும் உடைய எம்யாழை, ஏவல்இளையோர் சுமந்துவர, யாழ் எழுப்பும் இசைக்கு மேலும் இனிமை ஊட்டவல்ல, துணை இசைகளை எழுப்பும் முழா, ஒருகண்மாக்கிணை, பெருவங்கியம் முதலாம் வேறுபல இசைக்கருவிகளைக் கொண்ட மூட்டைகள், இருபாலும் தொங்கும் காவடிகளைச் சுமந்துவருவார், மலைக்-காட்டு வழியில், மரச்செறிவாலும் மலைச்சரிவாலும் இசைக் கருவிகளுக்கு இடையூறு நேராமை வேண்டி, வழியிடைக் கடவுள்களை வாழ்த்திவர, யாம் கடந்துவந்த வழிகள் ஒன்று இரண்டு அல; பற்பலவாம். வேந்தே! அவ்வழியிடைக் காட்சிகள், இயற்கை நலம் மிகுந்து இன்பம் ஊட்டுவது ஒருபாலாக, ஆங்கு நிகழும் வேறுசில நிகழ்ச்சிகள், வேதனை ஊட்டுவனவாம். எடுத்துக்காட்டிற்கு ஒன்று கூறக் கேட்பாயாக! எம் பின்வரும் இளையோர், கடவுளரை நினைந்து

வாழ்த்தும் வாழ்த்தொலிகள், காதுநிறைவிக்கும் இன்பம் ஊட்டுவனவாம். கருநிறம் காட்டும் மலைச்சாரிவில், பொன்னிறம் காட்டும் பூக்கள் மலர்ந்த வேங்கைமரம் வளர்ந்திருக்கும் காட்சி, காண்பவர் கண்களுக்கு விருந்தூட்டுவனவாய் விளங்குவது, காணும் எவரும், கழிபேரின்பமே கொள்வர். ஆனால் அவற்றை அவ்வியல்புடையவாகக் கொள்ளத் தவறிவிட்டது ஒரு களிறு. அதன் உள்ளத்தில் அச்சமும், அச்சம் ஈனும் பகையுணர்வுமே நிறைந்திருந்தமையால், இளையோரின் வாழ்த்தொலியைப், புலிக்கூட்டத்தின் உறுமுக்குரலாகக் கருதிவிட்டது. அதனால் அதன்கண்முன் காட்சி அளித்த வேங்கைமரம், வரிக்கோடுகள் மலிந்த தோலுடையதான வேங்கைமாவாகத் தோன்றிவிட்டது. தோன்றவே அஞ்சத்தகாத வேங்கை மரத்தைக்கண்டு, அஞ்சி நடுங்கி விட்டது; அச்சத்தை அடுத்து எழுவது பகையுணர்வேயாதலின், பகைக்க வேண்டாத, வேங்கை மரத்தைப் பகைத்தது. உடனே அதன்மீது பாய்ந்தது; காட்சி நலம் மிக்க அதன் கிளையை முறித்தது; அம்முறிவு, வேங்கையின் மீது கொண்ட வெற்றியாகத் தோன்றவே, அவ்வெற்றிக் களிப்பால், அக்கிளையைத், தன் தலையிற் சுமந்தவாறே, போரில் பகைவரைப் புறங்காட்டப்பண்ணி வெற்றிகண்ட நின்வீரர், தலையில் வாகைமாலை மணக்க, வாளும், தண்டும் ஏந்திய கையராய்த் தருக்கித்திரிவது போல், வெற்றிக் களிப்போடு காடெங்கும் திரிந்து அலைந்தது'' எனக்கூறினர்.

வழியிடைக்காட்சியை விளக்குவார்போல், போர் உணர்வின் பொருந்தாமையினைப் பொருத்தம்உற உணர்த்திய புலவர், ஒருவர் வாழ, ஒருவர் தாழும் இருவேறு நிலைஇடம் பெற்றிருக்கும், உலகியலே பகையுணர்விற்குக் காரணமாம் என்ற உண்மையை உணர்ந்திருந்தமையால், வாழ்வும் தாழ்வும் உலகியல்; ஆகவே, தாழ்ந்தவர் தம் தாழ்நிலைகண்டு

வருந்துவதோ, தம்மினும் உயர்ந்து வாழ்வார்பால் வெறுப் புணர்ச்சிக் கொள்வதோ வேண்டுவதில்லை என்பதையும் உணர்த்த வேண்டும் என்று எண்ணினர். அதனால் மீண்டும் தொடங்கி, "வேந்தே! யாம் கடந்து வந்தவழி, தொடக்கத்தி லிருந்து முடிவுகாறும் ஒரே சீரானதன்று; வளமும், வளம் இன்மையும், வனப்பும், வனப்பின்மையும் ஆகிய இருவேறு நிலைகளை மாறி மாறியே கொண்டுளது. ஓரிடத்தே மழை வளம் மிகுந்துள்ளமையால், சுரபுன்னை முதலாம் பல்வேறு மரவகைகள் செறிந்து தோன்றின; பிறிதோரிடத்தே, மழை வளம் மறுத்துவிட்டமையால், முளைவிட்ட சிறுமூங்கில் தாமும் உலர்ந்து உருவற்றுக் கிடந்தன. இவ்வாறு நல்லனவும் அல்லனவும் மாறிமாறிக் காட்டும் நெடுவழிகளைக் கடந்து வந்திருக்கும் யாம் வாழ, நின்தாள் வாழ வேண்டுகிறேம்; வேந்தே! முதற்கண் அதற்கு வழிவகுக்க வேண்டுகிறேம்" என்றுகூறி முடித்தார். அதுவே இது.

உலகில் நிலவும், எந்தப் பொருள் மீதும், நிகழும் எந்த நிகழ்ச்சி மீதும், பகையுணர்வு கொள்வது பொருந்தாது; கொள்வது பேதைமை என்பதே உண்மையாகவும், தம் தோற்றத்தால் பிறர்க்குப் பேரின்பம் பயக்கவல்ல பொருள்கள் மீது, பகையுணர்வு காட்டுவது பேதைமையினும் பேதைமையாம்; உலகில் அத்தகையார் சிலரும் உளர் என்றால் அவரை என்னென மதிப்பது, எனப் போர்வெறியின் இழி நிலையை உணர்த்தவந்த இச்செய்யுற்கண், அப்பொருட்பேறு சிறக்க நிற்பது; வேழம் கண்டு கடுஞ்சினம்கொண்டது, புலியை அன்று; வேங்கை மரத்தை; அதிலும் காண்பவர்க்கு இன்பம் தரும் காட்சியதாகும் கவின்மிகு மலர்களை நிறையக் கொண்ட வேங்கை மரத்தையே எனும் பொருள்தரும், **சுடர்வீ வேங்கை** என்ற தொடரே ஆதலின், இப்பாட்டிற்கு, அத்தொடரால் பெயரிட்டுப் பாராட்டுவோமாக!

‘புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய
வணர் அமை நல்யாழ் இளையர் பொறுப்பப்,
பண் அமை முழவும், பதலையும், பிறவும்
கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவில் தகைத்த துறைகூடு கலப்பையர்,
கைவல் இளையர் கடவுள் பழிச்ச,
மறப்புலிக் குரூஉக்குரல் செத்து, வயக்களிறு
வரைசேர்பு எழுந்த **சுடர்வீ வேங்கைப்**
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து, தன்
மாயிரும் சென்னி அணிபெற மிலைச்சிச்,
சேஎர் உற்ற செல்படை மறவர்,
தண்டுடை வலத்தர் போர் எதிர்ந்தாங்கு,
வழை அமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்,
மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம்
ஒன்று இரண்டு அல. பலகழிந்து, திண்தேர்,
வசையில் நெடுந்தகை! காண்கு வந்திசினே;
தாவல் உய்யுமோ ? மற்றே. தாவார்
வஞ்சினம் முடித்த ஒன்று மொழிமறவர்,
முரசுடைப்பெரும் சமத்து அரசு படக் கடந்து,
வெவ்வர் ஒச்சம் பெருகத், தெவ்வர்
மிளகுஎறி உலக்கையின் இருந்தலை இடித்து
வைகுஆர்ப்பு எழுந்த, மைபடு பரப்பில்,
எடுத்து ஏறு ஏய கடிப்புடை வியன்கண்
வலம்படு சீர்த்தி ஒருங்கு உடன் இயைந்து,
கால் உளைக் கடும்பிசிர் உடைய, வால் உளைக்
கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே.’’

**துறை : காட்சி வாழ்த்து.**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்.**
**தூக்கு : செந்தூக்கு.**
**பெயர் : சுடர்வீ வேங்கை.**

நெடுந்தகை ! (16) யாழ் இளையர் பொறுப்ப, இளையர் கடவுள் பழிச்ச, வயக்களிறு பிளிறும் அத்தம் கழிந்து, காண்கு வந்திசின். (1-16) மறவரும் முரசும் உடைய சமத்து, கடந்து, தலை இடித்து, சீர்த்தி இயைந்து, புரவி ஊர்ந்து, கடல் உழந்த தாள் (17-27) தாவல் உய்யுமோ? (17) என வினை முடிவு கொள்க.

இதன் பொருள்:- திண்தேர் வசை இல் நெடுந்தகை = திண்ணிய தேர்களையுடைய வசைஇலாப்புகழ் கொண்டமிக்க தகுதிப்பாடுடையவனே! புணர்புரி நரம்பின் = யாழ் நரம்பாகப் புணர்தற்கு ஏற்ப முறுக்கிய நரம்பிலிருந்து எழும். தீந் தொடை பழுனிய = இனிய இசையை எழுப்புவதாகிய; வணர் அமை நல்யாழ் = வளைந்த கோட்டினையுடைய நல்லயாழை. இளையர் பெறுப்ப = ஏவல் இளையர் தாங்கி வர. பண் அமை முழவும் = இசையொடு பொருந்துமாறு அமைத்த முழாவினை யும். பதலையும் - ஒருகண் மாக்கிணையினையும். பிறவும் = இவைபோலும் வேறு பல இசைக்கருவிகளையும். கண்ணறுத்து இயற்றிய தூம்பொடு = மூங்கிலில், கணுவை இடையிட்டு அறுத்துச் செய்யப்படும் பெருவங்கியம் என்னும் கருவியோடு. சுருக்கி = ஒருங்கே சேர்த்து. தகைத்த காவில் = ஒரு புறத்தே கட்டித் தொங்கவிடப் பெற்ற காவடியின் மறுபக்கத்தில். துறை கூடு கலப்பையர் = இசைத்துறைக்கு வேண்டிய பிறகருவிகள் எல்லாம் கூடின மூட்டையைச் சுமந்தவராய். கைவல் இளையர் = இசைத்துறையில் வல்ல இளையோர். கடவுள் பழிச்ச = செல்லும் வழியில் தமக்கும் தம்கருவிகட்கும் கேடு நேராவாறு காக்குமாறு கடவுளை வாழ்த்தி வர. மறப் புலி குழுக்குரல் செத்து = அவ்வாழ்த்தொலியை, மறவுணர்வு மிக்க புலிக்கூட்டத்தின் உறுமுக்குரலாகக் கருதி அஞ்சி. வயக்களிறு = வன்மை மிக்க ஆண்யானை. வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கை = மலைச்சாரலைச் சார்ந்து வளர்ந்து நிற்கும் =

பொன் போலும் நிறம் வீசும் பூக்கள் மலர்ந்த வேங்கை மரத்தை, வேங்கைப்புலியாகக் கருதி சினங்கொண்டு. பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து = பூவோடு கூடிய பெரியகிளையை முறித்துப் பிளந்து. தன் மாஇரும் சென்னி அணிபெற மிலைச்சி = தனது கரிய பெரிய தலைமீது அழகுபெற அணிந்துகொண்டு. சேர்உற்ற செல்படை மறவர் = ஒன்று திரண்டு பகைமேற் செல்லும் போர்வீரர்கள். தண்டுடை வலத்தர் = வலக்கையில் வாள் தண்டு முதலாம் படைக்கலம் ஏந்தி. போர் எதிர்ந்தாங்கு = போர் மேற்சென்று ஆரவாரித் தாற்போல. வழைஅமல் வியன்காடு சிலம்பப் பிளிறும், சுரபுன்னை மரங்கள் மலிந்த பெரிய காட்டிடமெல்லாம் எதிர் ஒலிக்குமாறு பிளிறும் கொடுமையுடைய. மழைபெயல் மாறிய கழை திரங்கு அத்தம் = மழை பெய்யும் தன் தொழில் மறந்து விட்டமையால் மூங்கில்களும் உலர்ந்து முறிந்து போகும் வழிகள். ஒன்று இரண்டு அல பல கடந்து = ஒன்று இரண்டு அல்ல, பற்பல வழிகளைக் கடந்து. காண்கு வந்திசின் = உன்னைக் காண்பதற்கு வந்தேன். தாவாத வஞ்சினம் முடித்த = உரைத்தசூளுரை ஒருசிறிதும் பிழையாவாறு செய்து காட்டிய. ஒன்றுமொழி மறவர் = எக்காலமும் வாய்மையே வழங்கும் மறவர்களையும். முரசு = முரசையும். உடைப்பெருஞ் சமத்து = உடைய பெரிய போரின் கண். அரசு படக்கடந்து = பகையரசர் அனைவரும் பட்டொழியுமாறுவென்று. வெவ்வர் ஒச்சம் பெருக = தாம் விரும்பும் நண்பரசர்கள் ஆக்கம் பெருமாறு. தெவ்வர் இருந்தலை மிளகு எறி உலக்கையின் இடித்து = பகையரசர்களின் பெரிய தலைகளை, மிளகைக் குற்றும் உலக்கைபோல் இடித்து. வைகு ஆர்ப்பு எழுந்த = இடையறுது ஒலிக்கும் அலை ஒலியே ஒலிக்கும். மைபடு பரப்பின் = கருநிறம் காட்டும் கடற்பரப்பு போலும். எடுத்தேறு ஏய கடிப்புஉடை வியன்கண் = படைக்கலங்களை எடுத்து எறிக என்பதுபோலும் ஆணைகளை அறிவிக்கும் போர்

முரசு முழங்கும் பரந்து அகன்ற போர்க்களத்தில். வலம்படு சீர்த்தி ஒருங்கு உடன் இயைந்து = வெற்றிதரும் விழுப்புகழை ஒருசேர உடனே பெற்று. வால்உளை = வெண்ணிறத் தலையாட்டம் அணிந்த. கடும்பரி ஊர்ந்த = விரைந்து பாயும் குதிரைமீது அமர்ந்து உலா வந்தனவும். கால் உளைக் கடும்பிசிர் உடைய = காற்றுல் அலைப்புண்டு சிறுசிறு திவலைகளாகமாறி உடைவதுபோல். படும் திரைப்பனிக்கடல் = ஓயாது ஒலிக்கும் அலைகளைக்கொண்ட குளிர்ந்த அக்கடலை. உழந்ததாள் = கலக்கி அழித்த நின் தாள்கள். தாவல் உய்யுமோ = அவைபோலும் போர்த்தளர்ச்சி ஒழித்து அமைதியுறுமோ? கூறுவாயாக, என்றவாறு.

கூத்தர், தம் கூத்தாடும் தொழிலுக்குத் துணைபுரியும் பல்வேறு இசைக் கருவிகளைச், செல்லுமிடமெல்லாம் உடன் கொண்டு செல்வர் என்பதையும், செல்வார், காட்டு வழியில், தமக்கும், தம் இசைக்கருவிகளுக்கும் ஊறுநேராவாறு, கடவுளை வழுத்திக் கொண்டே செல்வர் என்பதையும், கீழ்வரும் மலைபடுகடாம் வரிகள், உறுதிசெய்வது காண்க.

''திண்வார் விசித்த முழவொடு, ஆகுளி,
நுண்ணுருக்குற்ற விளங்கடர்ப் பாண்டில்,
மின்னிரும்பீலி அணிதழைக் கோட்டொடு,
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்,
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு,
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ,
நடுவுநின்றிசைக்கும் அரிக்குரல் தட்டை,
கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி,
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிய காய கலப்பையர்''

மலைபடுகடாம்; 3-13.

பொன்னிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும் வேங்கை மரத்தைக் காணும் களிறு, அதைப் புலி எனக்கொண்டு முறித்து அழிக்கும் என்பதை,

"உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு அதன் முதல் குத்திய மதயானை"

என்ற கலித்தொகை வரியும் [கலி: 38; 6-7] கூறுவது காண்க.

மழை பொய்த்த கடும் வறட்சிக்கு, மூங்கில் பசுமையற்று உலர்ந்து போதல் அறிகுறியாம் என்பதனைக் "கழைகாய்ந்து உலறிய வறங்கூர் நீளிடை" என்றபுறநானூற்று வரியும் [புறம்: 370: 9] உணர்த்துவது காண்க.

## 2. தசும்பு துளங்கு இருக்கை

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்", "கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்" என்ற அறிவியல் வாய்க்கப் பெற்றவன் செங்குட்டுவன். அதனால், தன் படையில் பணிபுரியும் வீரர்கள், எத்தன்மையராதல் வேண்டும்? என்ற தேர்ந்து தெளிதலையும், தக்கார் கிடைக்கப்-பெற்றால், தன்னைவிட்டு அகலும் நினைவே அவர்கள் உள்ளத்தில் என்றும் எழாதவாறு, அவர்களை எவ்வாறு ஓம்புதல் வேண்டும் என்ற, தெளிந்தார்ப் பேணும் திறலையும் நன்கு தெரிந்திருந்தான்.

வீரர்களாவார், தங்கள் வேந்தன் மாட்டு அயரா அன்புடையராதல் வேண்டும்; இரவு பகல் இருபோதும், அவன் நல்வாழ்விலேயே நாட்டம் உடையராதல் வேண்டும்; அவனையே அல்லாமல், அவனுக்கு உரியதானமாலை, கொடி, முரசு முதலியனவற்றையும் அவனாகவே மதித்து வழிபடும் வழிபாட்டுணர்ச்சி வாய்க்கப் பெற்றவராதல் வேண்டும். அவர்கள் அடிவைக்கும் அமர், எத்தகைய அருமையுடையதேனும், ஆங்கும் அவர்கள் வெற்றியே குறிக்கோளாய், வெஞ்சமர் புரிதல் வேண்டும். அவர்தம் கால்களில், வீரக்கழல் எக்காலமும் ஒலித்தவாறே இருத்தல் வேண்டும். போர்க்களத்தில் பாய்ந்துவரும் பகைவர் படைக்கலம் கண்டு பயந்து ஒதுங்காது, தம்வேந்தனை நோக்கி எறியும் வேற்படைகளையும் தம் மார்பில் ஏற்றுக்கொள்ளவும், அவற்றால் ஆம் புண்ணின் ஆழ்ச்சி கண்டு அயராது, மீன்தேடி உண்ணும் இயல்புடையதான சிச்சிலிப் பறவை, நீருள்பாயுங்கால், தன் நீண்ட அலகை, நீர் நோக்கித் தாழ்த்தியவாறே பாய்ந்து, மேலெழுங்கால், அலகை மேலே உயர்த்தியவாறே விரைந்து

எழும் காட்சியை நினைவூட்டுவதுபோல், கூரிய நீண்ட ஊசி உள்நுழைவதும், வெளிப்படுவதுமாக விரைந்து தொழில்பட, அப்புண்களைத் தைத்து மருந்திட்டு ஆற்றவும் அயரா, உரம் மிக்க உடலும் உள்ளமும் உடையராதல் வேண்டும்; அது மட்டும் அன்று; தம்மீது போர்தொடுத்துவரும் வீரர்களாயினும், தம்மால் போர்தொடுக்கப்பட்ட வீரர்களாயினும், அவர்களும் அத்தகையவரே ஆதல் வேண்டும்; அத்தகைய பெரு வீரரோடல்லது, அப்போர்ப் பண்புகளுள் ஒரு சிறிது குறைந்தாரோடு போர்புரிவது பொருந்தாது; அது தம் வீரத்திற்கு ஓர் இழுக்காம் எனும் விழுமிய உள்ளமும் வாய்க்கப் பெற்றவராதல் வேண்டும் என அறிந்து, அத்தகையாரையே தேர்ந்து படையமைத்திருந்தான்.

''தானை தலைமக்கள் இல்வழி இல்'' என்பது, படையமைப்பின் தலையாய விதியாகும். இதையும் செங்குட்டுவன் அறிவான். ஆற்றல்மிகு நாற்படையைப் பணிகொள்ளவல்ல தலைவன் பால், அவரைப் பணி கொள்ளவல்ல அவர்கள் அவனை மதிக்கவல்ல ஆற்றலும் திறமும் அமைந்திருத்தல் இன்றியமையாதது என உணர்ந்திருந்தமையால், அப்போர்ப் பண்புகள், படைத்தலைமை தாங்கும் தன்பால், தளர்ந்து விடாமை வேண்டிப் படைத்தலைமையைப் பிறர்பால் ஒப்படைத்து ஓய்வு கொண்டு விடாது, அதை அவனே மேற்கொண்டிருந்தான். பட்டத்து யானை மீது அமர்ந்து, போர்க்களம் புகுந்து விட்டால், அப்படைவீரரால் அழிக்க மாட்டாப் பகைவர்களும் அழிந்தே போவர். அத்துணை ஆற்றல் உடையவனாக, அவனும் விளங்கினான். அதனால், ஆற்றல்மிக்க பகைவர்களையும், அறவழி நின்றே அழித்து வெற்றி கண்டு வீறுபெற்று விளங்கினான்.

இவ்வாறு வெற்றிதரு வீரனாகவும், விழுமிய வீரர்களைப் பணி கொள்ளவல்லவனாகவும் விளங்கிய செங்குட்டுவன்,

படைவீரர்க்குத் தலைமை தாங்கும் தான், எவ்வளவுதான் ஆற்றல் மிகுந்தவனுயினும், அவர் துணையில்லாமல் தான் மட்டும் தனித்துக் களம் புகுவது இயலாதுஆதலின், தன் வெற்றிக்கும், வீர வாழ்விற்கும் அவரே காரணமாவர். ஆகவே, அவர்களை வளமார் வாழ்வில், மனம் நிறைப் பெரு வாழ்வில் வாழ்விக்க வேண்டுவது தன் இன்றியமையாக் கடமையாம் என்றும் அறிந்திருந்தான். அதனுல் அவர்க்கு மனம் மகிழ்வூட்ட என்றே, மது இல்லங்களை ஆங்காங்கே திறந்துவைத்திருந்தான். தனிமது சுவைதராது ஆதலின், அது உண்பார்க்கு உதவுக என, நாவின் சுவையை மிகுவிக்கும் இஞ்சியும், மனம் நிறைவூட்டும் மணம் தரு மலர்களும் கலந்து கட்டிய மாலை சூட்டப் பெற்ற குடங்களில் மதுவை ஊற்றி, அம்மது புளிப்பேறிப் பொங்கி வழிதற்கு ஏற்ப, அதைத் தாங்கிக்கிடக்கும் குடங்கள், தாமே ஆடியசையு மளவு புளிப்பேறப் பண்ணி, நீலமணியின் நிறம் பெறுமளவு வடித்து வடித்துத் தெளிவித்த அம்மதுவில், தனக்கென ஒரு சிறிதானும் வைத்துக்கொள்ளாது, அனைத்தையும் அவ்வீரர்க்கே வழங்கி வந்தான்.

அவ்வாறு, தன்வளம் பெருக்கும் விழுமிய துணைவராய தன்படை வீரர்களைப் பேணிப்புரக்கும் பெருங்கடமையைச் செய்துமுடித்த பின்னர், அவர்கள் துணைசெய்ய அமர்புரிந்து கொணர்ந்த, பகை நாட்டுக் குதிரைகள்போலும் பொருட் குவியலைத் தன் அரண்மனை வாயிற்கண் நின்று, ஆடியும் பாடியும், தன் புகழ்பரப்பும் கூத்தர் முதலாம் இரவலர்க்கு எடுத்து எடுத்து வழங்கினுன். அவ்வாறு வழங்கிய பொருள் களுள், அவன் கொடுத்த குதிரைகள் தாம் எவ்வளவு இருக்கும் என்பதை, எண்ணிப்பார்க்க முயன்றுர் பரணர். ஆனுல் அது அவரால் இயலவில்லை. அளித்த குதிரைகள் அத்துணைப் பலவாம். பாணரும், பொருநரும் கொண்டு செல்ல,

அவர்களைத் தொடர்ந்து, ஆடிஅசைந்து அழகு காட்டும் தலையாட்டம் அணிந்து, குதித்துக்குதித்து நடைபோட்டுச் செல்லும் அக்குதிரைக் காட்சி, கரிய பெரிய கடலில் காற்றுப் புகுந்து வீசும் போது, மலைபோல் எழுந்து மறுகணமே, வெண்ணுரை விரிக்கும் தலைமடங்கிச் சாய, வரிசைவரிசையாக வந்து கரைக்கண் மோதும் கடலலைகளை நினைவூட்ட, குதிரைகள், தம் நடை அழகால் மட்டுமல்லாமல், கணக்கிட்டு காண மாட்டாப் பெருக்கத்தாலும், அக்கடல் அலைகடளோடு முற்றிலும் ஒத்திருப்பக் கண்டு உளம் மகிழ்ந்தார்.

அவ்வாறு மகிழ்ந்து நின்றூர் உள்ளத்தில், அவர் கருத்தில் புகுந்த கடல் அலைக்காட்சி, செங்குட்டுவன் கடலிடையே பெற்ற பெருவெற்றியொன்றை நினைவூட்டி விட்டது. மாநிலத்து மக்கள் எல்லாம் 'என்னேஇவன் ஆற்றல்!' என எண்ணி வியக்குமாறு, மண்ணிடை மன்னர்கள் அனைவரையும் வெற்றி கொண்டு விட்டான் செங்குட்டுவன். அதனால், முன்னேறிச்சென்று போரிடற்காம் வாய்ப்பு, அவன் படை வீரர்க்கு இல்லையாயிற்று. ஆனால், போர் புரிந்து பழகிய அவர்களால் வாளாகிடப்பது இயலாது என்பதை அறிந்திருந்தமையால், முத்துப்படுமளவு முதிர்ந்து ஒளிவீசும் வெண் கோடுகளைக்கொண்ட களிறுகள் மீது அமர்ந்து, உலாவரும் உயர்நிலையினராகிய, பேரரசர்களும் சிற்றரசர்களுமாகிய, தன்னால் வெற்றி கொண்ட இம்மண்ணுள் மன்னர்கள், மீண்டும் படையேந்திவிடாது, என்றும் தன்னைப் பணிந்தே கிடக்கும் வகையில், வெற்றிகொண்ட நாடுகளைக்காக்கும் பொறுப்பினை அவர்பால் ஒப்படைத்தான் செங்குட்டுவன். அது பெற்ற அப்படை வீரர்கள், தேர் முதலாம் நால்வகைப் படையோடு நால்வேறு திசைகளிலும் சென்று, நாடு காவற் பணியை, நன்கு புரிந்து வந்தனர்

தன் நாட்டை, அவ்வாறு அழிக்கலாகா அரண்உடைய தாக ஆக்கிவிட்டமையால், நாடு காவல் பற்றிய கவலை ஒழியவே, செங்குட்டுவன் கருத்து, கடல் வாணிகத்திற்குக் கேடுபுரியும் கடற்கொள்ளைக் கூட்டத்தவர்மீது சென்றது. செல்லவே, ஒரு பெரும்படையோடு கடலைக்கடந்துபோய், அக்கடம்பரை வென்று அழித்தான். அன்று அக்கடலிடையே அவன் கொண்ட வெற்றியைக், கூத்தர்க்கு அவன் வழங்கும் கொடைப்பொருளாகிய குதிரைகளுக்கு உவமையாக, உள்ளம் இன்று உணர்த்திய கடல் அலைக்காட்சி நினைவூட்ட, நெஞ்சு நிறை மகிழ்வெய்தினர் புலவர். அம்மகிழ்ச்சியே உருவு-கொண்டு வந்ததுபோல், வந்து பிறந்தது ஒரு பாட்டு. அதுவே இது.

உண்பார்க்கு உறுசுவை தருமளவு புளிப்பேறிய உயர்ந்த மது என்பதை உணர்த்த விரும்பிய புலவர், அக் கருத்தை, மது நிறைந்திருக்கும் குடம், மது புளிப்பேறப் புளிப்பேறப், பொங்குவதால், தன்னை உண்டார் உடல், தானே உருகுவதுபோல் அசைந்தாடுவதாயிற்று என்று கூறுமுகத்-தான் எடுத்துரைத்திருக்கும் சிறப்பால், அப்பொருள் பொதிந்து கிடக்கும் **தசும்பு துளங்கு இருக்கை** என்ற தொடரால் அப்பாவிற்கும் பெயர் சூட்டியுள்ளனர் போலும்.

2\. "இரும் பனம் புடையல், ஈகை வான்கழல்,
மீன் தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி,
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர், நேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும! நன்னுதல் கணவ!
அண்ணல்யானை அடுபோர்க்குட்டுவ!

மைந்துடை நல்லமர்க் கடந்து வலம் தரீஇ;
இஞ்சி விராய பைந்தார் பூட்டிச்
சாந்து புறத்து எறிந்த **தசும்பு துளங்கு இருக்கைத்**
தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்
ஒம்பா ஈகையின் வண்மகிழ் சுரந்து,
கோடியர் பெருங்கிளை வாழ ஆடியல்
உளை அவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்,
மன்பதை மருள, அரசுபடக் கடந்து
முந்துவினை எதிர்வரப் பெறுதல் காணியர்
ஒளிறுநிலை உயர்மருப்பேந்திய களிறு ஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்த, நின்
தேரொடு சுற்றம் உலகுடன் மூய,
மாயிரு தெண்கடல் மலிதிரைப் பௌவத்து
வெண்தலைக் குரூஉப் பிசிர் உடையத்
தண்பல வருஉம் புணரியிற் பலவே.''

**துறை: செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம்: ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: தசும்பு துளங்கு இருக்கை**

பெரும! கணவ! குட்டுவ! வலம் தரீஇ, மகிழ்சுரந்து பொழிந்தவை எண்ணின், கடந்து காணியர், மன்னர் ஏத்த, நின் சுற்றம் மூய, நீ (பிறக்கோட்டிய) பௌவத்து புணரியிற் பல என மாறுக.

இதன் பொருள்:- இரும்பனம் புடையல்=கரியபனம் தோட்டினுல் ஆனமாலையும், ஈகை வான்கழல்=பொன்னுல் பண்ணிய சிறந்த வீரக்கழலும். மீன்தேர்கொட்பின்=மீனைப் பிடிக்கும் கருத்தால், சிரல் பனிக்கயம் மூழ்கி பெயர்ந்தென்ன

= மீன் கொத்திப்பறவை, குளிர்ந்த குளத்து நீருள் பாய்ந்து மூழ்கி மீண்டும் மேலே எழுங்காலத்து அதன் கூரிய வாயலகை ஒப்ப, நெடுவள்ஊசி = பலகால் தொழில்பட்டு வெண்ணிறம் பெற்ற நீண்ட ஊசி தைத்து ஆற்றிய. நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் = பெரிய புண்பரந்து ஆக்கிய வடு விளங்கும் மார்பினையும், அம்புசேர் உடம்பினர் = அம்புகள் பாய்ந்து ஆக்கிய புண்நிறை உடம்பினையும் உடையராகி, வந்து போர் தொடுத்தார் மீது அல்லது, பிற எளியார் மீது. தும்பை சூடாது மலைந்த மாட்சி = தும்பை சூடிப்போய்ப் போர் புரியாதே வெற்றிகொண்ட அன்னோர் பெரும = அத்தகு பெருமை வாய்ந்த பெருவீரர்களின் படைத்தலைவனே! நன்னுதல்கணவ = நுதல் அழகு வாய்ந்த நல்லாளாம் இளங்கோ வேண்மாளின் கணவனே! அண்ணல் யானை அடு போர் குட்டுவ = தலைமைசால் யானைப்படையினையும், பகை வரை அழிக்கும் போரே மேற்கொள்ளவல்ல செங்குட்டுவனே! மைந்துடை நல்லமர் கடந்து = பகைவரின் வலிஅழிந்து கெடுதற்குக் காரணமான நல்லபோர் பலபுரிந்து. வலம் தரீஇ = வெற்றியைத்தந்து இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டி = இஞ்சியும் பூவும் விரவித்தொடுத்த மாலை அணிந்து. சாந்து புறத்து எறிந்த தசும்பு = புறத்தே சந்தனம் பூசப்பெற்ற கட்குடங்கள். துளங்கு இருக்கை = அசைந்தவாறே இருக்கும் இடங்களில். தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம் = தீவிய சுவை மலிந்த கள்ளை, நீலமணி நிறம் உடையதாகுமாறு வடித்துக்கொண்ட தெளிவை. ஓம்பா ஈகையின் = தனக் கெனச் சிறிதும் வைத்துக்கொள்ளாது வழங்கும் இயல்பினால். வண் மகிழ்சுரந்து = வருவார்க்கெல்லாம் வயிறார வார்த்து. கோடியர் பெருங்கிளை வாழ = கூத்தரின் பெரிய சுற்றம் வாழ்வு பெறுமாறு. பொழிந்தவை = வழங்கிய. ஆடு இயல் உளை அவிர் கலிமா எண்ணின் = ஆடியசையும் இயல்புடைய தலையாட்டத்தால் அழகு பெற்ற குதிரைகளை எண்ணப்

புகுந்தால். மன்பதை மருள அரசு படக்கடந்து=மாநிலத்து மக்களெல்லாம் வியக்குமாறு பகையரசரை வென்று. முந்து வினை எதிர்வரப் பெறுதல் காணியர்=முன்னேறிச்செய்யும் போர் எதிர்வரப் பெறுவதைக் காணும் விழைவுடையராய், நின்தேரொடு சுற்றம்=தேர்ப்படை முதலாம் நாற்படை யோடு கூடிய உன் வீரர், ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து, மான மைந்தரோடு மன்னர் ஏத்த=மற மானம்மிக்க மறவர்களோடு கூடிய பகைமன்னர்கள், ஒளி வீசும் இயல்பினையுடைய தானஉயர்ந்த மருப்பு உடைய களிறு மீது அமர்ந்து வந்து நின்னைப்பணிந்து கிடக்குமாறு. உலகுடன்மூய=நின் ஆணை செல்லும் உலகமெல்லாம் பரந்து சென்று காவல் மேற்கொண்டிருக்க. மாயிரும் தெண்கடல்= நீ வென்று ஓட்டிய கரிய பெரிய குளிர்ந்த கடலின். மலி திரைப் பௌவத்து=அலைகள்மிக்க நீர்ப்பரப்பில். வெண்தலை குரூஉப்பிசிர் உடைய=வெண்ணுரையால் ஆன தலை, பல்வேறு நிறம் காட்டும் நீர்த்துளிகளாக உடைந்துகெடுமாறு. தண்பலவருஉம்=குளிர்ந்து பலவாய் வரும். புணரியிற்பல= அலைகளைக் காட்டிலும் அதிகமாம்.

# 3. ஏரு ஏணி

வஞ்சி மாநகரில், சேரர்கோ செங்குட்டுவன், பெருங் கோயிலில், அவன் உள்ளம் கவரும் நல்லோராய் வாழ்ந்திருந்த பரணர், நாள்தோறும் அரசவைக்குச் சென்று, ஆங்கு, அமைச்சர் ஆன்றோர் சூழ, அரியணையில் இருந்து, முறை வேண்டியும் குறை போக்கவும் வருவாரின் வேண்டுகோள் ஏற்று, வேண்டுவ புரிந்து அனுப்பும் செங் குட்டுவன் நாளோலக்கச் சிறப்பினைக் கண்டுகளித்து வருவா ராயினர்.

வளம் இன்மையால் வலுமைத்துயர் உற்று, தன்னை வந்தடையும் புலவர் பெருமக்களைச், செங்குட்டுவன் தன்னோடு உடன் இருத்தி, முதற்கண் அவரை உண்பித்துப் பின்னரே தான் உண்ணுவன். தம் ஆடல்பாடல்களால், தன்னையும் தன்னாட்டு மக்களையும் மகிழ்ச்சிப் பெருங்கடலுள் ஆழ்த்த வல்லாராகிய, பாணர் கூத்தர் போலும் இரவலர்க்குப், போதும் போதும் என அவர் கூறுமளவு பொன்னையும் பொருளையும் வாரி வாரி வழங்குவன். கேட்டார்ப் பிணிக்கும் பேரின்பம் பயக்கவல்ல இசைக்குரலை இயற்கையாகவே பெற்றிருக்கும் கின்னரப்பறவையைத், தம் இன்னிசையால் வெற்றி கொண்டு, யாழிசையோடு ஒன்றிப் பாட வல்ல விறலியர்காள் வருக! வந்து, விரும்பும் பிடியானைப் பரிசல் பெற்றுச் செல்க! ! எனக் கூவி அழைத்துக் கொடுப்பன்.

இவ்வாறு, தன்னை நாடி வந்தாரும், பாடி வந்தாரு மாகிய இரவலர்க்கு அவரவர் விரும்பும் பரிசளிப்பு நிகழ்ச்சி முடிவுற்ற பின்னர், அவர்க்கு அவ்வாறு வழங்கவும், வற்ருது பெருகவல்ல விழுநிதியைத் தான்அடையத், தனக்குத் துணை புரிபவராகிய தன் படைவீரரைப் பெருமை செய்வான்

தொடங்கி, வெற்றி பெறுவீரர் மட்டுமே சூடலாம் சிறப்புடைய தான வாகை மாலை, பகைவர்தம் பற்றற்கரிய பேரரண்களை முற்றிவளைத்துக் கைப்பற்றும் காளையர் மட்டுமே அணிதற் குரியதான உழிஞை மாலை, ஆகிய அவ்விரு மாலைகளிடேத்தே சென்ற வேட்கையுடையவராய்க், களம் புகுத்து, வெற்றியே குறிக்கோளாய் நின்று, பகைவர் அஞ்சி ஓடவல்ல வெஞ்சமர் புரிந்து வென்று, பகைநாட்டுப் பெருவளப் பொருள்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு வந்து குவிக்கும் வீரர்களைத் தேடி அழைத்து, அவர்க்கு அவர்தம், தொழிலுக்கு துணைபுரிய நல்ல கொல்களிறுகளைப் பரிசாக அளித்துப் பெருமை செய்வன்.

அது முடிந்த பின்னர், தாம் பிறந்த குலத்தின் பெருமையைக் குறிப்பதாகக் கருதும், கோல் தாங்கிய கையின ராய்ப் பேரூர் மன்றம் புகுந்து, 'வாழ்க எங்கோ மன்னர் பெருந்தகை!' என மாநகர் மன்னனை முதற்கண் வாழ்த்திப், பின்னர், அப்பேரூர்த் தெருக்களை, அவன் புகழ் பாடியவாறே கடந்துபோய், அரசன் பாடிகொண்டிருக்கும், போர்க்களம் அடைந்து, ஆங்கு அவன் பெறும் வெற்றிப் புகழ்பாடும் களவாழ்த்துக்களைக் கவினுற இசைக்கும், போர்க்களம் பாடிய புலவர்க்கு, அப்போரில் தான் கைப்பற்றிய பகைநாட்டுக் குதிரைகளுள், சிறந்தன சில நல்கி நயம் பாராட்டுவன்.

"அரசன் நாளோலக்கத்தில், இப்போது பரிசில் பெறுவார் இன்னார்; அவர் பெறும் பரிசில் இது; அடுத்து அவைபுகவேண்டுவார் இன்னார்; அன்னார் வருக!" என்ற செய்திகளை அறிவிக்கும் கொடைமுரசு ஓயாது முழங்க, முறை யாக அழைத்து, அவரவர்தம் தகுதிக்கும் செய்தொழில் திறத்திற்கும் ஏற்ற பரிசளிக்கும் அப்பெருவிழா முடிந்த பின்னர், அனைவரும் அட்டிற்சாலை அடைவர். ஆங்கு

அவர்கள் விரும்பியுண்ணும் இறைச்சியை, உண்பதற்கினிய உணவாக ஆக்குவான் எரித்த அடுப்பு, எரிந்து கொண்டே யிருக்க, ஆங்கிருந்து எழும்புகை, வானம் எங்கும் சென்று பரவும். மற்றெருபால் எறும்பு முதலாயின மொய்க்காமை வேண்டி, மூங்கிற்கழிகளால், முக்கோண நாற்கோண ஏணி உருவில் கோத்த, கோக்காலி எனும் உயர்ந்த அடைப்புகளுக் குள்ளே, அவை இடம் கொள்ளுமளவு பருத்துத் திரண்ட கள்குடங்கள் இருக்க, அவை நிறைந்து வழியுமாறு இனிய மதுவைக் கொண்டுவந்து ஊற்றும் ஏவல் இளையர், அதை உண்பார், உண்ண உண்ணக் குறையுந்தொறும் நிறை வித்தவாறே இருப்பர். அத்தகு அட்டிற்சாலையில், அவர்களை அமர்த்தி, விருந்துணவை வயிறுர வழங்கிய பின்னரே அவர்களை வழியனுப்புவன்.

செங்குட்டுவனின் இந்நாளோலக்க நலம் கண்டு பாராட்டிய புலவர், அந்நலம், அவன் பகைவரும் பாராட்டும் பெருமையுடையதாம்; அவரெல்லாம் அவனோடு பகையுடை யார் என்பது உண்மையே யென்றுலும், அவன்பால் பொதிந்து கிடக்கும் அந்நல்லியல்புகளின் பெருமை, அவரை யும் அறியாமல் அவனைப் பாராட்டப்பண்ணி விடுவதால், 'பகைவராம் நம் பாராட்டையும் பெறும் செங்குட்டுவன் பெருமைதான் என்னே!' என அவர்களும் வியந்து பாராட்டு-வர் என்பதறிந்து பெருமிதம் கொண்டார்.

பரணர் நாடுபல கண்டவர்; அந்நாடாளும் அரசர் எல்லாம் பண்டொரு காலத்தில், வருவார்க்கு வழங்கி வந்தனர் என்றுலும், இன்று அது செய்யமாட்டாது வளம் இழந்து கிடக்கின்றனர். அதனுல், அவர் அளித்த பொருள் பெற்று உயிர்பேணி வந்த பரிசிலர் எல்லாம், வாழும்வகை காணமாட்டாது வருந்துவாராயினர். ஆங்கெல்லாம் அத்தகு

இடர்ப்பாடு தலை விரித்தாடும் நேரத்தில், ஈண்டு, செங் குட்டுவன், வருவார் எவரையும் வறிதே அனுப்பாது, அனைவர்க்கும் வாரி வாரி வழங்குவதும், அவ்வாறு வழங்கற்-கேற்ற வளம்பெற்றுத் திகழ்வதும் கண்ணுற்ற புலவர்க்கு, வழியிடைக் கண்ட இருவேறு காட்சிகள் நினைவிற்கு வரவே, அவற்றின் வயமாகி விட்டார் சிறிது நேரம்.

பெருமூங்கிற் புதர்கள் எல்லாம் புலர்ந்து உலர்ந்து போகுமாறு, மழை, தன் பெய்யும் தொழிலை அறவே மறந்து விடவே, அக்கொடுமையோடு நில்லாது, ஞாயிறும் தம் வெம்மையெல்லாம் காட்டிக் காயத் தொடங்கிவிட்டமையால், மலைகளில், மரம் செடி கொடிகள் மட்டுமேயல்லாமல், பசும் புற்களும் உயிரிழந்து போயின. அத்தகைய கொடிய பெரிய வற்கடகம் ஆங்கு உண்டாக, சின்னம் சிறு அருவிகளையும் காணமாட்டாது கலங்கியவாறே அக்கொடுவழியைக் கடந்து வந்தபுலவர், சேரநாட்டிற்குப், பெருமை அளிக்கும் பேராற்றங் கரையை அடைந்ததும், வானத்தில் கார்மேகம் கொண்டல் கொண்டலாக எழ, இடி எக்காளம்இட, மின்னல் கண்ணொளி பறிக்க, திடுமெனப் பெருமழை பெய்ய, அவ்யாற்றின் இரு மருங்கும் அமைந்திருக்கும் மலைபோலும் பெருங்கரைகளில், ஆங்காங்கே உடைப்பெடுத்துக் கொள்ளுமாறு வெள்ளம் புரண்டு வழியும் காட்சியையும், புதுமழை பெய்யக்கண்டு பூரித்துப் பொன்னேர் பூட்டும் உழவர், தமக்கும் தம் உழு கருவிகட்டும் கொன்றைமலர் சூட்டிக்கொண்டு தொழில் தொடங்கும் காட்சியையும் கண்டார். அக்காட்சிநல நிறை-வோடு இவண் வந்தபுலவர், ஈண்டு நிகழும் இந்நிகழ்ச்சி களோடு, அவற்றை ஒப்பிட்டு நோக்கி உளம் மகிழ்ந்தார்.

இவ்வாறு வாரி வழங்கும் வள்ளல்பெருந்தகையாய் வாழ்வது, எல்லை சுருங்கிய சிறு நாடுடையார்க்கு ஆகாது;

சேரநாடும் தனக்கென வரையறுத்த, தன் பண்டை எல்லை யுடையதாகவே இருந்திருக்குமாயின், அந்நாடாளும் இவனு லும் இயலாது; ஆனால் இவன் அரியணை புகுந்ததும் அதன் எல்லையை எல்லையற்றதாகப் பெருக்கிவிட்டான். இன்று, வடபேரிமயமும் தென்தமிழ்க் குமரியுமல்லவோ, அவன்நாட்டு எல்லைகளாகிவிட்டன! அத்தகு பெருநாடு ஆளும்பேறு பெற் றமையால் அல்லவோ, இவனால் அவ்வாறு வரையாது வழங்கி வாழ முடிந்தது! என்று எண்ணி, இன்புற்று நின்ற புலவர் உள்ளத்தில், அவ்வடபேரிமயம் வாழ் மக்கள் நலமும், அவர்தம் மனநலமும் இடம்பெறவே, அவ்வகக்காட்சி இன்பத்துள் ஆழ்ந்து விட்டார்.

நீருண்ட கார்மேகம்போல் கருகருவென வளர்ந்திருக்கும் தம் கூந்தலோடு, கவரிமான் மயிர்கலந்து முடித்துக்கொண்ட கொண்டையால் கவின்பெற்ற காரிகை நல்லார், சிறந்த பல அணிகளால் தம்மை அழகு செய்துகொண்டு, ஆடிடம்புகுந்து ஊசலாடி உளம் களிந்திருக்குங்கால், ஆங்குக், காட்டுயானைக் கூட்டம் புகுந்தபோதும், அது கண்டு அஞ்சி ஓடிவிடாது, அக் கூட்டத்துள், தாம் விரும்புமாறு, புதியவாக வந்திருக்கும் பெண்யானைகள் எத்தனை என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வமே முன்னிற்க, அவற்றை எண்ணத்தொடங்கி, அவை, எண்ணிக்காணமாட்டா எண்ணுடையவாதல் அறிந்து மகிழும் எழிலே, அம்மலை மீது வீற்றிருக்கும் கண்ணுதற்பெரும் கடவுட்காட்சியினும், முந்துற்று நிற்க, அம்மகளிர் தம், அழகுத் திருவுருவை, அகக்கண்களால் முதற்கண் கண்டு, பின்னர், அம்மலையுறையும் அண்ணலை எண்ணி நெஞ்சுருகினர்.

உயர்ந்த இடத்தே உள்ள ஒரு பொருளை, எறிஎடுக்கத் துணை புரிவது ஏணி; ஆனால், மதுக்குடங்கள் வைத்தற்கு என அமைத்த கோக்காலி, முக்கோண, நாற்கோண வடிவுடைய

ஏணிபோல் அமைந்திருக்குமாயினும், அதன் அமைப்பு, ஏறத் துணைபுரிவதற்கு அல்லாமல், எறும்பு முதலாயின ஏருமை குறித்தே ஆக்கப்பட்டதாம்; ஆக, ஏணியின் தொழில்புரியா தாகவும், ஏணி எனும் பெயர் இட்டமைக்கு, ஓர் அமைதி காணும் நிலையால், **ஏரு ஏணி** எனப்பெயரிட்ட சிறப்பால், இப்பாட்டிற்கு அதுவே பெயராய் அமைந்தது.

3. ‘‘கவரி முச்சிக், கார் விரி கூந்தல்,
ஊசல் மேவல், சேய் இழை மகளிர்,
உரல்போல் பெருங்கால், இலங்கு வான் மருப்பின்,
பெருங்கை, மதமாப் புகுதரின், அவற்றுள்
விருந்தின் வீழ்பிடி எண்ணுமுறை பெறுஅக்,
கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை,
வடதிசை எல்லை இமயமாகத்,
தென்னங்குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த,
போரடுதானைப் பொலந்தார்க் குட்டுவ !
இரும்பணை திரங்கப் பெரும்பெயல் ஒளிப்பக்,
குன்று வரங்கூரச், சுடர்சினம் திகழ,
அருவி அற்ற பெருவறற் காலையும்,
அருஞ்செலல் பேராற்று இருங்கரை உடைத்துக்,
கடிஏர் பூட்டுநர் கடுக்கை மலைய,
வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல் சிறந்து
ஆர்கலி வானம் தளிசொரிந்தாங்கு,
உழவர் ஆர ஒம்பாது உண்டு,
நகைவர் ஆர நன்கலம் சிதறி
ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடுவிறலியர் பல்பிடி பெறுக !
துய்வீ வாகை நுண்கொடி உழிஞை

வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக!
மன்றம் படர்ந்து மறுகு சிறை புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே! என்றும்
இகல்வினை மேவலை ஆகலின், பகைவரும்
தாங்காது புகழ்ந்த, தூங்கு கொளை முழவின்,
தொலையாக் கற்ப! நின் நிலை கண்டிகுமே;
நிணம்சுடு புகையொடு கனல்சினம் தவிராது
நிரம்பு அகல்பு அறியா ஏறு ஏணி
நிறைந்து நெடிது இராத் தசும்பின் வயிரியர்
உண்டெனத் தவாஅக் கள்ளின்
வண்கை வேந்தே நின்கலி மகிழானே''.

**துறை : இயன்மொழி வாழ்த்து**
**வண்ணம் : ஒழுகுவண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : ஏறு ஏணி**

குட்டுவ! கற்ப! வேந்தே! நின்கலி மகிழான் நின்நிலை கண்டிகும் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

இதன் பொருள்: கவரிமுச்சி = கவரிமான் மயிர்கொண்டு முடித்த கொண்டையினையும், கார்விரி கூந்தல் = கார்மேகம் போல் கருத்த, அடர்ந்த கூந்தலையும், ஊசல் மேவல் = ஊசலாட்டு விளையாட்டின் மேல் சென்ற விருப்பத்தினையும், சேய் இழை மகளிர் = சிறந்த அணிகலன்களையும் உடைய மகளிர், உரல் போல் பெருங்கால் = உரல்போலும் பருத்த கால்களையும், இலங்கு வான் மருப்பு = ஒளிவீசும் வெண்ணிறத் தந்தங்களையும், பெருங்கை = நீண்ட பெரிய கையையும்,

மதமா் = மதத்தையும் உடைய பெரிய யானைக் கூட்டம், புகுதரின் = தாம் இருந்து விளையாடும் விளையாட்டகத்தே புகுமாயின், அவற்றுள் = அவ்யானைகளுள், விருந்தின் வீழ்பிடி = புதியவாய்ப் புகுந்த, தாம் விரும்பும் பிடியானைகளை, எண்ணு முறை பெறு = எண்ணிக்கை காண மாட்டா இயல்புடையதும், கடவுள் நிலைஇய = கண்ணுதற் கடவுள் கோயில் கொண்டிருப்பதும் ஆகிய. கல்ஓங்கு நெடுவரை இமயம் = கற்களால் உயர்ந்த பெருமலையாகிய இமயம். வடதிசை எல்லையாக = வடக்கெல்லையாக. தென்னங்குமரியொடு = குமரிக்கோடு தென் எல்லையாக. ஆயிடை அரசர் = அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நாடாண்டிருந்த அரசர்களின். முரசுடைப் பெரும் சமம் ததைய = முரசு முழங்கும் பெரும் போர்கெடவே. ஆர்ப்பெழ = வெற்றி ஆரவாரம் எழ விரைந்து. சொல் பல நாட்டை = அப்பகை அரசர்களின் பலரும் புகழ்ந்து பாராட்டும் பல நாடுகளையும். தொல் கவின் அழித்த = பழைய பேரழகு அழியப் பண்ணிய, போர் அடுதானை = போரில் எதிர்ப்படும் பகைவர்களையெல்லாம் அறவே அழிக்கவல்ல பெரிய படையையும், பொலந்தார் = பொன்னாலாம் மாலையினையும் உடைய. குட்டுவ = செங்குட்டுவனே! இரும்பணை திரங்க = பெரிய மூங்கிற் புதர்களெல்லாம் வாடி உலர்ந்து போகுமாறு. பெரும் பெயல் ஒளிப்ப = பெரிய மழை பெய்யாது பொய்த்தலாலும், குன்றுவறம் கூர = மலைகள் மரம் செடி கொடிகளாம் தம் செல்வங்களை இழந்துபோகுமாறு. சுடர் சினம் திகழ = ஞாயிற்றின் வெயில் வெப்பம் மிகுந்து விட்டமையாலும். அருவி அற்ற பெருவறற் காலையும் = சின்னஞ்சிறு அருவிகளும் நீரோட்டம் இழந்துவிட்ட பெரிய வறுமைக்காலத்திலும். அருஞ்செலல் பேராற்று = கடந்து போதற்கரிய வெள்ளப் பெருக்கினை உடைய பேராற்றினது, இருங்கரை உடைத்து = பெரியகரைகள் உடைப்பெடுத்துப் போகுமாறும். கடிஏர் பூட்டுநர் = பொன்னேர் பூட்டும் உழவர். கடுக்கை மலைய =

கொன்றை மலர் சூடித் தம் தொழிலைத் தொடங்கு மாறும். ஆர்கலி வானம்=பேரிடிகளோடு கூடிய மேகம். வரைவில் அதிர்சிலை முழங்கி=எண்ணற்ற இடிகளை இடித்தவாறே. பெயல் சிறந்து=பெய்யும் தொழிலில் மிகுந்து. தளி சொரிந்தாங்கு=பெரு மழைநீரைத் தாரைதாரையாகச் சொரிந்தது போல. உறுவர்ஆர ஒம்பாது உண்டு - தன்னை வந்தடையும் புலவர்கள் நிறைய உண்ணுதற் பொருட்டுத் தனக்கென எதையும் வரைந்து கொள்ளாது அனைத்தையும் அவர்க்கே வழங்கி எஞ்சியதை மட்டுமே உண்டு. நகைவர் ஆர நன்கலம் சிதறி= ஆடல் பாடல்களால் தன்னை இன்புறுத்தும் பாணர், பொருநர், கூத்தர் போலும் இரவலர் நிறைவாழ்வுபெற நல்ல பல பொற்கலங்களை வாரி வழங்கி. ஆடுசிறை அறுத்த=ஆடும் சிறகுகளை உடையதான கின்னரம் என்னும் இசைப்பறவையைத் தம் இன்னிசையால் வென்றவரும். நரம்புசேர் இன்குரல்=யாழ் நரம்புகளோடு ஒன்றி இயைந்து செல்லும் இனிய குரல் அமையப் பெற்றவரும். பாடு விறலியர்=பாடவல்லவரும் ஆகிய விறலியர். பல்பிடி பெறுக=பற்பல பிடியானைகளைப் பரிசிலாகப் பெறுவார்களாக என்றும். துய்வீ வாகை=வென்ற வீரர் மட்டுமே அணியலாகும் வாகை மலர்மாலையும். நுண்கொடி உழிஞையும்= பகைவர்தம் பற்றற்கரிய அரண்களை வென்று கைப்பற்றும் வீரர்கள் மட்டுமே அணியலாகும் நுண்ணிய உழிஞைக் கொடியும் உடையராய். வென்றி மேவல்=என்றும் வெற்றியே விரும்பும் உருகெழு சிறப்பின்= பகைவர்க்கு நடுக்கத்தைத் தரும் தருகணுண்மைமிக்க. கொண்டி மள்ளர்=பகை நாட்டுச் செல்வங்களைக் கொள்ளையிட்டுக் கொண்டுவந்து குவிக்கும் வீரர்கள். கொல் களிறு பெறுக=கொல்லும் களிறுகளையே பரிசிற் பொருளாகப் பெறுவார்களாக என்றும். மன்றம் படர்ந்து=ஊர் மன்றங்களில் இருந்தும். மறுகு சிறைபுக்கு=தெருக்களில் இருமருங்கிலும் உள்ள வீட்டு வாயில்கள் தோறும் சென்றும். கண்டி

நுண்கோல் கொண்டு=தம் குலத்திற்கு உரியதான கணுக்களோடு கூடிய சிறிய கோல் ஏந்திய கையினராய், களம்பாடும்=அந்நாடாளும் அரசன் அமரிடைப் பெற்ற வெற்றியைப் பாடிப்பாராட்டும். அகவலன் பெறுக மாவே= பாணன் பரிசிலாக் குதிரைகளைப் பெறுவானாக என்றும். இகல்வினை மேவலை ஆகலின்=பரிசளிக்கும் நிலையிலும் போரினையே விரும்பும் உள்ளம் உடையையாய் இருத்தலின் பகைவரும் தாங்காது புகழ்ந்த=பகைவர் ஆயினும், தம் மனத்திடை எழுந்த வியப்பினைத் தாங்க மாட்டாது புகழ்ந்த பெருமையினையும். தூங்கு கொளை முழவின்=தூங்கல் ஓசைக்கு ஏற்ப முழங்கும் கொடை முதலாம் தொழில் உணர்த்தும் மும்முரசுகளையும். தொலையாக் கற்ப=அளந்து காணமாட்டாக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களையும் உடை-யவனே! கனல் சினம் தவிராது = நெருப்பின் வெப்பம் நீங்காது இருக்க. நிணம் சுடு புகையொடு=அந்நெருப்பில் நிணத்தைச் சுடுவதால் எழும் புகை மணத்தோடு. நிரம்பு அகல்பு அறியா = முழுதும் அடைத்துக் கொள்வதும், சிற்றே இடைவெளிவிடுவதும் இல்லாத. ஏருஏணி=கோக்-காலியின் மீது வைக்கப் பெற்றிருப்பதும். நிறைந்து நெடிது இராத்தசும்பின்=கள்ளால் நிறைந்து வழிவதும், ஆனால், அந்நிறைவுற்ற நிலை நெடும்பொழுது இருக்கப்பெறாததும் ஆகிய கட்குடங்களில் இட்டு வைத்திருக்கும். வயிரியர் உண்டெனத்தவாக் கள்ளின்=பாணர் முதலாம் இரவலர்கள் உண்டவழியும், குறையாது எக்காலமும் நிறைந்தே கிடக்கும் கள்ளினையும் உடைய. வண்கை வேந்தே = வாரிவழங்கும் வள்ளன்மையால் வனப்புற்ற கைகளை உடைய வேந்தே! நின் கலி மகிழான் = நின் திருவோலக்க நலத்தால். நின்நிலை கண்டிகும்=நின்பெருமை அனைத்தையும் அறிந்து கொண்டோம். என்றவாறு.

அரசர்கள் நாளோலக்க அவையில் அமர்ந்து, நாற்படை வீரர்க்கும், பாணர் முதலாம் இரவலர்க்கும் வரையாது வழங்குவதை வழக்கமாகக் கொள்வர் என்பதைப், பாண்டியன் நெடுஞ்செழியன்,

''வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங்கு எறுழ்த்தோள் மறவர் தம்மின்;
கல்இடித்து இயற்றிய விட்டுவாய்க் கிடங்கின்
நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின்''

என நிரலே, நாற்படை வீரர்களை அழைத்துச் சிறப்புச் செய்த பின்னர்,

''யாவரும் வருக! ஏனோரும் தம்மென
வரையா வாயில் செறாஅதிருந்து
பாணர் வருக! பாட்டியர் வருக!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக! என
இருங்கிளை புரக்கும், இரவலர்க் கெல்லாம்
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி''

எனப், பாணர் முதலாயினோரை அழைத்துப் பரிசில் அளித்துப் பெருமை செய்வன் என, மதுரைக்காஞ்சி கூறுவது காண்க. (728 - 752)

# 4. நோய்தபு நோன்தொடை

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவச் செம்மல்பால், சிறந்த பல பண்புகள் நிறைந்திருக்கக் கண்டார் பரணர். செங்குட்டுவன் சிறந்த வீரன்; வானத்துக் கருமேக மாசினைத், தம் வெற்றிக் கொடித்துகிலால் துடைப்பன போலும், நீண்ட பெரிய கொடிகள், வானளாவ உயர்ந்து பறக்க, விரைந்தோடும் தேர் முதலாம் நால்வகைப் படைகளை நிறையக் கொண்டு, நெடிது ஆண்டவர்களாகிய, வெல்லுதற்கரிய பெரிய பெரிய வேந்தர்களையும் எளிதில் வெற்றிகொண்டவன் அக்குட்டுவன். அத்தகு பேராற்றல் வாய்ந்த அவன், தன்பால் அத்துணை ஆற்றல் அமைந்திருப்பதால், காரணம் குறியாது, கண்ட அரசர் மீது போர்தொடுக்கும் அழிவுள்ளம் உடையவன் அல்லன். தனக்கோ, தன்னைச் சார்ந்தவர்க்கோ கேடு புரிந்த அரசர்களை அழித்தொழிக்கும் அறத்தொண்டிற்கு மட்டுமே, அவன் கொற்றம் தொழிற்படும்.

மோகூர் மன்னனும் பழையன் என்பான் பேராற்றல் வாய்ந்தவன். பாண்டியன் தலையாலங் கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியனின் படைத்தலைவனாய்ப் பணிபுரிந்தவன். கொற்றம் மிக்க கோசர் படைத்தலைவன். வடுகர் வழிகாட்டத் தமிழகத்தை வென்று பணிகொள்ளும் வேட்கையோடு வந்த, வடபேரரசராம் மௌரியரின், பெரும்படையைப் பாழாக்கித் துரத்திய பெருவீரன். அவன் அத்துணைப் பெரு வீரனாய் விளங்குவது காணப் பொருமையாலோ, அவனினும் தானே ஆற்றல் வாய்ந்தவன் என்பதை, வையகம் கண்டு வாழ்த்தவேண்டும் என்ற வெற்றிப்புகழ் வேட்கையாலோ, அறுகை எனும் ஆற்றல் மறவன் ஒருவன், மோகூர் அரணை முற்றி வளைத்துக்கொண்டான். ஆனால், பழையன் பெரும்படைமுன் நிற்கமாட்டாது தோற்றான். அதுகாறும், புக்க

போரில் எல்லாம் வெற்றியேகொண்டு, விறுபெற்ற அவனால் அத்தோல்விப் பயனும் பெரும் பழியைத் தாங்கிக் கொள்ள இயலாமையால் நாணி, தொலை நாடு சென்று, தலைமறைத்துக் கொண்டான்.

அறுகைக்கு நேர்ந்ததை அறிந்தான் செங்குட்டுவன்; அறுகை, அவன் ஆருயிர் நண்பன். அவன் சேணுடு சென்று விட்டானாயினும், அவனைப் பற்றிய பழிச்சொல், அவன் ஆருயிர் நண்பனாகிய தன்னை விட்டு அகலாது, தன்னையே சூழ்வது கண்டான். தான் தோற்றுப்பெற்ற பழியன்று; ஆயினும், அப்பழிக்குப் பெரிதும் நாணினான் செங்குட்டுவன். அதனால் அப்பழிவரக் காரணமாயிருந்த பழையன் மீது, பகை கொண்டான். விளைவு மோகூரான் அழிவல்லது வேறு ஆதல், இயலுமோ? குட்டுவன் படை புகுந்த மோகூர், முற்றிலும் அழிந்து விட்டது. இயற்கை அன்னையின் சீற்றத்தால் இடியேறு தாக்கியிருந்தாலும், எழுகடல் புகுந்திருந்தாலும், நிலவரையே பிளந்திருந்தாலும், இத்துணைக்கேடு நிகழ்ந்திருக்காது எனக் கூறிக், கலங்கத் தக்க பெருங்கேட்டிற்கு உள்ளாகி விட்டது அது. அதுமட்டுமன்று. "இன்னது விளையின் இன்னது செய்வேன்" எனச் சூள் உரைத்துக் களம் புகுந்து, உரைத்த உரை பொய்யாகாவாறு வென்று மீளவல்ல பழையன் பேராற்றல் எங்கோ சென்று அடங்கி விட்டது. அவன் வெற்றி முரசு, இவன் உடைமை ஆயிற்று. அம்மட்டோ! தன் உயிர் என மதித்து, அவன் வளர்த்து வந்த அவன் காவல் மரமாம் வேம்பினை வெட்டி வீழ்த்தினான். அதனாலும் செங்குட்டுவன் சினம் தணியாதாக, அதைப் போர்முரசு பண்ணற்காம் சிறு சிறு துண்டங்களாக்கினான். அத்துண்டங்களை அவன் உரிமைமகளிர் மயிர்களைந்து திரித்த கயிற்றைக்கொண்டு, பிணித்து, அப்பிணிப்பை அவன் போர்க்களிறுகளைக் கொண்டே ஈர்க்கப் பண்ணித்

தன்னேரில்லாத் தன்தலைநகராம் வஞ்சிமாநகர்க்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

அத்துணைக் கொற்றம்மிக்க அக்குட்டுவன்பால், கொடைக் குணமும் குறைவறக் குவிந்து கிடந்தது. அரிய போர்பல ஆற்றி, வெற்றிபல பெற்றதன் பயனாய், அவனை வந்தடையும் அளவிறந்த பொருள்களில் ஒருசிறிதையும் தன் உடைமை-யாக்கிக்கொள்ளும் உள்ளத்தைக் கைவிட்டு, அவ்வளவு பொருளையும் புலவர், பொருநர், பாணர், கூத்தர், விறலியர் போலும் இரவலர்களுக்கே வழங்கிவிடுவன்.

இவ்வாறு, நண்பர்பால் அன்பும், அவர் துயர்துடைக்கு மளவு பெருகிய ஆற்றலும், வருவார்க்கு வழங்கி அவர் வறுமை தீர்க்கும் அருள் உள்ளமும் உடையனே அல்லது, "என்னை வெற்றிகொண்டு விட்டான் இவ்வேந்தன்; அதனால் வந்துற்ற வெம்பழி வாட்டுகிறது என்னை, ஆற்றல்மிகு அரசர்காள்! அவனோடு போராடி வென்று, என்பழி தீர்க்கப் படைத்துணை அளியுங்கள்" எனப், பிற அரசர்பால் சென்று படைத்துனை வேண்டுமளவு ஆற்றல் அற்றவனோ, அதைப் போலவே, "வளமெலாம் வறண்டுவிட்டது; வறுமையில் வாடுகிறேன் யான்; வாழ ஏதேனும் வழங்குங்கள்", எனப் பிறர் வாயில் முன் நின்று வாய்திறந்து இரப்பவனோ அல்லன் செங்குட்டுவன்.

குட்டுவன் கொற்றமும் கொடையும், வேண்டுவார்க்கு வழங்கவல்ல வான்புகழ் உடையவாதல் அல்லது, பிறர்பால் இரந்து நின்று வேண்டாத, வேண்டாமையாம் விழுச்செல்வத் தின் வழியவாதல் அறிந்த பரணர், அத்தகையான் நெடிது வாழ வேண்டும்; அவன் வாழ்வால் இவ்வையகம் வாழ்வு பெறல் வேண்டும் என்று விரும்பினர். ஆனால் உலகியல் உணர்ந்த அவர் உள்ளம், வாழ்வு நிலையற்றது என்பதை

நன்கு உணர்ந்திருந்தது. மும்முரசு முழங்க, ஒப்பற்ற பேரரசை வழிமுறை வழிமுறையாகப் பெற்று, ஆளும் பேரரசுகள் பலவற்றை வென்று, கடல்சூழ்ந்த இவ்வுலகு அனைத்தையும், தம்வெண்கொற்றக் குடையொன்றின் கீழ்க் கொண்டு வந்து, தனியரசு நடாத்திய மன்னர் மன்னர்களும், இறுதியில் ஒருநாள் மாண்டுபோக, ஒரு பகலெல்லாம் ஓயாது, தேடியதன் பயனாய்க்கொண்ட, கொழுப்பு இல்லையாமாறு உலர்ந்துபோன இறைச்சித் துண்டையும், வைத்த இடத்தை மறந்துவிட்டு வருந்தும், கூகைச் சேவலின் துயர்கண்டு, தானும் பெரும் துயர்கொண்டு, அதன் பெடையைக் கூகை, குரல் எழுப்பி அழும் ஒலியே, யாண்டும் கேட்பதாய, இடுகாட்டுத் தாழிக்குள் இட்டுப் புதையுற்றுப் போவதே உலகியலாம் என்பதை உணர்ந்திருந்த அவர், அத்தகைய இறப்பு நிலை செங்குட்டுவனுக்கு வருதல் கூடாதே என்ற ஆர்வம் கலந்த அச்சம் உடையராகி, ஊரும் உலகமும் புகழும் உயர்வுடைய அவன் உடல், பாடிப் பரவும் பாணர் மகளிர் கண்களில் மட்டுமே படுவதாக! தன்னிடம் புதைக்கப் பெறுவார்க்கு இறுதி வணக்கம் கூறி, வழி அனுப்பும் உளத்தராய், அவர் பிணத்தைப் பின்தொடர்ந்து தன்பால் வருவார், ஆண்டு இருக்கும் காலம் சிறிதேயாதலின், அச்சிறுபொழுதிற்குப் போதுமான சிறு நிழலே தருவனவாகிய, வன்னி மரங்கள் நின்ற மன்றங்களையுடையவாகிய இடுகாட்டின் கண்களில், அவன் உடல் பட்டு விடாதாகுக!'' எனத், தம் வேட்கை நிறைவேறத், தாம் வழிபடு கடவுளரை வழுத்துவராயினர்.

குட்டுவன், பகைவர் எறியும் படைக்கலத் தொடையேற்றும், மகளிர் சூட்டும் மலர்த்தொடையேற்றும், புலவர் புகழ்ந்துபுனையும் பாத்தொடையேற்றும் பெருமைபெற்றவன் என்ற செங்குட்டுவனின் பல்வேறு சிறப்புக்களையும், **நோய் தபு நோன் தொடை** என்ற, ஒரு தொடரே புலப்படுத்திய

சிறப்பால், இப்பாட்டிற்கு அத்தொடரே பெயராய் அமைந்துளது.

4. நிலம் புடைப்பன்ன ஆர்ப்பொடு, விசும்பு துடையூ
வான்தோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்,
பெரிய வாயினும் அமர் கடந்து பெற்ற
அரிய என்னாது, ஓம்பாது வீசிக்,
கலம் செலச் சுரத்தல் அல்லது, கனவினும்
களைகென அறியாக் கசடு இல் நெஞ்சத்து
ஆடுநடை அண்ணல்! நிற்பாடுமகள் காணியர்!
காணலியரோ! நிற்புகழ்ந்த யாக்கை,
முழுவலிதுஞ்சும் **நோய்தபு நோன் தொடை;**
நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணன் ஆயினும், கேள் என மொழிந்து
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண் கடாவுறீஇ, அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல்தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்! கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றும் குரால் அம் பறந்தலை
முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டித்
துளங்குநீர் வியலகம் ஆண்டு இனிது கழிந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே''

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகுவண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : நோய்தபு நோன் தொடை**

ஆடு நடை அண்ணல்! (1-7); ஒழுகை உய்த்தோய் (10-17); நின் யாக்கையாம் நோன்தொடையை (8-9); பாடு மகள் காணியர் (7); பறந்தலையும், தாழியைஉடைய வன்னி மன்றத்தால் விளங்கியதுமாகிய காடு (17-23) காணிலியரோ (8). எனக் கூட்டிக் கொள்க.

இதன் பொருள்: நிலம்புடைப்பன்ன ஆர்ப்பொடு= நிலத்தை இடிப்பது போலும் ஆரவாரத்தோடு. விசும்பு துடையூ = வானத்தைத் துடைப்பது போல. வான்தோய் வெல்கொடி=வானளாவ உயர்ந்த வெற்றிக்கொடி. தேர்மிசைநுடங்க = தேர்மீது நின்று அசையுமாறு. அமர் பெரிய வாயினும் கடந்து=போர் மிகக் கொடிய பெரிய போராக அமைந்து விடினும், அப்போரையும் வெற்றி கொண்டு. பெற்ற அரிய என்னாது = பெற்ற பெருவளங்களைப் பெறுதற்கு அரியன ஆகவே நாமே வைத்துக் காப்போம் எனக் கருதாமல். ஓம்பாது வீசி=தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாதே அனைத்தையும் அள்ளிக் கொடுத்து. கலம்செலச் சுரத்தல் அல்லது = தன்பால் உள்ள அரிய கலன்கள் எல்லாம் தன்னை விட்டுப்போகுமாறு வழங்குவது அல்லது. கனவினும் களைக என அறியாக்=என்துயர் களைக என்று இரந்துகூறும் கூற்றினைக் கனவிலும் கூறி அறியாத. கசடு இல் நெஞ்சத்து ஆடுநடை அண்ணல்!=குற்றம் இல்லா உள்ளத்தையும், வெற்றியால் மிக்க விழுச்சிறப்பினையும் ஒருங்கே பெற்ற உயர்வுடையோய்! நுண்கொடி உழிஞை= தன் வன்மையை வையகத்தார்க்குக் காட்டுவான் வேண்டி நுண்ணிய உழிஞைக்கொடி அணிந்து செய்யும் போரையே விரும்புவோனும். வெல்போர் அறுகை=வெல்லும் போரில் வல்லவனும் ஆகிய அறுகை. சேணன் ஆயினும்=சேண் நெடும் தூரம் சென்று விட்டான் ஆயினும். கேள் என மொழிந்து=அவன் என் நண்பன் ஆகவே அவன் பழி போக்கல்

எம் பெரும்கடனும் எனக்கூறி. புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு= நாடு விட்டே ஓடி ஒளிந்து கொள்ளக் காரணமாய் இருந்த தோல்வியால் ஆன, துடைக்க மாட்டாப் பெரும் பழியைத் துடைத்தற் பொருட்டு. மோகூர் மன்னன் அரண்கள் அணங்கு நிகழ்ந்தன்ன கடாவுறீஇ = மோகூர் மன்னனும் பழையனுக்கு உரிய மோகூர் அரண்களை அணங்-கால் அழிவுற்றது போலும் அழிவுடையதாக அழித்து. முரசம் கொண்டு=அவன் போர் முரசையும் கைப்பற்றிக் கொண்டு. நெடுமொழி பணித்தவன்=தான் கூறும் வஞ்சினங்களை வழுவாது முடித்துக் காட்டவல்ல வீரனாகிய அவனுக்கு உரியதான. வேம்பு முதல் தடிந்து=காவல் மரமாம் வேம்பினை வேரோடு வெட்டிச் சாய்த்து. முரசு செய முரச்சி=போர் முரசு பண்ணுதற்கு ஏற்பத் துண்டித்த அம்மரத்து துண்டங்களை. களிறு பல பூட்டி ஒழுகை உய்த்தோய்=அவன் போர்க்களிறுகளையே வரிசையாகப் பூட்டி வரிசையாக ஈர்த்துக் கொண்டு சென்ற, கொற்றம் மிக்கவனே! நின்புகழ்ந்த யாக்கை முழுவலிதுஞ்சும் நோய்தபு நோன்தொடை= உன்னுடைய, பலரும் புகழ்ந்து பாராட்டிய யாக்கையாம் பேராற்றல் பொருந்தியதும், நோய்கண்டு அறியாததும் ஆகிய பெருமை வாய்ந்த உடம்பை. நின் பாடுமகள் காணியர்=உன்னைப்பாடி மகிழ்விக்கும் பாடினி மட்டுமே காண்பாளாக! கொழுவில் பைந்துணி=கொழுப்பு அற்ற பசிய இறைச்சித் துண்டை. வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை கவலை கவற்றும்=வைத்த இடத்தை மறந்துவிட்ட உச்சிக் கொண்டை உடைய கூகைச் சேவலின் கவலை குறித்து வருந்தும். குரால் அம்பறந்தலை=கூகைப் பெடைகளையுடைய தான பறந்தலைக்கண். முரசுடைத் தாயத்து அரசு பல ஒட்டி=மும்முரசு முழங்கும் செல்வ வளம் கொழிக்கும் அரசுகள் பலவற்றை அழித்து. துளங்கு நீர் வியலகம் ஆண்டு=அலையாடும் கடலால் சூழ்ந்த பெரிய உலகை

ஆட்சி புரிந்து. இனிது கழிந்த = தம் வாழ் நாட்களை இனிதாகவே கழித்த. மன்னர் மறைத்த தாழி = மன்னர்களையும் மூடி மறைத்த முது மக்கள் தாழிகளை உடையவாகிய. வன்னிமன்றத்து விளங்கிய காடு = வன்னி மரங்கள் நிறைந்த மன்றங்களால் விளக்கமுற்ற இடுகாடு. காணலியரோ = காணாது ஒழிவதாக!

# 5. ஊன்துவை அடிசில்

சேரன் செங்குட்டுவன், ஒப்பாரும் மிக்காரும் இல்லா உரவோனுவன். ஒரு காலத்தில், அரசர் எழுவர் ஒன்றுகூடி வந்து எதிர்த்தபோது, அமரகத்தே தம் ஆற்றல் தோன்ற அருஞ்செயலாற்றிப் பெரும்புகழ் பெறுவதல்லது எம் மன்னர்-தரும், கூலி பெறுவது அன்று எம் குறிக்கோள் என்பதைப், பொன்னல் பண்ணிய தும்பைப் பூ அணிவதால் கூறுமல் கூறிக் களம் புகுவோரும், தம் குறிக்கோள் குறைவின்றி நிறைவேற, நின்று துணைபுரியவல்லவாக, நஞ்சுமிழும் நாகங்களின் உறைவிடம் போலும் அம்பருத்தூணியினையும், தூணியை விட்டு வெளிப்பட்டதும், புற்றைவிட்டு புறப்பட்ட அரவேபோல், கொன்று உயிர்போக்கும் கொடுமையுடைய வாகிய அம்புகளையும், அம்புகள் நனிமிகச் சேய்மைக்கண் நிற்கும் பகைவர் உடல்களிலும் சென்று பாய்வதற்கேற்ற விரைவினை, அவ்வம்புகளுக்கு ஏற்றுதற்கு ஏற்ப, வேண்டு-மளவு வளைந்து கொடுக்கவல்ல வில்லினையும், அத்துணைப் பெரிய குறிக்கோளும், அத்துணைக் கொடிய படைக்கலங்களும் உடையார்க்கு இன்றியமையாது வேண்டுவதாய, களக். கொடுமை கண்டும், கலங்கா உரம்மிக்க உள்ளமும் உடைய-வரும், களத்தில் களிற்றுப்படைகளையே தேடிச் சென்று அழிப்பதே விழுப்புகழாகக்கொண்டு போராடுவதால், முனை மடிந்துபோன, வேல் ஏந்தித் திரிவோருமாகிய, தேர்ந்தெடுத்த வீரர்களே மலிந்திருந்த அப்போர்க்களத்தில், அவ்வீரர்களையும் வென்று, அவர் தலைவராம் அவ்வேழு அரசர்களையும் கொன்று, அவர் அணிந்து வந்த, அழகிய முடிகள் ஏழினையும் கைப்பற்றி அழித்து, அவ்வெழுமுடிப் பொன்னையும் கொண்டு, பண்ணிய ஆரத்தை, அகன்ற தன் மார்பில் அணிந்து மாண்புற்றவன், செங்குட்டுவனுதல் அறிந்து, அவனை அடைந்து, பாராட்டி நிற்கும்போதே, அவன் பெற்ற

மற்ருெரு பெருவெற்றிகண்டு பாராட்டும் வாய்ப்பும், பரணர்க்குக் கிட்டிற்று.

தமிழகத்தின் அரசியல் அமைப்பினை நன்கு அறிந்த ஆன்ருேர்களுள், தலையாயவர் பரணர். அவர் புகாத அரசவையோ, அவர் காணுத போர்க்களமோ, தமிழகத்தில் இல்லை எனலாம். அத்துணைப் பரந்த அறிவுடைமையால், பல பேரரசர்களையும், அவர்கள் ஆற்றிய அரிய போர் நிகழ்ச்சிகளையும் கண்டு வந்துள்ளார். ஆழ்ந்த அகழிகளால் சூழப்பெற்றுக் கடத்தற்கு அரியவாம் எனக் கருதப்பட்ட, பெரிய பெரிய மதில்களால் சூழப்பெற்ற புறக்கோட்டைகளையும் அழித்து உட்புகுந்து, அவ்வக நாட்டகத்தே மண்டிக்கிடந்த பகை மன்னர்களின் மாநிதிகளைப்? பண்டே நுகர்தற்கு இடமாய் அமைந்த, பகை நாட்டவரின் நனிமிகச்சிறந்த செல்வமென மதிக்கத் தக்கதான அகன்ற அவ்வரண்களின், வாயிற்கதவுகளுக்குப் பின்ஞக, அவற்றை அழியவிடாமல் தாங்கிக் கிடக்குமாறு சார்த்தியிருக்கும் கணையமரக் காட்சியுடையவும், பகைவர்க்குரிய நாடுகள் பலவற்றையும், தன் உடைமையாக்கத் துணைபுரிவனவுமாகிய, தம் இருதோள்களையும் உயரத்தூக்கிக், காணுமிடமெங்கும் பிணமலைகளே காட்சிதரும் பொல்லாங்கு மிக்க போர்களத்தின் இடையே நின்று, கைகொட்டித் துணங்கை ஆடி மகிழ்ந்தும், தாம் அவ்வாறு துணங்கைஆடி மகிழ்தற்கு ஏற்ற, பெரு வெற்றியைத் தாம் பெறத், தமக்குத் துணைபுரிவார் தம்படை மறவராவர் என அறிந்து, அவரை வாழ்வாங்கு வாழ்விப்பது, தம் நீங்காக் கடமையாம் எனும் கருத்துடையராய்ப், போர்க்களம் புக்கக்கால், வென்று முன் அடி இடுவதல்லது, தோற்றுப் பின்னடி இட்டு அறியா ஆற்றல் மறவராம் அவர்க்கு, அவர் உள்ளம் நிறைவெய்தும் வரை, பெருஞ்சோறு அளித்தல் போலும் பெருஞ்சிறப்பு, பல புரிந்தும் அவ்வாறு சிறந்த படை பெற்றும், அப்படையின்

அன்பு கெடாவாறு காக்கவல்ல அறிவுநலம் பெற்றும் விளங்கினமையால், தம்மை எதிர்த்துத் தம் நாட்டின் மீது போர்தொடுப்பார் எவரும் இன்மையால், தம் நாட்டு நாற்புற எல்லைகளை முள்ளிட்டு அடைத்து காக்க வேண்டாமையாம் விழுச்சிறப்பும், தம்மைப் பகைத்து எழுவார் ஒரோ வழி உளரா யினும், அப்பகைவர் எறியும் படைக்கலங்களின் விரைவு வன்மைகளைத், தாமே தாங்கித் தகர்த்து அழிக்கவல்ல கேடயம் முதலாம் படை நலங்களும் ஒருங்கே வாய்க்கப் பெற்றுப் பேரரசு செலுத்திய மன்னர் மன்னர் எண்ணிலாதவரைக் கண்டு பாராட்டியுள்ளார் பரணர். அத்தகைய பேரரசர்களிலும், செங் குட்டுவனுக்கு நிகரானவர் ஒருவரும் இலர் என்பதை, அவன் பெற்ற அப்புதுவெற்றி, பரணர்க்குப் புலப்படுத்திவிட்டது

கடம்பர் என்ற கடற்கொள்ளைக் கூட்டத்தவர், சேர நாட்டின் செல்வப்பெருக்கிற்குத் துணைபுரியும், வாணிக வாழ்க்கை குறித்து வரும் வங்கங்களை வழிப்பறி புரிவது அறிந்து, அவர்களை அழிக்கத் துணிந்த செங்குட்டுவன், மழை மேகம் குடிப்பதால் குறைந்து விடுவதோ, மழைவெள்ளம் புகுவதால் மிகுவதோ செய்யாது, எந்நிலையிலும் தன்னிலை திரியாத் தகைமையுடையதும், எதிர்ப்படும் எப்பொருள்களை யும் மோதி வீழ்த்தவல்ல பெருங்காற்று எழுப்பும் அலைகளின் ஓசை அடங்கா ஆற்றல் வாய்ந்ததுமான, கடல் இடையே வாழ்பவர் அக்கடம்பர்; அத்தகையாரை அழிப்பது ஒருபுறம் இருக்க, அக்கடலைக் கடப்பது எவ்வாறு என எண்ணிச் சிறிதும் இடர்ப்படாமல், தன் வேற்படையோடுகூடிய கடற்படைத் துணையால் அக்கடலையும் கடந்து, அக்கடம்பரையும் அழித்து அழியாப்புகழ் கொண்டான். அத்தகு செயற்கரும் செயல் ஆற்றிய அவனுக்கு நிகராகக் கூறத்தக்கவர், அவனுக்கு முன் வாழ்ந்த அவ்வேந்தர்களிலும் ஒருவரும் இலர் என்றால், அவனுக்குப் பின்னும் அவனுக்கு நிகராவார் பிறத்தல்

இயலாது என்பதறிந்து, அவன் பெருமையைப் பலபடப் பாராட்டுவராயினர்.

வேந்தர் பெறும் வெற்றியெல்லாம் அவ்வேந்தர்தம் வீரர்கள் ஆற்றும் அரும்போர் விளைவாம். அவர்தம் அரிய போர் ஆற்றல், வேந்தர்கள் அவர்களுக்கு வழங்கும் வாழ்க்கை வளத்தைப் பொறுத்துளது என்பதறிந்து, ஊன் குழையச் சமைத்த சோற்றினையே அவ்வீரர்களுக்கு வேந்தர்கள் வழங்குவர் எனக் கூறும் பாராட்டுரையில், அச் சோறு, ஊன்வேறு, சோறு வேறு எனப் பிரித்துக் காணப் படாதவாறு குழையச் சமைத்த சோறு என்றும், அரசர்க்கு ஆக்கிய அடிசில் வேறு; அவன் வீரர்க்கு ஆக்கிய அடிசில் வேறு என வகை செய்யாது, வேந்தர்க்கு ஆக்கியதே வீரர்க்கு ஆக்கியதும் ஆம் என்ற வகையில், சமைத்த சோறு, எனும் இரு பெரும் பொருள்நயங்கள் ஒருசேரத் தோன்றக் கூறியுள்ள நலத்தால், இப்பாட்டு, **ஊன்துவை அடிசில்** எனும் அத் தொடரால் பெயர் பெறுவதாயிற்று.

**5.** பொலம்பூந்தும்பை, பொறிகிளர் தூணி
புற்று அடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்,
நொசிவுடை வில்லின், நொசியா நெஞ்சின்,
களிறு எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்
விழுமியோர் துவன்றிய வன்கண் நாட்பின்
எழுமுடி மார்பின் எய்திய சேரல்!
குண்டுகண் அகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டும் தாம் உள்ளழித்து உண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணையெழுவன்ன,

நிலம்பெறு திணிதோள் உயர ஓச்சிப்
பிணம் பிறங்கு அழுவத்துத் துணங்கை ஆடி,
சோறு வேறு என்ஞ ஊன்துவை அடிசில்
ஓடாப்பீடர் உள்வழி இறுத்து,
முள் இடுபு அறியா ஏணித் தெவ்வர்
சிலைவிசை அடக்கிய மூரி வெண் தோல்
அனைய பண்பின் தானை மன்னர்,
இனி, யார் உளரோ? நின் முன்னும் இல்லை!
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிரும் கமஞ்சூல்
வயங்கு மணி இமைப்பின் வேல்இடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசிஞேரே!''

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்.**
**தூக்கு : செந்தூக்கு.**
**பெயர் : ஊன்துவை அடிசில்**

தும்பையினையும், தூணியினையும், அம்பினையும் வில்லினையும், நெஞ்சினையும், எஃகினையும் உடைய விழுமியோர் துவன்றிய நாட்பின் எழுமுடி எய்திய சேரல்! வேல் இடுபு கடல் மறுத்திசிஞேர், மதில் கடந்து உண்ட தாயத்து அருப்பத்து கணையெழு அன்ன தோள் ஓச்சி துணங்கை ஆடி, அடிசில் இறுத்து, ஏணியும் தோலும் உடைய மன்னர் நின் முன்னும் இல்லை; இனியார் உளரோ? என மாற்றுக.

இதன் பொருள்: பொலம்பூந் தும்பை = மைந்து பொருளாகப் போர் குறித்துச் செல்வதைக் குறிக்கும் பொன்ஞல் பண்ணிய அழகிய தும்பைப்பூவையும், பொறிகிளர்தூணி= அருப்புத் தொழில் பொறித்த அம்பருத் தூணியினையும்.

புற்றடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின் = புற்றின்கண் அடங்கியிருக்கும் அரவேபோல், தூணியின் கண் அடங்கியிருக்கும் அம்புகளையும். நெ ந ா சி வு டை ட வில்லின் = வேண்டுமளவு வளைந்து கொடுக்கும் வில்லினையும். நொசியா நெஞ்சின் = தளரா நெஞ்சினையும். களிறு எறிந்து முரிந்த கதுவாய் எஃகின் = களிறுகளைக்கொன்று குவித்தலால் முனை மழுங்கிப்போன வேலினையும் உடைய. விழுமியோர் துவன்றிய = சிறந்த வீரர்களே திரண்ட, வன்கண் நாட்பின் = கொடுமைக்கு இடமாகிய போர்க்களத்தில். எழுமுடி மார்பின் எய்திய சேரல் = ஏழரசர்களைவென்று, அவர்களின் ஏழு முடிகளைக் கவர்ந்து அழித்துப் பண்ணிய ஆரத்தை மார்பில் அணிந்து கொண்ட சேரன் செங்குட்டுவனே! மழைகொளக் குறையாது = மேகங்கள் படிந்து நீர் பருகியபோது குறையாமலும். புனல் புக நிறையாது = ம ழை வெ ள் ள ம் வந்து புகுந்தபோது மிகாமலும். விலங்கு வளிகடவும் = எதிர்ப்படும் பொருள்களைத் தடுத்துமோதும் காற்று வீசுவதால். துளங்கு இரும் கமஞ்சூல் = அசையும் இயல்புடையதான பரந்த நீர் நிலையான. முழங்கு திரைப் பனிக்கடல் = ஓயாது ஓலமிடும் அலைகளையுடைய குளிர்ந்த கடல் இடத்தே. வயங்குமணி = இமைப்பின் வேல் இடுபு = விளங்குகின்ற மாணிக்க மணிபோலும் ஒளியுடைய வேற்படையைச் செலுத்தி மறுத்திசினோர் = அக்கடல் வாழ் பகைவராம் கடம்பர்களை வென்று அழித்தவர். குண்டு கண் அகழிய மதில் பல கடந்து = ஆழ்ந்த அகழிகளையுடைய மதில்கள் பலவற்றைக் கைப்பற்றி, பண்டும் பண்டும் = முன்னர்ப் பலமுறை. தாம் உள் அழித்து உண்ட = உட்புகுந்து அழித்து உண்ட. நாடு கெழு தாயத்து = நாடாட்சிக்கு உரிய நல்ல நிதியாகிய. நனந்தலை அருப்பத்து = அகன்ற அகத்திடத்தையுடைய அரண்களின். கதவம்காக்கும் கணையெழு அன்ன = வாயிற்கதவுகளைக் காக்கும் கணைய மரங்களை ஒக்கும். நிலம்பெறு திணிதோள் = பகைவர் நாடுகளை வென்று தமவாக்கும்

திண்ணியதோள்களை, உயர ஒச்சி=உயரத்தூக்கி, பிணம் பிறங்கு அழுவத்து=பிணங்கள் மலிந்த போர்க்களத்தில், துணங்கை ஆடி=துணங்கைக் கூத்து ஆடியும். சோறு வேறு என்ணு=சோறு வேறு, கறிவேறு எனப்பிரித்துக் காணுதபடி. ஊன்துவை அடிசில்=ஊன்குழைய ஆக்கிய சோற்றுதிரளை. ஓடாப்பீடர் = தோற்றுப் புறங்காட்டி ஓடாப் பெருமையுடைய வீரர்கள். உள்வழி இறுத்து=உள்ளம் விரும்பும் வகையில் வாரி வழங்கியும். முள் இடுபு அறியா ஏணி=உட்புகும் பகைவர் ஒருவரும் இன்மையால் முள் இட்டுக் காத்தலை அறியாத எல்லைகளையும், தெவ்வர்சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல்=பகைவர் வில்லிலிருந்து வெளிப்படும் கணைகளின் விரைவினைப் போக்கிய வன்மை வாய்ந்த வெண்-தோலால் ஆன கடகத்தையும் உடைய. அனைய பண்பின் தானை மன்னர்=அத்தகு போர்ப்பண்பு உடையவராகிய படைகளைக் கொண்ட மன்னர்கள். நின் முன்னும் இல்லை= நினக்கு முன்னும் பிறக்கவில்லை, இனியார் உளரோ=இனிப் பிறப்பவர்தாம் எவரேனும் உளரோ? இல்லை.

தன்னைக் காண்பவர்களை இதனுள் எத்தனை பாம்புகள் அடங்கியுள்ளனவோ? என்னென்ன பாம்புகள் அடங்கி-யுள்ளனவோ என ஐயுற்று நடுங்க வைப்பது புற்று. அது போலவே, வீரன் முதுகில் தன்னைக்காணும் பகைவரை, இதனுள் எத்தனை அம்புகள் அடங்கியுள்ளனவோ? என்னென்ன அம்புகள் அடங்கியுள்ளனவோ? என எண்ணி எண்ணி நடுங்க வைப்பது அம்பருத்தூணி. புற்றிலிருந்து வெளிப்பட்டதும், எதிர் நிற்பார் மீது சீறிப்பாய்ந்து கடித்து நஞ்சு கக்கி அவர் உயிரைத்தப்பாது போக்கவல்லது அரவு, அதுபோலவே அம்பருத்தூணியிலிருந்து வெளிப்பட்டு, வில் வளைத்து நாணேற்றி விடப்பட்டதும், பகைவர்மீது தப்பாது பாய்ந்து அவர் மார்பைத் துளைத்து, அவர் உயிர் குடிக்க

வல்லது அம்பு. புற்றுக்கும் தூணிக்கும், அரவுக்கும் அம்புக்கும் உள்ள இந்த ஒற்றுமை கண்டு, "தூணிப் புற்றடங்கரவின் ஒடுங்கிய அம்பு" என உவமை கூறியநயம், பாராட்டற்-குரியது.

வில் எத்துணைவளைகிறதோ, அத்துணை விரைவாக, அம்பேயவல்லது. ஆகவே, அத்துணையும் அதற்குச் சிறப்பு. ஆனால், உள்ளம், எதற்கும் வளைந்து கொடுக்காது, எந்த அளவு நிமிர்ந்து நிற்கிறதோ, அந்த அளவு அந்நெஞ்சுடையார்க்குப் புகழ்சேர்க்குமாதலின், அத்துணையும் அதற்குப் பெருமை. இப்பொருட் சிறப்போடு, முரண்தொடையாம் அணிச்சிறப்பும் அமைய, "நொசிவுடை வில்லின், நொசியாநெஞ்சின்" எனச் சொல்லாட்சி புரிந்திருக்கும் சிறப்பு சிந்தைக்கு விருந்தூட்டுவதாகும்.

ஏணி, எல்லை என்னும் பொருளுடையதாதல், "நளி இரும் முந்நீர் ஏணியாக" (புறம்: 35) "மால்விசும்பு ஏணி" (சிலம்பு: 23:165) என்ற வரிகளாலும் புலனாகும்.

பாய்ந்து வரும் பகைவரின் குதிரைப் படையைத் தடுத்து நிறுத்த, நகரைச் சுற்றி முள்வேலி இடுவது, போர்முறையாம் என்பது, "இனநன்மாச் செலக் கண்டவர் கவைமுள்ளின் புடை அடைப்பவும்" என்ற புறநானூற்று வரியாலும் தெளிவாம் (புறம்: 98).

"மழை கொளக் குறையாது. புனல்புக நிறையாது" என்ற தொடர், "மழை கொளக் குறையாது புனல்புக மிகாது" என மதுரைக் காஞ்சியிலும் ஆளப்பட்டிருப்பது காண்க. [மதுரை: 424].

# 6. கரை வாய்ப் பருதி

ஆண்மையும், ஆற்றலும், அவற்றை ஆக்கம் மிகும் வகையில் செயல்படுக்கும் அறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்த செங்குட்டுவன்பால், நன்கு தேர்ந்த நாற்படையும் இருந்தது. நாற்படை வரிசையுல் முதற்கண் நிற்பதாய அவன் தேர்ப்படையின் திண்மை சொல்லும் திறம் உடையதன்று. பகை நாடு, காடும் மலையும் மடுவும் மணலும் இடையிட்ட கொடு வழிகளுக்கு அப்பாற் பட்டது என்ருலும், அக்கொடுவழிகளில் கேடுற்றுப் போகாது, அவற்றை எளிதில் கடக்கவல்ல திண்மை வாய்ந்தது. போர்க்களத்தில், இனிப் போக இயலாது என எண்ணுமளவு, பகைவர் படைகள் இடையிட்ட பகுதியின் அருமைப் பாட்டினை அழித்து, விரையும் வன்மையுடையது. தேர்ப்படையின் திறம் அத்தன்மைத்தாம் என்ருல், தேர்ப்படையை அடுத்து நிற்பதாய களிற்றுப்படையின் களப்போர்த்திறம், அதனினும் சிறப்புடைத்தாம். தன்முன், பகைவர் படையைச் சேர்ந்த கரிகளோ, பரிகளோ, காலாட்களோ எவைவரினும், எத்துணையவரினும், எல்லாமேவரினும், கொன்று உயிர்போக்கும் கொடுமையுடையது அக்களிற்றுப்படை, அது களம்புகக் கண்டதும் அஞ்சி நடுங்கும் பகைவர் படைகள், அவ்வச்ச மிகுதியால் எத்திசையில் ஓடினுல் உயிர் பிழைக்கலாம் என்ற அறிவினையும் இழந்தனவாகி, அக் களிற்றுப்படைக்குப் பின்னுக, வறிதே ஊர்ந்து வரும், தேர்ப்படையின் உருளைகளுக்கு இடையே அகப்பட்டு உயிரிழந்து போகும். அதுபோலும் நிகழ்ச்சிகளால் உயிரிழந்தவரின் உடற்குருதி படிந்தே, அவ்வுருளைகள் கறைபட்டுவிடும். அத்தகு நாற்படை, தன்பால் அளவின்றி இருந்தமையால், தன்னைப் பகைப்பவரோ, தனக்குப் பணிய மறுப்பவரோ, இக்கன்னித் தமிழ்நாட்டில் மட்டுமன்று, கடல் கடந்த

நாட்டிலும் ஒருவரும் இலர், என்ற பேரும் புகழும் பெருகப் பேரரசு நடத்தி வந்தான் செங்குட்டுவன்.

செங்குட்டுவன் இவ்வாறு சிறந்து விளங்கவே, அவனைப் பகைத்து வாழ்பவர் இவ்அவனியில் ஒருவரும் இலராயினர். ஆனால், களம் பல கண்டு கடும்போர்புரிந்து பழகிய கட்டிளங் காளையராகிய அவன் வீரர்கள், வினை முடங்கிக்கிடக்க இயலாராயினர். போர் வேட்கை கொண்டலையும் உள்ளமும் தினவெடுக்கும் உடலும் உடையராய்ப், பெரும்போரை எதிர் நோக்கிக் காத்துக்கிடந்த அவர்க்குக், கிடைத்தற்கரிய வாய்ப்பு ஒன்றும் வந்து புகுந்தது.

கடலிடைத் தீவுகளை வாழிடமாக் கொண்ட, தம்மை அணுகச் செங்குட்டுவனாலும் ஆகாது என்ற அறியாமையொடு பட்ட ஆணவ மிகுதியால், கடம்பர் எனும் கடற்கொள்ளைக் கூட்டத்தவர், சேர நாட்டு வணிக வங்கங்களை வழிப்பறி செய்யத் தலைப்பட்டனர். அது கேட்ட செங்குட்டுவன், அக்கணமே அவர்மீது போர்தொடுத்து விட்டான். சங்குகளின் முழக்கொலி ஓயா, அப்பெருங்கடல் நீரும் கலங்கிச் சேருகுமாறு தன் வேற்படைவீரர்களை அவர் மீது ஏவினான். மலைபோல் எழுந்து மடியும் பேரலைகளையும், எல்லை காண்டற்கு இயலாவாறு விரிந்து அகன்ற பரப்பினையும் உடையதான கடல் அளிக்கும், இயற்கைஅரண் உடைமையினாலேயே, கடம்பர் அழிவுத்தொழில் மேற்கொண்டனர்; ஆகவே அக்-கடல் அரணை, இல்லை ஆக்குகிறேன் எனச் சூளுரைத்துச் சேர நாட்டுக் கடற்படையால் அதைச் செய்து முடித்தான். கடலை ஒரு பொருட்டாக மதியாது கடந்து போய்க் கடம்பர்களை வென்று அழித்தமையால், செங்குட்டுவன், கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன் எனும் சீர் மிகு சிறப்பினைப்பெற்றான்.

செங்குட்டுவனின் இவ்வெற்றிச் சிறப்புகளைக் கேட்டு அவனைக்காணும் ஆர்வம் பெருக, அவன் இருந்து ஆளும் வஞ்சிமாநகர் சென்று அவனைக் காண்பவர், "செங்குட்டுவன் சிறந்த வீரன் என்று மட்டுமே இதுகாறும் எண்ணி இருந்-தோம். ஈண்டுவந்து கண்டபிறகே, அவன் சிறந்த வீரன் மட்டுமல்லன்; பெரியகொடையாளனும் ஆவன் என்பதை அறிந்தோம். இழையும் குழையும் ஆகிய அணிகளும், நறு மணம் வீசும் புதுமலர்களால் ஆன மாலைகளும் உடையராய், கையில் தொடியும், கழுத்தில் மணிமாலையும் அணிந்தும், தேன் உண்டு பழகிய வண்டுகள் விடாது வந்துமொய்க்குமாறு, தேன்துளிக்கும் புத்தம் புது மலர்களையே சூடும் கூந்தலைக் கொண்டையாக முடித்தும், அதில் பூவணியும் பொன்னணியும் பொருத்தியும் தம்மை ஒப்பனை செய்துகொள்ளும் ஆடல் மகளிர், இனிய இசையெழுப்பும் பேரியாழ் ஏந்திவந்து, முதற்கண், மங்கலப்பண்ணாம் பாலைப்பண்ணை எழுப்பி இசைத்துவிட்டுப் பின்னர்ப், பற்றற்கரியன என்ற பாராட்டினைப் பெற்றனவாகிய பகைவர்தம் பேரரண்கள் பலவற்றை முற்றி வளைத்துக் கைப்பற்றுவதல்லது, பகைவர்க்குப் பணிந்து போதலைப் பார்த்தறியாச் செங்குட்டுவன் பேராண்மையைப் பொருளாகக் கொண்ட, பாடல்களைப் பாடிநிற்க, அப்பாடல் நயம்கண்டு நயக்கும் செங்குட்டுவன், அம் மகளிரை அகமும் முகமும் மலர் வரவேற்று, அருகில் இருத்தி, அவர் உளம் உவக்கும் உறுபொருள் பலவும் அளித்து, அனுப்பும் அருமைப் பாட்டினைக் கண்டோம்; ஆகவே, கொற்றத்தோடு கொடையி லும் சிறந்த குட்டுவன் அரசவை விடுத்து அகலோம் வேறிடம்; இனி இதுவே எம் வாழிடம்" என்று கூறி ஆண்டே இருந்து விடுவர்.

செங்குட்டுவன் அவைக்களப் புலவராய் வீற்றிருக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றமையால், இதுபோலும் நிகழ்ச்சிகள்

இடையருது நடைபெறக் கண்டு, அவனை நாவாரப் பாராட்டும் பரணரின் பாராட்டுப் பாக்களுள் இதுவும் ஒன்று.

தான் வாளா இருப்பவும், தன்பால், பகைவர் தாமே வந்து, தாழ்ந்து கிடப்பர் என்பதே உண்மையான வீரனுக்கு உயர்ந்த புகழ்தருவதாகும். செங்குட்டுவன் அத்தகுபுகழைச் சிறக்கப் பெற்றவனாவன் என்ற பாராட்டு, போர் உடற்றும் உட்கோள் இன்றி வறிதே உருண்டோடிக் கொண்டிருக்கும் போதே, பகைவர் தாமேவந்து தன் உருளைக்கீழ் அகப்பட்டு உயிர் இழக்க, அவ்வாறு இறந்தார்தம் உடல் குருதிபடிந்தே கறைப்பட்டுக் காட்சிதரும் உருளைகளைக் கொண்டது செங் குட்டுவன் தேர்ப்படை என்ற பொருள் "**கரை வாய்ப் பருதி**" என்ற அத்தொடரிலேயே பொருந்தியுளது ஆதலின், அப்பொருள் காட்டும் தொடரே, அப்பாட்டிற்குப் பெயராய் அமைந்தது.

6. "இழையர் குழையர் நறுந்தண் மாலையர்,
சுடர்நிமிர் அவிர்தொடி செறித்த முன்கைத்,
திறல்விடு திருமணி இலங்கும் மார்பின்
வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலைபண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட
இனிது புறம்தந்து அவர்க்கு இன்மகிழ் சுரத்தலின்,
சுரம்பல கடவும் **கரைவாய்ப் பருதி**
ஊர்பாட்டு எண்ணில் பைந்தலை துமியப்
பல்செருக்கடந்த கொல்களிற்று யானைக்,
கோடுநரல் பௌவம் கலங்க வேல்இட்டு
உடைதிரைப் பரப்பின் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே."

துறை: செந்துறைப்பாடாண் பாட்டு
வண்ணம்: ஒழுகுவண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: கரைவாய்ப் பருதி

மகளிர் பாட, மகிழ்சுரத்தலின், செருக்கடந்தவனும், யானை உடையானும் ஆகிய கடல் ஒட்டிய குட்டுவன் கண்டோர், செல்குவம் என்னார் என வினை முடிவு செய்க.

இதன் பொருள்:- இழையர் குழையர் நறும் தண்மாலையர் = இழையினையும், குழையினையும், நறுமணம் நாறும், குளிர்ந்த மாலையினையும். சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை = ஒளிமிக்கு விளங்கும் தொடியை இறுகச் செறித்த முன் கைகளையும், திறல் விடு திருமணி இலங்கு மார்பின் = பேரொளிகாலும் உயர்ந்த மணிமாலை மின்னும் மார்பினையும் உடைய. வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர் = வண்டு மொய்க்கும் தம் கூந்தலைக் கொண்டையாக முடித்துக் கொள்ளும் ஆடல் மகளிர், தொடை படு பேரியாழ் = இசைத் தொடை இனிது அமைந்த பேரியாழில். பாலை பண்ணி = முதற்கண் பாலைப் பண்ணோசையை எழுப்பிப் பின்னர், பணியா மரபின் உழிஞை பாட = பகைவரைப் பணிந்தறியா மரபோடு கூடிய, பகைவர்தம் அரண்களை முற்றித் தனதாக்கிக் கொள்ளும் நிகழ்ச்சிகளை உணர்த்தும் உழிஞைப் பண்ணைப் பாட, இனிது புறம் தந்து = அது கேட்ட செங்குட்டுவன் அம்மகளிரை நன்கு ஓம்பி. அவர்க்கு இன்மகிழ் சுரத்தலின் = அவர்க்கு இனிய மகிழ்ச்சி தரும் மாநிதிகளை வாரி வழங்குவதால். சுரம் பல கடவும் = கொடுவழி பலவற்றையும் கடந்து போகும். கரைவாய்ப் பருதி = பகைவர் குருதியால் கறைபட்ட விளிம்பினையுடைய தேர் ஆழிகள்; ஊர் பாட்டு = வறிதே ஊர்ந்து செல்லும்போதே. எண்ணில் பைந்தலைதுமிய =

எண்ணற்ற பகைவரின் பசிய தலைகளை நசுக்கி அழிக்க. பல செருக்கடந்த = பற்பல போர்களில் வெற்றிகண்டவனும். கொல்களிற்று யானை = கொல்லும் போர்புரியவல்ல களிற்றுப் படையுடையானும். கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு = சங்கு முழங்கும் பெரிய கடல் கலங்குமாறு தன் வேற்படைவீரர்களை விடுத்து. உடைதிரைப் பரப்பின் படுகடல் = ஓங்கி உயர்ந்து உடைந்து மறையும் அலைகளைக் கொண்ட அகன்ற நீர்ப்பரப்பாகிய ஓவென ஒலிக்கும் கடலை. ஓட்டிய = கடந்து வெற்றி கொண்ட. வெல் புகழ்க் குட்டுவன் கண்டோர் = வெல்லும் புகழ் வாய்க்கப் பெற்ற குட்டுவனைக் கண்ட இரவலர். பெயர்ந்து பாடுபு செல்குவம் என்னார்: = இவ்வஞ்சிமாநகரை விடுத்துப், பிறரைப்பாடி வேற்றிடம் செல்குவேம் என நினைப்பது தானும் செய்யார்.

# 7. நன்னுதல் விறலியர்

“அருள் என்னும் அன்பு ஈன்குழவி, பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு” என்ற பொன்னுரையின் பொருள் உணர்ந்தவன் செங்குட்டுவன். அதனால், தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்குப் பெரும்பொருள் வழங்கும் தன் கொடையறம் குன்றாது நடைபெற வேண்டுமாயின், பொருட் செல்வத்தைக் குறைவறப் பெறுதல் வேண்டும். தன் கோயிற் பண்டாரம் என்றும் நிறைந்து வழிய வேண்டுமாயின், பணிந் தொழுகும் பகையரசர்கள் தரும் திறைப் பொருளையும், பணியாத பகையரசர் மீது படையொடு சென்று, அவர் நாடுகளுட் புகுந்து கவர்ந்துவரும் களிறு முதலாம் பல்வேறு பொருள்களையும் நாள்தோறும் கொண்டு வந்து குவிந்தல் வேண்டும். ஆகவே, தன் பொருட்டு அல்லவாயினும், அப் பரிசிலர் பொருட்டாவது ஓயாப் போர் மேற்கொள்வது தன் இன்றியமையாக் கடமையாம் என்ற உணர்வுடையனாய் வாழ்ந்தமையால், குட்டுவனின் கொடையறமும், அதற்குக் காரணமாய கொற்றத்திறமும் ஒரு சிறிதும் குறைவின்றி நிகழ்ந்து கொண்டிருந்தன, என்ற செங்குட்டுவன் புகழ்கேட்டு அவனை நேரில் கண்டு பாராட்டும் நினவினராய், அவன் அரசிருக்கைத் தலைநகராம், வஞ்சி மாநகர்க்கு வந்தார் புலவர் பரணர்.

பரணர் வஞ்சியுள் புகுந்த நேரம், இரவு நேரம். அந் நேரத்தில் புறநகர் கடந்து அக நகர் புக்க அவரைக், கூத்தும் பாட்டும் எழுப்பும் பேரொலி எதிர் சென்று வரவேற்க, அவ் வொலிவரும் திசைநோக்கிச் செல்லத் தொடங்கினர். அம் மாநகர் வீதிகள் அனைத்தும் வானளாவ உயர்ந்த மாட மாளிகைகளையே இருபாலும் கொண்டிருந்தமையால், அவ் வீதிகளைக் கடந்து சென்ற புலவர், மலைநிகர் மாடங்கள்

தோறும், வேந்தன் பிறந்தநாள் என்றும், அவன் முடிபுனை நாள் என்றும், வெற்றித் திருநாள்என்றும் விழாக் கொண்டாடி ஏற்றிய கொடிகளும், இது பட்டிமன்றம், அது பாராளும் மன்றம், இது அறங்கூர் அவை, அது அறக்கூழ்ச்சாலை, இது நன்பொன் வாணிக நிலையம், அது நவமணிக் கடைகள் என்பன போலும் அறிவிப்புகளைத் தாங்கி நிற்பது குறித்தும், ஏற்றிய கொடிகளும் காட்சி அளிக்கக் கண்டுகளித்தார். வெண்ணிறத் துகில்களால் ஆக்கப்பெற்று, வானளாவ உயர்ந்த மாடங்களின் உச்சியில் கட்டப் பெற்றிருக்கும் அக்-கொடிகள், காற்று அசைக்க அசைந்தாடிக்காட்டும் அழகினைக் கண்ணுற்ற புலவர், அக்காட்சி, தாம் வந்த வழியில் வானுற வோங்கிய மலையுச்சிகளிலிருந்து, வெண்ணுரை தெறிக்க விரைந்து பாயும், வனப்புமிகு நீர்வீழ்ச்சிகளை நினைவூட்டும் தன்மையவாதல் கண்டு கழி, பேரின்பம் கொண்டார்.

கொடிக் காட்சியைக் காணும் கண்கள் களிக்க, பாட்-டொலி கேட்கும் காதுகள் இனிக்க, வீதிகள் பலவற்றைக் கடந்து, இறுதியில் ஊர் மன்றை அடைந்தார் புலவர். ஆங்கு உயர்ந்த மேடைமீது அமைத்திருந்த அழகிய பந்தலின் இருபுறத்திலும், பெரிய பெரிய பாண்டில் விளக்குகள் பேரொளி தந்தவாறு எரிந்து கொண்டிருந்தன. அவ்விளக்-கடியில் அமர்ந்திருந்த இருவர், அவ்விளக்கில் வார்த்த எண்ணெய் வற்றிப்போகத், திரிஎரிந்து, தீஅவிந்து போகாமை யில் கருத்துடையராய், வழிய வழிய எண்ணெய் வார்த்து வந்தனர். ஊர்மக்கள் ஒன்று திரண்டு வந்து மேடை முன் வீற்றிருக்க, விளக்கு தரும் வெளிச்சத்தால், விளக்கம் பெற்ற மேடைமீது, மங்கை நல்லாள் ஒருத்தி ஆடிக்கொண்டிருந்தாள்

காண்பவர் கருத்தை ஈர்க்கும் வகையில், தம்மை ஒப்பனை செய்து கொள்வதிலேயே கூத்தாடிகள் வனப்புடையவர்

போல் தோன்றுவர் என்ப. ஆனால் அவ்வாடல் மகளோ இயற்கையாகவே பேரழகுடையவளாய் விளங்கினாள். அவள் நெற்றியில் வீசும் அழகுப் பேரொளி ஒன்றே போதும், அரங்கின் முன் அமர்ந்திருப்பவர் உள்ளத்தை அடிமை கொள்ள. அத்துணைப் பேரழகு வாய்ந்த அவள், ஆடல் திறம் கண்டு வியந்து நின்றபுலவர், அவள் வாய்திறந்து பாடக் கேட்டதும் தம்மைமறந்து விட்டார்; அத்துணை இனிமை வாய்ந்திருந்தது அவள் குரல். அவள் இசையின் இனிமை நுகர்ந்த புலவர், அவள் பாடிய பாட்டின் பொருளை ஊன்றி நோக்கினார். அது. அந்நாடாளும் செங்குட்டுவனின் சிறப்பையே உணர்த்துவதாய் அறிந்தார். அவர் வியப்பு அளவிறந்து பெருகி விட்டது.'' ''என்னே இம் மன்னன் மாண்பு! இரவின்பம் குறித்து நிகழும் ஆடரங்குகளிலும், ஆரணங்குகள் அவன்புகழையே பாடுகின்றனர். ஆடல்காண அமர்ந்திருக்கும் ஆயிரம் ஆயிரம் மக்களும், அவன் புகழ்பாடும் பாடல்களைக் கேட்பதிலேயே பேரின்பம் காண்கின்றனர். அவன் உறங்கும் போதும், அவன் புகழ், ஊரரங்குகளில் உணர்வோடு பாராட்டப் பெறுகிறது. என்னே அவன் பெருமை!'' என எண்ணி எண்ணி வியந்தார். அவ்வியப்பின் பயனாய் வந்தது இப்பாட்டு.

செங்குட்டுவன் புகழ் பாடுவார் ஏழை எளியோர் மட்டுமே அல்லர்; அவன் புகழ்பாடும் அப்பணியில் செல்வரும் சிறந்தாருமே முன் நிற்கின்றனர் என்ற நிலையே, அவன் புகழ்ப் பெருமையை உள்ளவாறு உணர்த்தவல்லதாம் என்ற உணர்வுடையவர் புலவர். அவ்வுணர்வோடு பாடிய அப்பாட்டில், புலவர், தம் அவ்வுணர்விற்கு உயிர்வூட்டும் கருப்பொருள், செங்குட்டுவன் புகழ்பாடும் ஆடரங்கில் நின்று ஆடுவாள், வெறும் ஆடல் மகள் அல்லள்; பேரழகின் ஒளி காலும் நெற்றி முதலாம் உறுப்பு நலம் அனைத்தும் ஒருங்கே

வாய்க்கப் பெற்ற மங்கை நல்லாள் ஆவள் என்ற சொற்பொருளிலேயே அடங்கியுளது. ஆதலின், அப்பொருள் உணர்த்தும் **நன்னுதல் விறலியர்** என்ற தொடரே அப்பாட்டிற்குப் பெயராய் அமைந்தது நனிமிகப் பொருத்தமாம் என்க.

7. அட்டு ஆனானே குட்டுவன் ; அடுதொறும்
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே;
வரைமிசை இழிதரும் அருவியின், மாடத்து
வளிமுனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்
சொரி சுரை கவரும் நெய்வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல
**நன்னுதல் விறலியர்** ஆடும்
தொன்னகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே.

**துறை; செந்துறைப்பாடாண் பாட்டு**
**வண்ணம்: ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: நன்னுதல் விறலியர்**

இதன் பொருள்:— குட்டுவன் அட்டு ஆனான்=செங்குட்டுவன், பகைவர்களை அறவே அழித்து வெற்றி கொண்டும் போர் வேட்கை தணித்திலன்; அடுதொறும் = அவன் அவ்வாறு வெற்றி கொள்ளும் தோறும், பரிசிலர் களிறு பெற்று ஆனார்=பரிசில் மாக்கள் அவன்அளிக்கும் களிறு முதலாம் பெரும் பரிசில் பெற்றும், அமைதி பெறாது, அவன்பால் மேலும் பரிசில் பெறுவான் வேண்டி, அவன் புகழ் பாடுவதைக் கைவிட்டிலர். வரைமிசை இழிதரும் அருவியின்=மலை மேலிருந்து விழும் அருவிகள்போல். மாடத்து=மாடங்களின் மேலிடத்திலிருந்து, வளிமுனை அவிர்வரும் கொடிநுடங்கு

தெருவில்—காற்ருல் அலேக்கப்படும் கொடிகள் ஆடும் தெரு-வின்கண். சொரி சுரை=நெய் சொரியப்படும் சுரையின்கண். கவரும் நெய் வழிபு உராலின் = எரிக்கப்படும் நெய் நிறைந்து வழியுமாறு பெய்து நிரப்புதலால். பாண்டில் விளக்கு= பாண்டில் விளக்குகளின். பருச்சுடர் அழல=பருத்த திரியில் ஏற்றிய அழலானது பேரொளி செய்ய. நன்னுதல் விறலியர் =நல்ல நுதல்அழகு வாய்ந்த ஆடல் மகளிர். ஆடும்= கூத்தாடும். தொல் நகர் வரைப்பில்=மிகப்பழைய மாளிகை-களேக் கொண்ட அவன் நாட்டுப் பேரூர்களில். அவன் உரை ஆனு=அவன் புகழ்பாடும் தொழில் இடைவிடாது நடைபெறு கிறது.

செங்குட்டுவன், தன் வாழ்நாள் முழுவதையும், போர்க்-கள வேள்வி செய்தே கழித்தவன்; அவன் போர்வேட்கை என்றும் தணியாத ஒன்று என்பதைப், பரணர், இப்பாட்டில் வைத்து "அட்டு ஆனுனே" என விளக்குவது போலவே, செங்குட்டுவன் உடன் பிறப்பாம் இளங்கோவடிகளாரும், அவன் ஐம்பது ஆண்டு நிறைவு எய்தியபோதும், போரே விரும்பியிருந்த நிலேயை அவனுக்கு எடுத்துக்கூறி, அது கைவிடுமாறு அறிவுரை கூறியுள்ளார்.

"வையம் காவல் பூண்ட நின் நல்யாண்டு
ஐயைந்து இரட்டி சென்றதன் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது, யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினே"

—சிலம்பு: 281; 128-131.

# 8. பேரெழில் வாழ்க்கை

எல்லா நாடுகளிலும், ஆறுகள் உள என்றாலும், சேர நாட்டு ஆறுகளுக்குப், பிறநாட்டு ஆறுகளுக்கு இல்லாத பெருமை ஒன்று உண்டு. பிறநாட்டு ஆறுகள் எல்லாம், தொடக்கமும் முடிவும் ஆகிய தம் வாழ்க்கை அனைத்தையும் தாம் பாயும் அத் தனியொரு நாட்டிலேயே பெற்றிருப்பதில்லை. தோற்றம் ஒரு நாட்டில், ஓட்டம் பிறிதொரு நாட்டில், முடிவு மற்றொரு நாட்டில் என அமைவது, அவற்றிற்கெல்லாம் பொது இயல்பாம். அதனால் அவையும், அவை பாயும் நாட்டாரும் அடையும் குறைபாடுகள் பற்பல. அத்தகு குறைபாடு அற்றவை சேரநாட்டு ஆறுகள். அவை தோன்றுவதும் அந்நாட்டு மலைகளிடத்தில்; அவை சென்று கலப்பதும் சேர நாட்டிற்கு உரிமை பெற்ற கடலில். அத்தகு தனிப்பெருமை பெற்ற பேராறுகளில், காஞ்சியம் பேராறும் ஒன்று. சேரநாட்டுத் தலைநகர்க்கு அணித்தாக ஓடும் அவ்யாறு, பிறிதொரு வகையாலும் சிறந்து விளங்கிற்று. ஆற்றில் வேனிற் புதுப்புனல் வருங்கால், மன்னனும் மக்களும் தம் மாநகர் விடுத்துச் சுற்றம் சூழச் சென்று, ஆற்றின் இருகரை மருங்கிலும் உள்ள மலர்ச் சோலைகளில் தங்கி, உண்டும் தின்றும், புதுப்புனல் புகுந்து ஆடியும் பாடியும், அகம் மகிழ்தற்கு வாய்ப்பளிக்கும் வகையில் புனலாட்டுவிழா ஆண்டு தோறும் நடப்பது வழக்கமாம்.

மலைநாடு புகுந்து மன்னன் போற்ற வாழ்ந்திருந்த பாணரும், புதுப்புனல் விழாக்காணக் காஞ்சியாற்றங்கரைக்குச் சென்றிருந்தார். சென்றவர், விழாக் குறித்து ஆங்கு வந்து குழுமியிருக்கும் மக்களிடையே புகுந்து, ஒன்று கலந்து உண்டும் உரையாடியும் வருங்கால், மக்கள், விழா நிகழ்ச்சிகளால் மனம் நிறை மகிழ்வெய்திருக்கும் அந்நிலையிலும் மன்னனை மறவாது, அவன் புகழே புகல்வது கண்டார்.

''ஈதல், இசைபட வாழ்தல், அதுவல்லது ஊதியம், இல்லை உயிர்க்கு;' 'உரைப்பார் உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்'' என வள்ளுவர் வழங்கிய வாய்மையின் வன்மையினை உணர்ந்தவன் நம் ஊராளும் செங்குட்டுவன். அதனால் இமயவரம்பன் ஈன்ற காளை, இளங்கோவின் உடன்தோன்றல்; இளங்கோ வேண்மாளின் இன்னுயிர்க் காதலன் என்பன போலும் பிறந்தகுடியாலும், சீத்தலைச் சாத்தனாரின் சிந்தை கவர்ந்தவன்; பரணர் பாராட்டைப் பெற்றவன் என்பன போலும் பெருமைக்கு உரியவனாக்கும் பேரறிவுத் திறத்தா லும், கங்கை கடந்து கனகவிசயரை வென்றவன்; கடலைக், கடந்து கடம்பரைக் கொன்றவன் என்பனபோலும் கொற்றத் தாலும் தன்னை, வந்தடைவது, வான் அனைய பெரும்புகழாம் என்றாலும், அவற்றால் ஆம் புகழ் எல்லாம், உண்மைப் புகழ் ஆகா; வறியோர்க்கு வழங்குவதால் பெறலாகும் கொடைப் புகழே குறைவிலா நிறைபுகழாம்; கேடிலா நெடும் புகழாம் என உணர்ந்து, தன் புகழைப் பாணர்கள் பாடவேண்டும; அப்பாடற் பொருட்கேற்ப விறலியர் ஆடவேண்டும்; அத்தகு பாடலும் ஆடலும் அளவிறந்து பெருக வேண்டும்; ஆகவே அவைபுரியும் பாணர்க்கும் விறலியர்க்கும், அவர் விரும்பும் வான்பொருளை, வாரி வாரி வழங்க வேண்டும் எனக், கொடைப் புகழ் வேட்கையுடையவனாய்க் கிடந்து, தன் நாளோலக்கப் பேரவைக்கு, நாள்தோறும் வந்து, தன் பெருமை பாடும் பாணர்க்குப் பொன்னால் பண்ணிய தாமரைப் பூக்களைத் தலை யில் சூட்டுவன்; விறலியர்க்குப் பொன்னரி மாலைகளை அணிவிப்பன்; வாழ்க! அவன் வளமார் பெரும் புகழ்!'' என்பாரும், ''பாடியும் ஆடியும் தன் புகழ்பரப்பும் பாணர்க்கு விறலியார்க்கும் வாரி வாரி வழங்க மட்டுமே அறிந்தவன் அல்லன் செங்குட்டுவன்; வழங்கத் தெரிந்திருந்த அவன், அவ்வாறு இடையறுது வழங்கத் தேவைப்படும் வளத்தைத்,

தேடித்திரட்டவும் தெரிந்திருந்தான். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு எனும் வழிகாட்டும் வாய்மொழியை அறிந்திருந்தான் போலும்! குளிர் மிகுக்கும் காற்றடிக்கும் கடற்கரை வாழ்க்கையர் ஆகிவிட்ட காரணத்தால், தம் வளத்திற்கு அக்கடலையே நம்பி, அக்கடலையே உழுது, உப்பும் உறுமீனும் கொண்டு உயிர்வாழும் கடல்நாட்டவராகிய பரதவர்போல், கடலும் கலங்குமாறு கலங்களைப்போக்கி, அக்கடலைக் கடந்து போய், கடம்பர்வாழ் தீவுகளை அடைந்து, அவர்களை வென்றழித்து, வாணிகவங்களை வழிமடக்கிக் கொள்ளையிட்டுக் குவித்து வைத்திருந்த அவர்தம் மலைநிகர் மாநிதிகளை வாரிக் கொணர்ந்து வளம் பெருக்கினான்'' என்பாரும்,

''செருமேற்கொண்டு சென்ற செங்குட்டுவன், செல்வப் பெருக்கோடு வந்து சேர்ந்துவிட்டான் என்பதைப், பாடிப் பிழைக்கும் பரிசிலர் அறிந்து கொண்டதும், அரண்மனை வாயிற்கண் வந்து குவித்துவிடுவர்; அவன் கொற்றம் கொடை, அன்பு, அருள், ஆட்சித்திறம், அறிவுத்தெளிவு ஆகிய அவன் பெருமைகள் அனைத்தையும் தம்பாவிடை வைத்துப் பாராட்டத் தொடங்கிவிடுவர். அவ்வாறு அன்னார் பாடும்பாக்கள் அளவிறந்து பெருகிவிடும். ஆனால் அவன் புகழோ, பாடிமுடியாது; அவர்கள் பாடப்பாட, அவன் புகழ் பெருக்கிக்கொண்டே போகுமாதலின், அவர்கள் எவ்வளவு தான் பாடினும், அந்நிலையிலும், அவன் புகழில் பெரும்பகுதி பாடப்பெறாமலே கிடக்கும். அவன் புகழின் பெருக்கம், அவர் தம் பாடும் ஆற்றலை என்றும் குறையுடையதாகவே வைத்திருக்கும். அத்தகு குறை, தம்பால் இருப்பினும், அவன்பால், பொருள் வேண்டிவருவதை அவர்களும் கை விடுவார் அல்லர். வரிசை வரிசையாக வந்து, ஒருவர் பின், ஒருவராக நின்று கையேந்தி நிற்பார் ஒவ்வொருவர்க்கும் உறுபொருள் அளிப்பதை அவனும் கைவிடுவான் அல்லன்.

இரண்டும், ஓய்வு ஒழிவு இன்றி இடையருது நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். செங்குட்டுவன் சிறந்த வீரன் என்பது உண்மை; ஆனுல்இத் துறையில் மட்டும் அவனுக்கு அத்துணை அறிவு போதாது போலும்! பரிசில் மாக்களின் பாடல், தன் புகழ் அனைத்தையும் பாடி முடிக்க மாட்டாக் குறைபாடுடைய என்பதை அறிந்து கொள்ளவல்ல அத்துணைக் கல்வி கற்றவன் அல்லன் அக்காவலன். கொடுக்கக் கற்றுக்கொண்டானே ஒழிய, தகுதி அறிந்து கொடுக்கத் தெரிந்துகொண்டான் அல்லன். அத்துணை அறிவிலி அவன்'' என அவன் கொடை வளத்தைக், குறை கூறுவார் போல் கொண்டாடுவாரும்,

''பரணரும், பொருநரும், கூத்தரும், விறலியரும் போலும் பரிசிலர், ஆணும் பெண்ணுமாக அளவிறந்து வந்து, தன்னை வளைத்துக்கொண்டு, தன் பொருளை வாரிச் செல்லு-மளவு அத்துணை எளியவனுக ஈண்டுக் காட்சி அளிக்கும் இக்-காவலன், களம் புகுந்துவிட்டால், ஆண்டு அவனை அணுகு வது ஆற்றல்மிகு மறவர்க்கும் ஆகாது. அணுகவந்து அன்புடைமை காட்டுவது விடுத்து, பகையுணர்வுகொண்டு படையொடு வருவார் எத்துணைப் பேரரசராயினும், எத்துணைப் பெரிய படையும், நாடும் உடையவரானும், அவனுல் அவர்-கள் அழிவுறுவதல்லது, அவர்களால் அவனை அணுகுவதும் ஆகாது. புதுப்புனல் விழா நிகழும் இக்காஞ்சியாற்றுத் துறைக்கும், அவன் போர்க்களத்திலிருந்துதான் நேரே வந்துளான் காண்மின். அவன் மார்பில் கிடந்து மணக்க வேண்டிய மலர்மாலையும், மலையச் சந்தனமும், பகை நாட்டுப் பேரூர்களையும், பெருவளம் பயக்கும் வயல்களையும் எரித்தழிக்க காட்டிய தீயின் திறலால் தீய்ந்தும் புலர்ந்தும் கிடப்பது மூண்மின்!'' என அவன் ஆண்மையை, ஆற்றலைப் பாராட்டுவாருமாக ஆங்குள்ளார் அனைவரும் அவன் புகழே

பாடுவது கேட்டார். அவர்நாவும் ஒரு பாட்டிசைத்து, அப்பாராட்டுப்பணியில் பங்கு கொண்டார். அதுவே இது.

பாடிப் பாராட்டிய பரணர், புலவர்பாடும் புகழ்படைத்த அப்பெரியோன், இந்நிலவுலகில் நீடு வாழ வேண்டும் என்று விரும்பினர். எண்ணிக் கூறமாட்டா எண்ணில் ஆண்டுகள் இம்மண்ணில் அவன் வாழ வேண்டும் என்று விரும்பினர். ஆயினும், அவ்வாறு வாழ வேண்டிய அவன் வாழ்நாளின் அளவை வரையறுத்துக் காண, அவரால் இயலவில்லை. ஆனல், வாழும் காலத்திற்கு, ஒரு வரையறை கொள்ளாது வாழ்த்துவது, வாழ்த்து மரபாகாதே என்றது அவர் மனம். இல்வாறு மனம் தடுமாறும் நிலையில் வீற்றிருந்த அவர்க்கு, ஆங்குப் பரந்து கிடந்த, காஞ்சியாற்று வெண்மணல், ஒருவாறு வழித்துணை புரிவதாயிற்று. தன்னை எண்ணிக் காணல் எவர்க்கும் ஆகாது ஆயினும், அவன் வாழ் நாள் அளவிற்கு ஓர் அளவு கோலாய் நிற்க அது முன் வந்தது. அவ்வளவே-இக்காஞ்சிப் பெருந்துறைகண், கண்ணுக்கு எட்டுமளவும் பரந்துகிடக்கும் இவ்வெண்மணலைக் காட்டிலும்,' மிக்க பெருநாள், வாழ்க அவ்வேந்தன்!'' என வாழ்த்துரை வழங்கினர்.

சிறந்த வாழ்வாவது, திறந்த வெளியில் வாழ வேண்டிய இழிநிலையின்றி, மலைநிகர் மாடங்களிலும் மனைகளிலும் வாழும் வாழ்வாகும். அதுவே பெருவாழ்வு; எழில் வாழ்வு என்றெல்லாம் போற்றத்தக்கதாம். ஆனல் ஆண்டு முழுவதும், ஆண்டே அடைபட்டுக் கிடப்பார், ஆண்டிற்கு ஒருமுறையாவது, இயற்கை எழில் மிகும் இன்ப இடம் தேடிச் சென்று இருந்து வரவேண்டும், அதில் ஒரு பேரின்பம் காண வேண்டும். ஆனல் அத்தகு வாழ்வு, மாளிகை வாழ்வினராகவும், மனத்துயர் மிகும் வறுமையில் உழல்வார்க்கு வாய்க்காது. மனம் நிறைவுற்று மகிழ்தற்கு வேண்டும் வளமார் வாழ்

வினர்க்கே அது கிட்டும். ஆகவே இதுபோலும் விழாக்காண விரும்பி, மலைச்சாரல், மலர்ச்சோலை போலும் இடம் தேடி அடைந்து, ஓரிரு நாட்கள் வாழும் வாய்ப்புடையார், எழில் மிகு பெருவாழ்வுடையவராவர்; ஆதலின், அவர் வாழ்க்கையைப் **பேரெழில் வாழ்க்கை** எனப் பெயரிட்டு அழைக்கும் பெருமையால், இப்பாடலுக்கு, அத்தொடரே பெயராய் அமைந்துளது.

*8.* ''பைம்பொன் தாமரைப் பாணர்ச் சூட்டி,
ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ, நீர்புக்குக்
கடலொடு உழத்த பனித்துறைப் பரதவ!
ஆண்டுநீர்ப் பெற்றதாரம், ஈண்டு இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதினின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன் எனத் தத்தம்
கைவல் இளையர் நேர்கை நிரைப்ப,
வணங்கிய சாயல், வணங்கா ஆண்மை,
முனைசுடு கனையெரி எரித்தலின் பெரிதும்
இதழ்கவின் அழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்ப! நின்பெயர் வாழியரோ!
நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவின்
பொழில்வதி வேனில் **பேரெழில் வாழ்க்கை**
மேவரு சுற்றமொடு உண்டு இனிது நுகரும்
தீம்புனல் ஆயம் ஆடும்,
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே!''

**துறை: இயல்மொழி வாழ்த்து**
**வண்ணம்: ஒழுகுவண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: நன்னுதல் விறலியர்**

பரதவ! மார்ப! மணலினும் பலவே நின் பெயர் வாழியரோ என வினைமுடிவு செய்க.

இதன் பொருள்:—பைம்பொன்தாமரை பாணர் சூட்டி = *பசிய பொன்னால் பண்ணிய தாமரைமலரைப் பாணர்க்குச்* சூட்டி. ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி = ஒள்ளிய-நுதல் போலும், உறுப்பு நலன் உடையராகிய ஆடல்வல்ல விறலியர்க்குப் பொன்னரி மாலையைப் பூட்டி. கெடலரும் பல்புகழ் நிலைஇ = அழியாதனவும் அளவிறந்தனும் ஆகிய பெரும்புகழை நிலைநாட்டி. நீர்புக்கு = கடல் நீரைக் கடந்து சென்று. கடலொடு உழந்த = கடற்கொள்ளைக் கூட்டத்-*தவராம் கடம்பரோடு கடும் போர் புரிந்த. பனித்துறைப்* பரதவ! குளிர்ந்த துறைகளைக் கொண்ட கடல் நாட்டுக் காவலனே! ஆண்டு = ஆங்கு. நீர்ப்பெற்றதாம் = கடல் நீர் வழியாகப் பெற்ற பெரும்பொருளை. ஈண்டு = இங்கே. இவர் கொள்ளப் பாடற்கு எளிதினின் ஈயும் = இப்பரிசிலருடைய, நின் புகழ் அனைத்தையும் ஒன்று விடாது தன்னுள்ளே கொண்டு கூறமாட்டாக் குறையுடைய பாட்டிற்காக எளிதாக ஈந்துவிடும். கல்லா வாய்மையன் இவன் = கொடைவளத்தின் வகையினைக் கல்லாத வாய்மையுடையவன் இக்காவலன். என = என்ணி. கைவல் இளையர் = பாடும் திறத்திலும் பரிசில் பெறும் திறத்திலும் வல்லவராகிய இசைக்குல இளையர்கள், தத்தம் நேர்கை நிரைப்ப = தங்கள் கைகளை வரிசை வரிசை-யாக நீட்டத்தக்க. வணங்கிய *சாயல் = நனிமிக்க* எளிமைப் பாட்டினையும். வணங்கா ஆண்மை = பகைவர்க்குப் பணியாத *பேராண்மையினையும். முனை சுடு கனைஎரி எரித்தலின்* = பகைவர் ஊர்களைச் சுட்டு அழிக்கும் பெருந்தீ எரித்தமையால். பெரிதும் இதழ் கவின் அழிந்த மாலையொடு = இதழ்கள் தம் அழகைப் பெரிதும் இழந்துவிட்ட மாலையோடு, புலர் சாந்து = பூசிப்புலர்ந்த சந்தனத்தையும். பலபொறி மார்ப = ஆடவர்க்கு

உளவாகும் அழகுப் பொறிகளையும் உடைய மலர் மார்பனே! நின்மலைப் பிறந்து நின் கடல் மண்டும்=உனக்கு உரிய மலையில் பிறந்து, உனக்கு உரிய கடலில் சென்று கலக்கும். மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழாவில்=புதுப்புனல் காரணமாக நிகழும் இப்புனலாட்டுப் பெருவிழாவில். பொழில்வதிவேனில் பேரெழில் வாழ்க்கை=வேனிற் பருவத்தே வந்து பொழிகளில் வாழ்வதாகிய பெரிய எழில் மிக்க வாழ்க்கையுடையவராகிய மேவரு சுற்றமொடு=தம்மை அடைந்து விரும்பி வாழும் சுற்றத்தாரோடு, உண்டு இனிது நுகரும்=இனிய உணவு உண்டும் வேறுபல இன்பங்களையும் நுகரும். ஆயம் ஆடும்= செல்வமக்கள் கூடி ஆடும். தீம்புனல் காஞ்சி அம்பெருந்துறை மணலினும்=இனிய புதுப்புனல் ஓடும் இக்காஞ்சி ஆற்றின் அழகிய பெருந்துறைக்கண் பரந்து கிடக்கும் இம்மணலைக் காட்டிலும். பல=பல ஆண்டுகள். நின் பெயர் வாழியர்= உன் பெயர் நீடு வாழ்வதாகுக!

கொற்றத்தாலும், கொடை வளத்தாலும் சிறந்து விளங்குவான் ஒருவன் புகழ், விரிவாகப் புகழ்ந்து பாடப்பாட, மேலும் விரிந்துகொண்டே போவதல்லது முடிவு காண மாட்டாதும், ஓர் அளவுக்குள் அடைத்துப் பாடஎண்ணின் அச் சொல் எல்லைக்குள் சிலவே கூறப்பெற, பலகூறப்பெற மாட்டாது விடப்பட்டும் போகும் எனப்பாடும் ஒரு மரபும் உண்டு. ''விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும், மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கு ஒருதலை கைம் முற்றல நின்புகழே'' (புறம்:53:6-8) என்பதுகொண்டு நோக்கியவழி, ''கொள்ளாப் பாடல்'' என்ற தொடர், குட்டுவன் புகழ் பாடுவார் பாட்டெல்லைக்குள் அடங்காப் பெருமையுடையது, என்ற பொருள் தருவதாகும்.

இசையொடு கூடியதாகவும் இல்லாமல், காலத்தோடு தொடர்புடையதாகவும் இல்லாமல், எந்த ஒரு பொருள்

பற்றியதாகவும் இல்லாமல் வெறும் ஒலி அளவே உடைய தான நிலையிலும், பெற்றோர்களுக்குப் பேரின்பம் ஊட்டவல்ல தான குழந்தைகளின் மழலை போன்றது புரவலர்களைப் பாராட்டும் இரவலர்களின் பாக்கள் எனப்பாடும் மரபும் உண்டு. ''யாழொடும் ;கொள்ளா; பொழுதொடும் புணரா; பொருள் அறிவாரா; ஆயினும் தந்தையர்க்கு அருள்வந்தன-வால் புதல்வர்தம் மழலை: என் வாய்ச்சொல்லும் அன்ன.'' (புறம்:92:1-4) என்பதுகொண்டு நோக்கியவழி. அத்தொடர், செங்குட்டுவனைப் பாடும் புலவர் பாட்டு, மழலை போன்றது என்ற பொருளும் உணர்த்துவதாகும். இத்தகு பொருள்நய மெல்லாம் தோன்ற, புலவர் பரணர், ''கொள்ளாப்பாடல்'' என்ற தொடரை ஆண்டிருக்கும் புலமை நலம் போற்றற் குரியது.

# 9. செங்கை மறவர்

சேரன் செங்குட்டுவன், நண்பர்கள்பால் பேரன்புடையவன். அவர்க்கு நேரும் ஆக்கக் கேடுகளைத் தனக்கு நேர்ந்தனவாகக் கொள்ளும் நல் உள்ளம் வாய்க்கப் பெற்றவன். அத்தகையான், அறுகை என்பானோர் ஆற்றல் மறவனைத், தன் ஆருயிர் நண்பனாகக் கருதிப் பழகி வந்தான். ஆனால் அறுகை, அத்துணை நல்லவன் அல்லன். அக்காலைத், தமிழகத்தின்மீது படையெடுத்து வந்த மோரியர் என்ற வடநாட்டுப், பேரரசர்களை வென்று துரத்தித், தமிழ்நாட்டுத் தன்மானத்தைக் காத்தவனும், பாண்டியர் படையில் பணிபுரிந்த, கோசர் படைக்குத் தலைவனுமாய், மோகூரில் இருந்து ஆட்சி புரிந்து வந்த பழையன் என்பானோடு பகை கொண்டமையால், அப்பழையனால் வென்று துரத்தப் பட்டான். அத்தோல்வியால், ''வெல்போர் அறுகை'' என அதுகாறும் போற்றப்பட்டு வந்த தன்புகழ் அழிந்தமையால், உளம் நொந்த அறுகை தொலைநாடு சென்று தலைமறைத்துக் கொண்டான். ஆனால், நண்பன் தோல்வி, தன் தோல்வியாகும்; ஆகவே அத்தோல்வியாலாம் பழியைத் துடைப்பது தன்கடன் எனத்துணிந்தான் குட்டுவன்; துணிந்தவாறே போர் தொடுத்தும் விட்டான்.

பழையன் அஃது அறிந்தான். செங்குட்டுவன் பேராற்றல் படைத்தவன்; களம் பல கண்டு வெற்றி பல பெற்றவன் என்ற உண்மைகளை உணர்ந்து அஞ்சிய பழையன், தமிழகத்தின் பிறபகுதிகளை ஆண்டுகொண்டிருந்த சோழபாண்டிய பேரரசர்களையும், சில வேள்குலச் சிற்றரசர்களையும் துணைக்கு அழைத்தான். வடவர் படையை வென்று, தமிழகத்திற்குப் பழையன் புரிந்த பெரிய நன்றியை நினைந்து, அவர்களும் அவனுக்குத் துணை வந்தனர். அவர்களோடு, அவன்

பாண்டியர் படைத்தலைவனுய்ப் பணிபுரிந்திருந்த காலை, அவன் கீழப்பணிபுரிந்திருந்தவர்களும், பகைவரைக் குத்தியும் வெட்டியும் வெற்றி தரும் படைக்கலங்களை, அக்குருதி சொட்டச்சொட்ட எறிந்து, அதனுல் குருதிக் கறைபட்ட கையினராய கொடுமை மிக்கவர்களுமாகிய கோசர்களும், தம் தலைவனைக் காக்க மோகூர்க்கு விரைந்தனர்.

பழையனுக்குத் துணையாய், இத்துணைப்பெரிய அணி பின்னிற்பதை அறிந்தும் செங்குட்டுவன் அஞ்சினுன் அல்லன். அக்கூட்டணியையும் அழிக்கவல்ல பெரிய படையை மோகூர் நோக்கிப்போக்கினுன். காட்டாற்று வெள்ளம்போல் களிறுகள் சென்றன. தம்மீது அமர்ந்து வரும் வீரர்தம் ஆணைக்கு ஏற்பக்காற்றனெ விரைந்தன குதிரைகள். தம்மீது கட்டப்பெற்றிருக்கும் கொடிகள் அலைப்புண்டு ஒளி-காட்டுமாறு தேர்ப்படை உருண்டோடிச் சென்றது. வேல் ஏந்திய வீரர்கூட்டம் வெள்ளம்போல் பறந்து சென்றது. அத்தகைய பெரும்படை மோகூரைத் தாக்கினமையால், கோசவீரர்களின் மார்புப்புண் களிலிருந்து கொப்பளித்து வெளிப்படும் குருதி, பெருமழை பெய்யப், பள்ளம் நோக்கிப்-பாயும் மாரிக் காலத்து வெள்ளம்போல் பாய்ந்து ஓட, அவ்-வெள்ளத்தில், உயிரிழந்து வீழ்ந்த வீரர் உடல்கள் மிதந்து செல்லக், கடும்போர் புரிந்து வெற்றி முரசு முழக்கி வீறுபெற்ருன் வஞ்சிக்காவலன்.

நண்பன் அறுகைக்கு அடாது புரிந்தவன் என்பதால் பழையன் மீதுகொண்ட செங்குட்டுவன் சினம், அப்பழையனை-யும் அவனுக்குத் துணைவந்தாரையும் வெற்றி கொண்டதோடு அமைதி கொண்டிலது. அதனுல், அவனுக்குரிய மோகூர் அரணை அழித்து உள்புகுந்து, ஆங்குள்ள செல்வநலங்களை யெல்லாம் சீரழித்தான். அந்நலம் துய்த்து நல்வாழ்வு வாழ்ந்திருந்தாரையெல்லாம் நலம் இழக்கப் பண்ணினுன்.

இறுதியாகத், தன் காவல் மரமாகக் கொண்டு, தன் கண்ணும் கருத்துமாகப் பழையன் வளர்த்து வந்த, வேப்ப மரத்தை வெட்டி வீழ்த்தி அழித்தான்.

அவ்வெற்றிப் பெருமிதத்தோடு சேரநாடு திரும்புகின்றான் செங்குட்டுவன் என அறிந்து, அந்நாட்டு ஆடவரும் பெண்டிரும், தலைநகர் வஞ்சிமாநகர்க்கு விரைவது கண்டார் புலவர் பரணர். அவ்வெற்றித் திருவுலாவைக்காண, அவர் உள்ளமும் துடித்தது. மேலும், அக்காட்சி நலம் கண்டு தாம் மட்டும் களிப்பது போதாது; தம்மைப்போலும் பிற இரவலர்களும் அதுகண்டு களித்தல் வேண்டும் என்று விரும்பினார். அதனால், பாடிப் பிழைக்கும் பாணர்களையும், அவர் பின் சென்று அவர் பாடலுக்கு ஏற்ப ஆடிப் பிழைக்கும் விறலியர்களையும் அழைத்தார். "வாருங்கள் வஞ்சி மாநகர்க்கு! வந்தால், நீவிரும், நும் பெருங்கிளையும் நெடிது நாள் நன்கு நுகரவல்ல நீள்பெரும் செல்வம் பெறலாம்; ஆகவே, அச் செல்வம் நல்கும் செங்குட்டுவச் செம்மலின் வெற்றித் திருவுலாக் காண, விரைந்து வாருங்கள் வஞ்சி மாநகர்க்கு!" என வருந்தி அழைத்தவாறே வஞ்சி மாநகர்க்கு விரைகின்றார் புலவர் பரணர்.

பகைவர் உடலில் பாய்ந்து குருதிக் கறைபட்ட படைக் கலங்களைப் பற்றிப் பறிப்பதால் செங்குருதி படிந்த கைகளைக் கொண்ட கோசவீரர் என்ற தொடர், அக்கோசர் தம் கொற்றத்தை உணர்த்த, அத்தகைய கோசர் உயிரையும் குடித்தான் என்பதால், குட்டுவன் கொற்றம், குன்றில் இட்ட விளக்கென நின்று விளங்குவதால், இச் செய்யுட்கண் இடம் பெறும் சொற்றொடர் அனைத்தினும், **செங்கை மறவர்** என்ற தொடரே, பெரும் பொருட்சிறப்புப் பொருந்தியதாதல் கண்டு, அதற்கு அதனால் பெயரிட்டு மகிழ்ந்தார்கள் ஆன்றோர்கள்.

9. ''யாமும் சேறுகம்; நீயிரும் வம்மின்;
துயலுங் கோதைத் துளங்கியல் விறலியர்!
கொளைவல் வாழ்க்கை நும்கிளை இனிது உணீஇயர்!
களிறு பரந்துஇயல, கடுமா தாங்க,
ஒளிறுகொடி நுடங்க, தேர்திரிந்து கொட்ப,
எஃகு துரந்து எழுதரும் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து,
மொய்வளம் செருக்கு மொசிந்துவரு மோகூர்,
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம் படர்ந்து ஓடி
மழைநாட் புனலின் அவல்பரந்து ஒழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவண் சிலைப்ப
வளன்அற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவன் கண்டனம் வரற்கே''.

களிறு இயல, மா தாங்க, கொடி நுடங்க, தேர் கொட்ப எழுதரும் தாரினராகிய வேந்தரும் வேளிரும் மொழிந்து செருக்கி மொசிந்து வரும் மோகூரின் நிலைஅதிர மண்டி, மறவர்குருதி ஓடி ஒழுக பிணம் பிறங்க, பாழ்செய்து, முரசம் சிலைப்ப, வளன்அற, பலர்பட, வேம்பு அறுத்த குட்டுவன் கண்டனம்வரற்கு யாமும் சேறுகம், விறலியர்! கிளைஇனிது உணீஇயர், நீயிரும் வம்மின் என வினைமுடிவுசெய்க.

இதன் பொருள்:—களிறு பரந்து இயல = யானைகள் பரந்து செல்ல. கடுமா தாங்க=விரைந்து செல்லும் குதிரைகள், வீரர் ஆணை ஏற்றுச் செல்ல. ஒளிறு கொடி நுடங்க தேர் திரிந்து கொட்ப = ஒளிவீசும் கொடிகள் அசையத் தேர்கள் சுழன்று சுழன்று செல்ல. எஃகு துரந்து எழுதரும் =

வேற்படை ஏந்தி எழுகின்ற. கைகவர் கடுந்தார்=பகைவர் படைகளைவென்று கைக்கொள்ளவல்ல கொடிய முன்னணிப் படையுடையாராகிய. வெல்போர் வேந்தரும் வேளிரும்= வெல்கின்ற போர்க்களமே கண்டவர்களாகிய வேந்தர்களும் வேளிர்களும். ஒன்று மொழிந்து=துணையளிக்கும் உறுதியுரை வழங்கி. மொய்வளம் செருக்கி=பேராண்மையுடைமையால் செருக்கு மிகுந்து. மொசிந்து வரும்=கூடித் திரள நின்ற. மோகூர்=மோகூர்ப்பழையனுடைய. வலம்படுகு ருஉநிலை அதிரமண்டி = வெற்றிச் சிறப்பு வாய்ந்த படைத்திரளின் அணிகெடுமாறு தாக்கி. நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்=பகைவர் குருதியை அளைந்ததனுல் சிவப்பேறிய கையினராகிய கோச வீரர்களின். நிறம்படு குருதி=மார்புப் புண்களிலிருந்து வெளிப்பட்ட குருதி. நிலம் படர்ந்து ஓடி= நிலத்தில் பரவி ஓடி. மழை நாள் புனலில்=மாரிக்காலத்து புதுவெள்ளம் போல். அவல் பரந்து ஒழுக=பள்ளம் நோக்கிப் பாய. படுபிணம் பிறங்க=இறந்து வீழ்ந்த பிணங்கள் மலை போல் குவிய. பாழ்பலசெய்து=எண்ணிலாப் பாழ்களைச் செய்து. படுகண் முரசம் நடுவண் சிலைப்ப=உரைத்த ஒலி எழுப்பும் கண்ணினையுடைய போர் முரசு களத்தின் இடையே இருந்து முழங்க. வளன்அற=மோகூர் வளம் முற்றும் அழியவும். நிகழ்ந்து வாழுநர் பலர்பட = அவ்வரணகத்தே இருந்து வாழ்ந்தார் பலர் மடியவும். கருஞ்சினை விறல்வேம்பு அறுத்த = கரிய கிளைகளையுடையதான, பழையன் காவல் மரமாம் வேம்பினை வெட்டி வீழ்த்திய. பெருஞ்சினக்குட்டுவன் = கடுஞ்சினம்பொருந்திய செங்குட்டுவனை. கண்டனம் வரற்கு = கண்டுவர. யாமும் சேறுகம் = யாமும் செல்-கின்ருேம்; கொளைவல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர் =பாடல் தொழிலால் வாழும் இயல்பினரான நும் சுற்றத்தார் இனிது உண்பாராக; விறலியர் = விறலியர்காள்! நீயிரும் வம்மின்=நீங்களும் வாருங்கள்.

# 10. வெருவரு புனல்தார்

சோணுட்டில் பேரரசு செலுத்திய உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னி, அவன் மகன் கரிகாற்பெருவளத்தான் ஆகிய இருவர் அவைக்களத்தும் அமர்ந்து, அவர்கள் ஆற்றிய அரும்பெரும் செயல்களையெல்லாம் பார்த்துப் பாராட்டும் வாய்ப்பு, புலவர் பரணர்க்குப் பெருக வாய்த்திருந்தமையால், காவிரிக்கு அணையும் கரையும் அமைத்து, அதன் நீரைப் பயன் கொள்ளக்கருதிய கரிகாற்பெருவளத்தான், காவிரிப் பெருக்கின் அளவு எவ்வளவு, அதில் அணை அமைத்தற்குரிய இடம் எதுவாதல் கூடும் என்பனவற்றை அறிந்து கொள்வான் வேண்டி, அக்காவிரி கடலோடு கலக்கும் தன் நாட்டுப், புகார்த்துறை தொடங்கி, அது தோன்றும் குடகு மலை காறும் உள்ள அதன் கரை வழியே சென்று வந்த காலை, அவனோடு உடன் செல்லும் வாய்ப்புப் பெற்றிருந்தமையால்,கன்னிக் காவிரியின் இயல்புகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அறிந்திருந்தார்.

காவிரி தோன்றும் குடகுமலை இடம், பெறும் மேலை மலைத் தொடர்ச்சி, தென்மேற்குப் பருவக்காற்றின் துணையால் பெரு மழை பெய்யும் இடமாம். காடு மண்டிய அம்மலையின் முழைகளில் வாழும், மான் முதலாம் விலங்குகள் பலவும் அஞ்சி நடுங்குமாறு பேரிடிமுழங்கத் தோன்றும் கார்மேகங்கள், சுழன்று சுழன்று வீசும் சூருவளிக் காற்றோடு கலந்து, ஆலங்கட்டிகளோடு கூடிய பெருமழைத் துளிகளைக் கடுவிசையோடு கொட்டும். ஆங்குப் பெய்யும் அப்பெருமழை நீரால், பொங்கிப் புரளும் பெரு வெள்ளமாகப் பாய்ந்தோடிவரும் காவிரி, மலைநாடுகளைக் கடக்கும் வரை, குறுக்கிடும் மலைகளுக்கும் மடுவுகளுக்கும் ஏற்ப, கிழக்காகவும், மேற்காகவும் பலமுறை வளைந்து வளைந்து ஓடி, சோணுட்டில் அடியிட்டதும்,

நேர்கிழக்கு முகமாகவே ஓடிக் கடலோடு கலக்கும். காவிரியின் இப்போக்கையும், எண்ணரும் நோய்களுக்கு இனிய மருந்தாகிப் பயன்படும் பற்பல மரம் செடி, கொடிகள் மண்டிக் கிடக்கும் மலைகளூடும், காடுகளூடும் உருண்டோடி வருவதால், அவற்றின் சாறெலாம் கலக்கப் பெற்றிருக்கும் தன்னுள் மூழ்கி எழும் மக்களின் பிணி போக்கியும், தன் இருகரை நிலங்களுக்கும் நிறைநீர் அளித்து, ஆங்குச் செங்கரும்பும், செந்நெல்லும் போலும் உணவுப் பொருள்களை உளவாக்கி மக்களின் உறுபசி ஒழித்தும், உலகை வாழ்விக்கும் அதன் பெருமையையும், இவ்வாறு தனித்து ஓடியே பயன் தர வல்ல அதனோடு, ஆன்பொருநையும் குடவனாறும் வந்து கலக்கி, அவற்றின் வளங்களும் ஒன்று கூட, வளமார் செல்வங்களை வாரி வழங்கும் முக்கூடற்பெருமையினையும், மலை போலும் அலைகள் எழ, அவ்வலைகளின் தலைகள் வெண்ணுரை தெறித்து வெண்ணிறம் காட்ட, பிறழ்ந்த வழிப் பேரொளி காட்டும் பருமீன் இனங்கள் விளையாட, ஒவெனும் பேரொளி எழப், பெருக்கெடுத்துப் பாயும் அதன் ஓடுங்காட்சியையும் பலமுறை கண்டு களித்துள்ளார்.

மோகூர்ப் பழையனைச் செங்குட்டுவன் வெற்றி கொண்ட செய்தியை,

''நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணனாயினும் கேள் என மொழிந்து
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுறீஇ அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசும் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்''
''வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து

மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி;
... .... ... ... ... .... ... ...
கடுஞ்சின விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்''

எனப் பதிற்றுப் பத்துப் பாடல்களும் [44, 49]

''பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிரும் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி''

என ஐந்தாம் பத்தின் பதிகமும் கூறியிருப்பதோடு

''பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய''

என இளங்கோவடிகளாரும் கூறியுள்ளார்.

[சிலம்பு: 27 : 124-126]

கன்னிக்காவிரியைக் கண்டுகளித்ததால் பெற்ற இன்ப உணர்வு இளமைப்பொலிவு குன்றாதிருக்கச், சேரநாடு புகுந்து, செங்குட்டுவனைக் கண்ணுற்ற புலவர் அவன்பாலும் அக்காவிரிக் காட்சியையே கண்டார். காவிரி, ஓடும் தன் நெறி தவறாது ஓடுவது போல், செங்குட்டுவனும் செங்கோல் முறையுணர்த்தும் நெறியிலிருந்து சிறிதும் பிறழாது நாடு காத்துவந்தான். காவிரி, தன் வெள்ளப்பெருக்கால் வையகத்தை வாழ்விப்பது போலவே, குட்டுவனும் நாட்டு மக்களின் வளம் பெருக்கி வாழ்வளித்து வந்தான். மன்னுயிர் போற்ற பெய் தொழில்புரியும் மழை கண்டு மருள்வது மதியில்

செயலாகவும், மான் முதலாம் சில சிற்றறிவுயிர்கள் அதன் வரவுகண்டு அஞ்சி நடுங்குவதுபோல், செங்குட்டுவன் பேரரசு, பார் உலகை வாழ்விக்க உதவுவதாகவும், அவனோடு நட்பு கொண்டு நாடாளும் நல்லறிவு வாய்க்கப்பெறுத சிற்றரசர்கள், அவன் பெருக்கம் கண்டு கலங்குவராயினர். வழியிடைப் பொருள்களையெல்லாம் வாரிக் கொண்டு வரும் காவிரி, தன் னளவிலேயே வளமுடையதாகவும், முக்கூடற்கண், ஆன் பொருநை, குடவனாறு எனும் வேறு ஆறுகளையும் தோழமை யாக்கொண்டு ஒன்றுகலந்த நிலைக்கண், தன் வளத்தோடு, அவை கொணர்ந்த வளங்களும் தலைமயங்க, அளவிறந்த வளம் உடையதாதல்போல், வேழ வளம்மிக்க சேரநாடு உடைமையால் மலைபடு செல்வத்தால் மாண்புற்ற செங் குட்டுவனும், கடல்பிறக் கோட்டிக் கடம்பரை வென்று, கடல் படு செல்வமும், சோற்றுவளம் செறிந்த சோழநாடு வென்று மருத நிலவளமும் மல்கப் பெற்று, முக்கூடல் காட்சிபோல் கவினுற விளங்கினான்.

காவிரிக் காட்சியைச் செங்குட்டுவன்பால் கண்டுகளித்த புலவர், அவன் நாற்படைக் காட்சியிலும் அக்காவிரிப் பெருக்கின் காட்சியையே கண்டார். கொல்லும் சினம் உடையவாகிக் கொதித்து எழும் அவன் களிற்றுப் படைகள், பொங்கி எழும் பேரலைகளாக, அக்களிறுகள் மீது அமர்ந்து செல்லும் வீரர்கள் ஏந்திய விற்படைகள், ஒளிவிட்டு மின்னுவது, அலைகள் தலைமடங்கத் தெறிக்கும் வெண்ணிற நீர்த்திவலைகளாக, களிற்றுப் படையை அடுத்து வரும் காலாட் படையினர், கேடகம் ஏந்திய கைகள் முன்னாக, அவற்றிற்குப் பின்னாக ஏந்தி வரும் வேற்படைகளின் வெள்-ளொளிகளாலும் முனைகள், கருநீலநிற வெள்ளத்தில் வெள்-ளொளி காட்டிப் பிறழும் மீன்களாக, போர் எழுச்சி குறித்தும், போரில் பெறு வெற்றி குறித்தும் எழுப்பும் போர்ப் பறை

யொலியும், வலம்புரிச் சங்கொலியும், அணைகளையும் கரைகளையும், மதகுகளையும் உடைத்துக் கொண்டு ஓடுங்கால் எழுப்பும் பேரொலிகளாக, அவன் நாற்படைச் செலவு, காவிரிப் பெருக்கின் செலவாகவே புலப்பட்டது புலவர் பரணர்க்கு. கண்டார் அஞ்சும் காட்சியுடையவாய்ச் செல்லும் அந்நாற் படை, 'மலையரண் உடையேம்; கடல் அரண் உடையேம்; காட்டரண் உடையேம்; ஆதலின் எம்மை வென்று கடப்பாரும் உளரோ? "எனத் தருக்கித் திரியும் பகைவர்களின் பற்றற்கரியஅப்பேரரண்கள் அனைத்தையும் அறவே அழித்து, அவரகத்தே பொங்கி எழுந்த பகையாகிய பெருந்தீயை இல்லாமற்பண்ணி விடுவதால், அவியாப் பெருநெருப்பையும் அவித்துப் போக்கவல்ல" பெருவெள்ளத்தோடு, தொழிலாலும் ஒருமைப்பாடுடையதாதல் அறிந்து பாராட்டினார்.

செங்குட்டுவன் நாற்படைச் செல்வத்தின்பால் சென்ற சிந்தையுடையராய், அப்படை பகைநாடு புகுந்து பாடி கொள்ளும் பாசறை சிலவற்றிற்கும் சென்றிருந்தமையால், புலவர்க்குச், செங்குட்டுவனின் பாசறை வாழ்க்கைநிலையினை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. "பற்றற்கரிய பேரரண்களையும் பாழாக்கவல்ல, வெள்ளம்போல் பரந்த பெரும்படையுடையேன் என்பதை அறிந்தும், என் அடிபணிய மறுக்கும் பகைவரும் உளரோ?" என்ற சினம் மிகுதியால், அவரை வென்று அடக்கும்வரை வாள்கைவிடேன் என வஞ்சினம் வழங்கிக், காலமெல்லாம் பாசறை வாழ்க்கையே மேற்கொண்டிருக்கும் அவன், வெற்றிமுரசும், வலம்புரிச் சங்கும், போர்ப்பறையும் ஓயாது முழங்கி, ஆங்குள்ளாரை உறங்கவிடாவாக, அவை ஒலிஅடங்கும் சிறுபொழுது மட்டுமே, சிறுதுயில் கொள்ள நேரும். அச்சிறுதுயில் பெறும் வாய்ப்பு, செங்குட்டுவன் படைவீரர்க்காவது வாய்க்கும்; செங்குட்டுவனுக்கு அதுதானும் வாய்க்காது. ஒலிஅவிந்து

அமைதிநிலவும் அச்சிறு நாழிகையே, ஆக்கம் குறித்த நல்லாறுகளை ஆய்ந்து காண்பதற்கு ஏற்புடைத்தாதல் அறிந்து, மறுநாட்காலை நடைபெறப்போகும் போரில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளை எண்ணித் துணிவன் ஆதலின், அவன் அச்சிறு துயிலும் கொள்ளான்.

செங்குட்டுவனின் இச்செருவேட்கையினையும், அவ்வேட்கை மிகுதியால் சிறுதுயிலும் கொள்ள மறுக்கும் அவன் மனநிலையினையும் அறிந்த புலவர் பரணர்க்குப், பகையெலாம் பணிந்துவிட்டதாகப், போர் மேற்கொண்டு சென்று பாசறைக்கண் வாழவேண்டிய இன்றியமையாமை இல்லாது போகும், காலத்தில் அரண்மனைக்கண் அவன் வாழ்நாள் எவ்வாறு கழியுமோ என்ற ஐயம் எழலாயிற்று. அக்காலை அரண்மனை வாழ்வார் சிலர், ''புலவர்ப் பெருந்தகையீர்! செங்குட்டுவன் மனம்கவர்ந்த மங்கையர் பலராவர். மான்மதச் சாந்து முதலாம் மணம்கமழ் சந்தனக் குழம்புகள் பூசியும், கண்களில் கருமையும், கைகளில் செம்பஞ்சுக் குழம்பும் தீட்டிக்கொண்டும், வகைவகையான வனப்புடையராய்த் தங்களை ஒப்பனை செய்து கொண்டு, வரிவண்டுகள் விடாதுவந்து மொய்க்குமளவு புதுமைநலம் குலையா மலர் மாலை அணிந்து, அழகோவியங்களாய் உலவும் அம்மகளிர், பரந்து அகன்ற அவன் மார்பின்மீது கொள்ளும் காதல், அம்மம்ம! அளந்து கூறும் அளவுடைத்தன்று. அம்மகளிர் அளிக்கும் இன்பம் நுகரும் அந்தப்புர வாழ்வின்ப நினவால், செங்குட்டுவன் வாழ்நாளின் பெரும்பகுதி எளிதாகக் கழிந்து விடும்; ஆகவே, அரண்மனை வாழ்க்கையில் அவனுக்குப் பொழுது போகாது எனல்பொருந்தாது'' என்றனர். ஆனால், செங்குட்டுவனோடு ஈர்உடலும் ஓர்உயிருமாக இரண்டறக் கலந்து பழகி, அவன் பண்பெலாம் அறிவார்க்கு, அரண்மனை வாசிகள் கூறியதில் உண்மை இல்லை என்பது தெரியும்,

செங்குட்டுவன், மகளிர்தரும் இன்பத்தை வெறுப்பவன் அல்லன். அதனை ஆரநுகர்ந்து; அந்நுகர்ச்சி அயர்ச்சியால், உறங்காத் தன்கண்களும் தம்மைமறந்து உறங்குமளவு அதில் விருப்பம் உடையவன் தான். ஆனால், ''மனைவிழை-வார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது'' என்ற உலகியல் உணர்வு வரப்பெற்றவன் அவன். மகளிர் தரும் இன்பத்தைக் காட்டிலும், போரில்பெற-லாகும் வெற்றிப்புகழ்தரும் இன்பத்தையே அவன் உள்ளம் பெரிதும் உவக்கும். அவ்வின்பத்திலேயே பழகிவிட்டவை அவன் கண்கள். அவை, உரிமை மகளிரின் அலைஅலையாய்ச் புரளும் கூந்தல் அணையில் கிடந்து உறங்கிப் பெறும் இன்ப வாழ்வை நெடிது நுகர நினையா. ஆகவே, அரண்மனையில் பலநாள் வாழநேரின், அதை அவனால் தாங்கிக் கொள்வது இயலாது என்பதை அறிந்தவர் புலவர். அதனால், பாசறை வாழ்க்கையிலேயே வாழ்ந்து பழகிவிட்ட செங்குட்டுவனை அரண்மனையில் காண நேர்ந்ததும், ''குட்டுவ! பாசறை வாழ்க்கையின் இடையிடையே, இவண் வந்து தங்கும் இச்சிறு பொழுதிலும், மகளிர்தரும் இன்ப உணர்வு உளவாகவும், உறங்க மறுக்கும் உன் கண்கள், பகையொழிந்த பேரரசு அமைந்து விட்டமையால், போர்க்களம் புகவேண்டா நிலை பெற்று விடும். உன் வாழ்நாளின் இறுதிக்காலத்துப் பெருநாட்களை, எவ்வாறு உறங்கிக் கழிக்க அறியுமோ அறியேம்!'' என வியந்து வினவுவாராயினர்.

பகைவர்கள் அஞ்ச வேண்டுவது, களிறு முதலாம் அவன் நாற்படையே என, அவன் பாசறைப் பெருமை பாடுவதே புலவர் கருத்தாம் என்றாலும், அவ்வாறு பாடுவதால் பொருள் சிறக்காது ஆதலின், வேந்தன் படைகண்ட வழிக் கொள்ளும் அச்சம், வெள்ளப் பெருக்கம் கண்டுகொள்ளும் அச்சத்தினுள் கொடிதுஅன்று எனக் கொள்வதே உலகியலாம் எனும்

உணர்வால், அஞ்சத்தக்க புனலினைக்கூறி, அப்புனல்போலும் நாற்படை என்று கூறிய வழியே அந்நாற்படையின் கடுமை நனிமிகத் தெளிவாகப் புலனாம் எனஉணர்ந்த, புலமை நலத்தால் தோன்றியதான **வெருவரு புனல்தார்** என்ற புலமைநலம் சொட்டும் அத்தொடரே, இப்பாவின் பெயராகிப் பெருமையுற்றது,

**10.** ''மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்,
கான்மயங்கு கதழ்உறை ஆலியொடு சிதறிக்,
கரும்பு அமல் கழனிய நாடுவளம் பொழிய,
வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇச்,
செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர்நிறைக்
காவிரி அன்றியும், பூவிரி புனல்ஒரு
மூன்றுடன் கூடிய கூடல் அனையை;
கொல் களிற்று உரவுத்திரை பிறழ, வல்வில் பிசிரப்
புரைத்தோல் வரைப்பின் எஃகுமீன் அவிர் வர,
விரவுப்பணை முழங்கொலி வெரீஇய வேந்தர்க்கு
அரணமாகிய **வெருவரு புனல்தார்,**
கள்மிசையவ்வும், கடலவும் பிறவும்
அருப்பம் அமைஇய அமர்கடந்து உருத்த,
ஆண்மலி மருங்கின் நாடு அகம்படுத்து,
நல்லிசை நனந்தலை இரிய, ஒன்னார்
உருப்பற நிரப்பினை ஆதலின், சாந்துபுலர்பு
வண்ணம் நீவி, வகைவனப் புற்ற
வரிஞிமிறு இமிரும் மார்புபிணி மகளிர்
விரிமென் கூந்தல் மெல்லணை வதிந்து,
கொல்பிணி திருகிய மார்புகவர் முயக்கத்துப்
பொழுது கொள் மரபின் மென்பிணி அவிழ,
எவன் பல கழியுமோ? பெரும! பன்னாள்
பகை வெம்மையின் பாசறை மரீஇப்

பாடுஅரிது இயைந்த சிறுதுயில் இயலாது
கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்
பீடுகெழு செல்வம் மரீஇய கண்ணே.''

**துறை : வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணமும், சொற்சீர்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : வெருவரு புனல்தார்**

பெரும! கூடல் அனையை (1-7) வெருவருபுனல்தார்— அமர்கடந்து, உருத்தநாடு அகப்படுத்து, ஒன்னார் உருப்பற நிரப்பினை ஆதலின் (8-16) பன்னாள் பாசறை மரீஇ, சிறு துயில் ஈயலாது. பீடுகெழு செல்வம் மரீஇய கண், [22-26] மகளிர் கூந்தல் மெல்லணைவதிந்து, முயக்கத்து, மென்பிணி அவிழ, எவன்பல கழியுமோ (16-22) எனக் கூட்டுக.

இதன் பொருள் :- பெரும! = பெருமானே, மாமலை = பெரிய மலையிடத்தே, முழக்கின் = மழை மேகத்தின் முழக்கத்தினால். மான்கணம் பனிப்ப = மான் முதலாம் விலங்குக் கூட்டம் ஒடுங்குமாறு, கால் மயங்கு கதழ் உறை = பெருங் காற்று விரைந்து வீசுவதால், விரைந்து பொழியும் மழை. ஆலியொடு சிதறி = பனிக்கட்டிகளோடு பெய்ய. கரும்பு அமல் கழனிய நாடு வளம் பொழிய = கரும்புகள் மலிந்த கழனிகளையுடையவாகிய நாடு வளம் சிறக்க = வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇய = வளம் பொருந்திய சிறப்பினை உடையவாகிய உலகைப் புரந்து. செங்குணக்கு ஒழுகும் = நேர்கிழக்காக ஓடும். கலுழ் மலிர் நிறை காவிரி அன்றியும்= கலங்கலாகிய நிறைந்த வெள்ளத்தையுடைய காவிரி ஆற்றை ஒப்பதே அல்லாமல். பூவிரி புனல் ஒருமூன்றுடன் கூடிய கூடல் அனையை = பல்வேறு பூக்கள்படிந்த வெள்ளநீரை-

யுடையவாகிய காவிரி, ஆன்பொருநை, குடவன் ஆறு என்ற ஒரு மூன்று ஆறுகள் ஒன்று கலந்த திருமுக்கூடலையும் ஒப்பாவாய். கொல்களிற்றி உரவுத்திறை பிறழ=கொல்லும் போர்க் களிறுகளாகிய பெரிய அலைகள் அசைந்து வர. வல்வில் பிசிர = வலிய விற்படைகளாகிய வெண்ணுரை தெறிக்க. புரைதோல் வரைப்பின் = பெரிய கேடகங்களுக்கு மேலாகத் தோன்றி. எஃகு மீன் அவிர்வர = வேற்படை களாகிய மீன்கள் ஒளிவிட. விரவுப்பணை முழங்கொலி வெரீஇய வேந்தர்க்கு = போர்ப்பறை முதலாம் பல்வேறு பறைகளோடு கலந்து முழங்கும் முரசொலி கேட்டு அஞ்சி அடி பணிந்த அரசர்க்கு. அரணமாகிய வெருவரு புனல்தார் = அரணாய் அமைந்து காக்க வல்லதானதும், பணிய மறுக்கும் பகைவர்க்கு அச்சம் தருவதுமாகிய தூசிப் படையாகிய பெரு வெள்ளம். கன்மிசையவ்வும் = மலைமீதும். கடலவும் = கடலிடையும். பிறவும் = வேறு பிற இடங்களிலும் உள்ளன வாகிய. அருப்பம் அமைஇய = பகையரசர்க்குரிய அரண் களிடத்தே எழுந்தனவாகிய. அமர்கடந்து = போர்களை வென்று. உருத்த ஆண்மலி மருங்கின் நாடு அகப்படுத்து = அஞ்சத்தக்க ஆண்மையுடையவராகிய வீரர்கள் மலிந்த இடங் களையுடையவாகிய பகைநாடுகளைக் கைக்கொண்டு, நல்லிசை = அப் பகைவர்கள் அன்றுவரை பெற்றிருந்த பெரிய புகழ். நனந்தலை இரிய = இவ்வுலகை விட்டு அறவே அழிந்து போகுமாறு. ஒன்னார் = அப் பகைவர்களின். உருப்பு = பகையுணர்வாகிய பெரு நெருப்பு. அற நிரப்பினை ஆதலின் = அறவே அவிந்து இல்லையாகச்செய்து விட்டாய் ஆதலின். பகை வெம்மையின் = பகைவர் மீது கொண்ட பெருஞ் சினத்தால். பன்னாள் பாசறை மரீஇ = பல நாட்கள் பாசறையிலேயே தங்கி. பாடு அரிது இயைந்த சிறுதுயில் இயலாது = உறங்குதல் அரிதே வந்து வாய்க்க, அதனால் கொண்ட சிறுதுயிலும் இல்லாதுபோக. கோடு முழங்கு இமிழ்

இசை எழுப்பும் = வெற்றி குறித்து முழங்கும் வலம்புரிச் சங்கு ஒலிக்கும், இமிழ் எனும் ஓசை எழுப்பும். பீடுகெழு செல்வம் மரீஇய கண் = பெருமை பொருந்தியதான பாசறை வாழ்க்கையாகிய அப் பெருஞ் செல்வத்தில் பழகிவிட்ட உன் கண்கள். சாந்து புலர்பு = சந்தனக் குழம்பைப் புலரப் புலரப் பூசிக் கொண்டும். வண்ணம் நீவி = திலகம், மை, செம்பஞ்சுக் குழம்பு போலும் வண்ணங்களை, முறையே, நுதல், கண், கை முதலியவற்றில் பூசிக்கொண்டும். வகை வனப்பற்ற = வகை வகையாக அழகு செய்து கொண்டவரும். விரிஞ்சிமிறு இமிரும் = தாம் அணிந்திருக்கும் மலர் மாலைகளிலிருந்து ஒழுகும் தேன் உண்பான் விரும்பி, வரி வண்டுகள் வந்து தம்மை விடாது மொய்க்கப் பெற்றவரும் ஆகிய. மார்பு பிணி மகளிர் = உன் மார்பின் மாண்பு கண்டு உன்பால் காதல் கொண்ட மகளிரின், விரிமென் கூந்தல் மெல் அணைவதிந்து, அடர்ந்து விரிந்த மெல்லிய கூந்தலாகிய மெத்தென்ற படுக்கையில் கிடந்து, கொல் பிணி திருகிய மார்புகவர் முயக் கத்து = கொல்வது போலும் கொடிய துன்பம் தரவல்லதான, காம வேட்கை மிகுவதால், இருவர் மார்பும் ஒன்று கலக்கதான அணைப்பால்; பொழுது கொள் மரபின் = இரவின் காலத்தைப் பயன் கொள்ளும் இயல்புடையதான. மென் பிணி = அணைப்பின் இறுதியில், அம் முயக்க அசதியால் உண்டாகும் சிறுதுயிலும். அவிழ = கலைந்து போக, பல = வாழ்நாள் பலவும். எவன் கழியுமோ? = எவ்வாறு கழியுமோ யாம் அறியேம். எ. று.

துரை அச்சகம், காஞ்சிபுரம்.